தமிழ்க் கடல் வாசகம்

நான்காம் புத்தகம்

சென்னை
இராஜதானிக் கலாசாலை மாஜித் தமிழாசிரியரும்
'தமிழ்க் கடல்' வெளியீட்டுப் பதிப்பாசிரியரும் ஆகிய
கா. நமச்சிவாய முதலியார்
எழுதியது

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை :
தமிழ்க் கடல் ஆபீஸ்
சாந்தோம், மயிலை

பதிவு செய்தது] 1933 [விலை 10 அணா

Printed at
The 'Tamil Kadal' Press,
Madras.

முன்னுரை

இவ் வாசக புத்தகத்தில் வந்துள்ள பாடங்கள் அச்செழுத்து முதலிய அனைத்தும் புதியவை. வகுப்பிற்கு ஏற்க, உரை நடை நன்கு அமைந்துள்ளது.

இப்புத்தகம், S. S. L. C. பரீட்சைக்குத் துரைத்தனத்தார் தொகுத்து வெளியிடும் முறையாகவே அமைக்கப்பட்டுள்ளது; இதைப்பயிலும் மாணவர் மேல்வகுப்புக்குச் செல்லும் போது தமிழ்ப்பாடங்களைப் பெரி-தும் விரும்பிப் போற்றுதற்கு உதவியாகும். வசன பாடங்களிற் சிலவற்றை அன்புடன் எழுதியுதவிய என் நண்பர்களுக்குப் பெரிதுங் கடமைப்பட்டுள்ளேன்.

வசன பாடத்திலும் செய்யுட் பாடத்-திலும் வந்துள்ள அருஞ்சொற்களுக்குத் தக்க குறிப்புரை இற்றில் சேர்க்கப்பட்டுள்ளது; அது மாணக்கருக்குப் பெரிதும் பயன்படுவதாகும். வசனத்தில் வந்துள்ள சொற்களை அகராதி முறைப்படி அமைத்திருத்தலின், மாணக்கர் அகராதி பார்க்கும் வழக்கமும் அடைவர்.

‘கடலகம்’
சாந்தோம், சென்னை.

கா. நம.

அடக்கம்

தமிழ்க் கடல் வாசகம்

நான்காம் புத்தகம்

1 - கடவுள் வாழ்த்து

தேவாரம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதி மிக்க
உருவேயென் உறவேயென் ஊனே ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் துறையுறையும் அமரர் ஏறே. (1)

எத்திசையும் வானவர்கள் தொழநின் றானை
ஏறூர்ந்த பெம்மானை எம்மான் என்று
பத்தனாய்ப் பணிந்தடியேன் றன்னைப் பன்னாள்
பாமாலை பாடப் பயில்வித் தானை
முத்தினையென் மணியைமா மாணிக் கத்தை [னைச்
முளைத்தெழுந்த செம்பவளக் கொழுந்தொப்பா
சித்தனையென் திருமுதுகுன் றுடையான் றன்னைத்
தீவினையேன் அறியாதே திகைத்த வாறே. (2)

திவ்யப் பிரபந்தம்

திருத்த னைத்திசை நான்முகன் றந்தையைத்
  தேவ தேவனை மூவரில் முன்னிய
விருத்த னைவிளங் குஞ்சுடர்ச் சோதியை
  விண்ணை மண்ணினைக் கண்ணுதல் கூடிய
அருத்த னையரி யைப்பரி கீறிய
  அப்ப னையப்பில் ஆரமு லாய்நின்ற
கருத்த னைக்களி வண்டறை யும்பொழில்
  கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. (3)

எத்தனையும் வான்மறந்த
    காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே
    பார்த்திருக்கும் மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும்
    விற்றுவக்கோட் டம்மாஎன்
சித்தமிக உன்பாலே
    வைப்பென் அடியேனே. (4)

சரசுவதி அந்தாதி

மயிலே மடப்பிடி யேகொடி
    யேயிள மான்பிணையே
குயிலே பசுங்கிளி யேயன்ன
    மேமனக் கூரிருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின்
    னேயினி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவேன்
    உனதுபொற் பாதங்களே. (5)

திருப்புகழ்

தனன தான தானன தனன தான தானன
தனன தான தானன — தனதான.

அதல சேட னாராட அகில மேரு மீதாட
அபின காளி தானட அவளோடன்
றதிர வீசி வாதாடு விடையி லேறு வாராட
அருகு பூத வேதாள மவையாட
மதுர வாணி தானட மலரில் வேத னாராட
மருவு வானு ளோராட மதியாட
வனச மாமி யாராட நெடிய மாம னாராட
மயிலு மாட நீயாடி வரவேணும்
கதைவி டாத தோள்வீமனெதிர்கொள்வாளியால்நீடு
கருத லார்கள் மாசேனை பொடியாக
கதறு காலி போய்மீள விசயனேறு தேர்மீது
கனக வேத கோடூதி அலைமோதும்
உததி மீதி லேசாயு முலக மூடு சீபாத
உவண மூர்தி மாமாயன் மருகோனே
உதய தாம மார்பான ப்ரவுட தேவ மாராஜன்
உளமு மாட வாழ்தேவர் பெருமாளே.

கோடாத வேதனுக் கியான்செய்த
குற்றமென் குன்றெறிந்த
தாடாள னேதென் தணிகைக்
குமரநின் தண்டையந்தாள்
சூடாத சென்னியும் நாடாத
கண்ணும் தொழாதகையும்
பாடாத நாவும் எனக்கே
தெரிந்து படைத்தனனே. (7)

அருட்பா

ஓடுகின்றனன் கதிரவன் அவன்பின்
ஓடுகின்றன ஒவ்வொரு நாளாய்
வீடுகின்றன என்செய்வம் இனியவ்
வெய்ய கூற்றுவன் வெகுண்டிடில் என்றே
வாடுகின்றனை அஞ்சலை நெஞ்சே
மார்க்கண் டேயர்தம் மாண்பறிந் திலையோ
நாடுகின்றவர் நாதன்றன் நாமம்
நமச்சி வாயங்காண் நாம்பெறுந் துணையே. (8)

நீதி நூல்

தீட்டுவோன் இன்றி யாமோ
சித்திரம் திகழ்பொற் பாவை
ஆட்டுவோன் இன்றித் தானே
ஆடுமோ திவவி யாழின்
மீட்டுவோன் இன்றிக் கீதம்
விளையுமோ சராச ரங்கள்
நாட்டுவோன் ஒருவ னின்றி
நன்கமைந் தொழுகுங் கொல்லோ. (9)

II - அறவுரை

புற நானூறு 3430

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே. (1)

நாளன்று போகிப் புள்ளிடை தட்பப்
பதனன்று புக்குத் திறனன்று மொழியினும்
வறிது பெயர்குவ ரல்லர் நெறிகொளப்
பாடான் றிரங்கும் அருவிப்
பீடுகெழு மலையற் பாடி யோரே. (2)

ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசில் மாக்கள்
வரிசை அறிதலோ அரிதே பெரிதும்
ஈதல் எளிதே மாவண் தோன்றல்
அதுநற் கறிந்தனை ஆயின்
பொதுநோக் கொழிமதி புலவர் மாட்டே. (3)

இன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவா ளருஞ்சம முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. (4)

திரிகடுகம்

கணக்காயர் இல்லாத ஊரும் பிணக்கறுக்கும்
மூத்தோரை இல்லா அவைக்களனும் — பாத்துண்
தன்மையி லாளர் அயலிருப்பும் இம்மூன்றும் [ணுங்
நன்மை பயத்தல் இல. (1)

கோலஞ்சி வாழுங் குடியும் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும் — வேலின்
கடைமணிபோல் திண்ணியான் காப்பும் இம்மூன்றும்
படைவேந்தன் பற்று விடல். (2)

வைததனை இன்சொல்லாக் கொள்வானும் நெய்பெய்
சோறென்று கூழை மதிப்பானும் — ஊறிய [த
கைப்பதனைக் கட்டியென் றுண்பானும் இம்மூவர்
மெய்ப்பொருள் கண்டுவாழ் வார். (3)

கண்ணுக் கணிகலம் கண்ணோட்டம் காமுற்ற
பெண்ணுக் கணிகலம் நாணுடைமை — நண்ணும்
மறுமைக் கணிகலம் கல்வி இம் மூன்றும்
குறியுடையார் கண்ணே உள. (4)

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்
செய்வகை செய்வான் தவசி — கொடிதொரீஇ [டன
நல்லவை செய்வான் அரசன் இவர்மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை. (5)

தாளாளன் என்பான் கடன்படா வாழ்பவன்
வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்
கோளாளன் என்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்தல் இனிது. (6)

நான்மணிக் கடிகை

எள்ளற்க என்றும் எளியாரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கை மேலதா — உள்சுடி
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க [னும்
கூறல் லவற்றை விரைந்து. (1)

கன்றாமை வேண்டும் கடிய பிறர்செய்த
நன்றியைக் கொல்லாக் கொளல்வேண்டும்-என்றும்
விடல்வேண்டும் தங்கண் வெகுளி அடல்வேண்டும்
ஆக்கம் சிதைக்கும் வினை. (2)

இன்னாமை வேண்டின் இரவெழுக இந்நிலத்து
மன்னுதல் வேண்டின் இசைநடுக—தன்னொடு
செல்வது வேண்டின் அறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல். (3)

மனைக்குப்பாழ் வாணுதல் இன்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை இருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரையின்மைதனக்குப்பாழ்
கற்றறி வில்லா உடம்பு. (4)

திருவின் திறலுடைய தில்லை ஒருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை — எற்றுள்ளும்
இன்மையின் இன்னாத தில்லையில் லென்னாத
வன்மையின் வன்பாட்ட தில். (5)

கண்ணிற் சிறந்த உறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை கல்வியின்
ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை இன்றாளின்
ஏன்ன கடவுளும் இல். (6)

சிறுபஞ்ச மூலம்

பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே யாகும்-அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவியிற் குய்த்து. (1)

பிழைத்தல் பொறுத்தல் பெருமை சிறுமை
இழைத்ததீங் கெண்ணி யிருத்தல் — இழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. (2)

வருவாய்க்குத் தக்க வழக்கறிந்து சுற்றம்
வெருவாமை வீழ்ந்துவிருந் தோம்பித்—திருவாக்குந்
தெய்வதையும் எஞ்ஞான்றுந் தேற்ற வழிபாடு
செய்வதே பெண்டிர் சிறப்பு. (3)

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும்—சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயரும்
ஓவா துரைக்கும் உலகு. (4)

பொச்சாப்புக் கேடு பொருட்செருக்குத் தான்கேடு
முற்றாமை கேடு முரண்கேடு — தெற்றத்
தொழின்மகன் றன்னொடு மாறாயின் என்றும்
உழுமகற்குக் கேடின் உரை.

பூத்தாலுங் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார் — பாத்தில்
புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு. (6)

ஏலாதி

சிதையுரையான் செற்றம் உரையான்சீ றில்லான்
இயல்புரையான் இனம் உரையான் - நசைவார்க்குக்
கூடுவ நீவானைக் கொவ்வைபோற் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து. (1)

துறந்தார் துறவாதார் துப்பில்லார் தோன்றா
திறந்தார்இ டற்றார் இனையர் — சிறந்தவர்க்குப்
பண்ணாருஞ் சொல்லாய் பழியிலூண் பாற்படுத்தான்
மண்ணாளும் மன்னனும் மற்று. (2)

பொய்யான் புலாலொடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியா ரினஞ்சேரான் — வையான்
கயலியலுண் கண்ணாய் கருதுங்கால் என்றும்
அயல அயலவர் நூல். (3)

காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார் — சாலவும்
ஆழப் படும்ஊண் அமைத்தார் இமையவரால்
வீழப் படுவார் விரைந்து. (4)

இடர்தீர்த்தல் எள்ளாமை கீழினஞ்சே ராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் — நடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ் சொற்காணிற் கல்வியின்கண்
விண்டவர்நூல் வேண்டா விடும். (5)

கற்றாரைக் கற்ற துணரார் எனமதியார்
உற்றாரை யன்னணம் ஓராமல் — அற்றார்கட்
குண்டி உறையுள் உடுக்கை இவையீந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று. (6)

திருக்குறள்

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார். (1)

தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை. (2)

அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு. (3)

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று. (4)

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று. (5)

நன்றே தரினும் நடுவிகந்தாம் ஆக்கத்தை
அன்றே ஒழிய விடல். (6)

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. (7)

ஒழுக்கம் உடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல். (8)

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். (9)

கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம்
உண்பதூஉம் இன்றிக் கெடும். (10)

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. (11)

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. (12)

இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (13)

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு. (14)

அறிவுடையார் எல்லாம் உடையர் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர். (15)

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்
கினத்தியல்ப தாகும் அறிவு. (16)

வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
கோனோக்கி வாழும் குடி. (17)

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். (18)

உடுக்கை யிழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. (19)

மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின். (20)

நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவலம் இலர். (21)

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர். (22)

III - தனிப் பாடல்

முக்காலுக் கேகாமுன் முன்னரையில் வீழாமுன்
அக்கா லரைக்கால்கண் டஞ்சாமுன் — விக்கி
இருமாமுன் மாகாணிக் கேகாமுன் கச்சி
ஒருமாவின் கீழரையின் றோது. (1)

பண்புளருக் கோர்பறவை பாவத்திற் கோரிலக்கம்
நண்ணிலரைக் கண்டக்கால் நாற்காலி—திண்புவியை
ஆள்வார் மதுரை யழகியசொக் கர்க்கரவம்
நீள்வா கனம்நன் னிலம். (2)

கம்பமத கடகளிற்றான் தில்லை வாழுங்
கணபதிதன் பெருவயிற்றைக் கண்டு வாடி
உம்பரெலாம் விழித்திருந்தார் அயில்வேற் செங்கை
உடையவறு முகவனுங்கண் ணீரா றானான்
பம்புசுடர்க் கண்ணனுமோ தஞ்சுண் டான்மால்
பயமடைந்தான் உமையுமுடல் பாதி யானாள்
அம்புவியைப் படைத்திடுவ தவம தேயென்
றயனும் அன்னம் இறங்காமல் அலைகின் றானே.

நாட்டுக்குள் ஆட்டுக்கு நாலுகால் ஐயாநின்
ஆட்டுக் கிரண்டுகா லானாலும்—நாட்டமுள்ள
பேர்மேவு தில்லைச் சிவனேயவ் வாட்டைவிட்டுப்
போமோசொல் லாயப் புலி. (4)

சொல்லாம லேபெரியர் சொல்லிச்செய் வார்சிறியர்
சொல்லியுஞ் செய்யார் கயவரே—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறுவமை நாடில்
பலாமாவைப் பாதிரியைப் பார். (5)

வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து தெண்ணீர் வயற்றொண்
நன்னாடு சான்றோ ருடைத்து. [டை

கடல்கிழக்குத் தெற்குக் கரைபொருவெள் ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம்—வடதிசையில்
ஏணாட்டுப் பெண்ணை இருபத்து நாற்காதம்
சோணாட்டுக் கெல்லையெனச் சொல். (7)

வெள்ளா றதுவடக்காம் மேற்குப் பெருவழியாம்
தெள்ளார் புனற்கன்னி தெற்காகும்—உள்ளார
ஆண்ட கடல்கிழக்காம் ஐம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி. (8)

வடக்குத் திசைபழனி வான்கீழ்தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம்—கடற்கரையின்
ஓரமோ தெற்காகும் உள்ளெண்ப தின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு. (9)

மேற்குப் பவளமலை வேங்கடம் நேர்வடக்காம்
ஆர்க்கும் உவரி அணிகிழக்கு—பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருப தின்காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு. (10)

IV - சிறு நூல்

திருவேங்கட மாலை

ஆழ்வார்கள் செந்தமிழை ஆதரித்த வேங்கடமென்
தாழ்வான புன்சொல்லுந் தாங்குமால்—ஏழ்பாரும்
வெல்லுங் கதிர்மணியும் வெம்பரலும் செஞ்சாந்தும்
புல்லும் பொறுக்குமலையே போல். (1)

நாலு திசைமுகமும் நண்ணுதலால் ஒண்கமல
மேலுறலால் வேதாவாம் வேங்கடமே—சாலுறையும்
மண்மயக்கம் தேற்றுவித்தான் மாற்றுகல்போல் ஆரி
உண்மயக்கந் தேற்றுவித்தான் ஊர். [யனல்

எப்பூதலமும் இறைஞ்சித் திசைநோக்கி
மெய்ப்பூசனைபுரியும் வேங்கடமே—கொப்பூழ்
இலகுமுண்ட கந்தரத்தான் இன்றளிக்கும் இரேழ்
உலகுமுண்ட கந்தரத்தான் ஊர். (3)

வாடப் பசித்த வரியுழுவை வாலாட்டி [துக்
மேடத்தைப் பார்த்துறக்கும் வேங்கடமே—கூடக்
கம்பவள மாவென்றான் காசினிக்கும் வெண்ணெய்க்
செம்பவள மாவென்றான் சேர்பு. [கும்

மண்மூலம் தாவென்று மந்திகடு வற்குரைப்ப
விண்மூலம் கேட்டேங்கும் வேங்கடமே—ஒண்மூல
வேதந் திருக்குழையார் வெய்யோன் இரண்டனைய
சீதந் திருக்குழையார் சேர்பு. (5)

கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி

சீரார் கமலச் சேவடியென்
　　சிந்தை யிருத்தி உனதுதிருப்
பேரா யிரமும் எடுத்தோதிப்
　　பெம்மான் கருவை எம்மானென்
றாரா வமுதம் உண்டவர்போல்
　　அனந்தா னந்தத் தகம்நெகிழ
ஆரா இன்பம் அறிவித்தாய்
　　அறியேன் இதற்கோர் வரலாறே. (1)

முன்னைப் பிறவித் தவப்பயனோ
　　முழுதும் அறியா மூடனிவன்
என்னக் கருத்தில் எண்ணியோ
　　யாதோ அறியேன் இரவுபகல்
கன்னற் பாகில் கோற்றேனில்
　　கனியிற் கனிந்த கவிபாட
அன்னத் தொகுதி வயற்கருவை
　　ஆண்டான் என்னை ஆண்டதுவே. (2)

ஆண்ட குரவன் ஆவானை
　　அல்லற் பிறவி அறுப்பானை
வேண்டும் பதவி தருவானை
　　வெளிவீட் டின்பம் அளிப்பானைத்
தூண்டல் செய்யா மணிவிளக்கைத்
　　தொழில்மூன் றியற்றுந் தொல்லோனைக்
காண்டற் கரிய பேரொளியைக்
　　களாவின் நிழற்கீழ்க் கண்டேனே. (3)

கண்ட கண்கள் புனல்பாயக்
களிப்பா யுள்ளம் கரையழிய
விண்ட மொழியின் நாக்குழற
விம்மி மேனி மயிர்பொடிப்பப்
பண்டை வசம் போய்ப் பரவசமாய்ப்
பரமா னந்தத் தெளிநறவம்
உண்டு தெவிட்டா அருள்புரிந்தான்
கருவை வாழும் உரவோனே. (4)

நின்ற நிலையும் செய்தொழிலும்
நினைந்த குறியும் வழிபாடும்
ஒன்று பதமும் பதங்கடந்த
உண்மைப் பொருளும் அறியேனை
இன்றுன் அடியா ருடன்கூட
எண்ணம் புரிந்த இனியவருள்
நன்று நன்று தமிழ்க்கருவை
நம்பா உம்பர் நாயகனே. (5)

V - கதைச் செய்யுள்

நள வெண்பா

இனிச்சூ தொழிந்தோம் இனவண்டு கிண்டிக்
கனிச்சூத வார்பொழிலின் கண்ணே—பனிச்சூதப்
பூம்போ தவிழ்க்கும் புனனுடன் பொன்மகளே
நாம்போதும் என்ருன் நளன். (1)

மென்காற் சிறையன்னம் வீற்றிருந்த மென்மலரைப்
புன்காகங் கொள்ளத்தான் போனற்போல்-தன்கால்
பொடியாடத் தேவியொடும் போயினன் அன்றே
கொடியானுக் கப்பார் கொடுத்து. (2)

ஆருயிரின் தாயே அறத்தின் பெருந்தவமே
பேரருளின் கண்ணே பெருமானே — பாரிடத்தை
யார்காக்கப் போவதுநீ யாங்கென்ருர் தங்கண்ணின்
நீர்வார்த்துக் கால்கழுவா நின்று (3)

வேலை கரையிழந்தால் வேத நெறிபிறழ்ந்தால்
ஞாலம் முழுதும் நடுவிழந்தால் — சீலம்
ஒழிவரோ செம்மை உரைதிறம்பாச் செய்கை
அழிவரோ செங்கோ லவர். (4)

தன்வாயின் மென்மொழியே தாங்கினன் ஓங்குநகர்ப்
பொன்வாயில் பின்னகப் போயினன் — முன்னளில்
பூமகளைப் பாரினெடும் புல்லினன் தன்மகனைக்
கோமகளைத் தேவியொடுங் கொண்டு. (5)

சந்தக் கழற்று மரையுஞ் சதங்கையணி
பைந்தளிரும் நோவப் பதைத்துருகி — எந்தாய்
வடந்தோய் களிற்றாய் வழியான தெல்லாம்
கடந்தோமோ என்றார் கலுழ்ந்து. (6)

காத லிருவரையுங் கொண்டு கடுஞ்சுரம்போக்
கேத முடைத்திவரைக் கொண்டுநீ—மாதராய்
வீமன் றிருநகர்க்கே மீளென்றான் விண்ணவர்முன்
தாமம் புனைவாளைத் தான். (7)

குற்றமில் காட்சிக் குதலைவாய் மைந்தரையும்
பெற்றுக் கொளலாம் பெறலாமோ—கொற்றவனே
கோக்கா தலனைக் குலமகளுக் கென்றுரைத்தாள்
நோக்கால் மழைபொழியா நொந்து. (8)

கைதவந்தான் நீக்கிக் கருத்திற் கறையகற்றிச்
செய்தவந்தான் எத்தனையுஞ் செய்தாலும்—மைதீர்
மகப்பெறா மானிடர்கள் வானவர்தம் ஊர்க்குப்
புகப்பெறார் மாதராய் போந்து. (9)

பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனுமற்
றென்னுடைய ரேனும் உடையரோ — இன்னடிசில்
புக்களையுந் தாமரைக்கை பூநாறுஞ் செய்யவாய்
மக்களையிங் கில்லா தவர். (10)

சொன்ன கலையின் துறையனைத்துந் தோய்ந்தாலும்
என்ன பயனுடைத்தாம் இன்முகத்து—முன்னம்
குறுகுதலைக் கிண்கிணிக்காற் கோமக்கள்பால்வாய்ச்
சிறுகுதலை கேளாச் செவி. (11)

செங்கோலாய் உன்றன் திருவுள்ளம் இதாயின்
எங்கோன் விதர்ப்பன் எழினகர்க்கே—நங்கோலக்
காதலரைப் போக்கி யருளென்றாள் காதலருக்
கேதிலரைப் போல எடுத்து. (12)

தந்தை திருமுகத்தை நோக்கித் தமைப்பயந்தாள்
இந்து முகத்தை எதிர்நோக்கி—எந்தம்மை
வேறாகப் போக்குதிரோ என்றார் விழிவழியே
ஆறாகக் கண்ணீர் அழுது. (13)

இருவ ருயிரும் இருகையால் வாங்கி
ஒருவன்கொண் டேகுவான் ஒத்து-வருமறையோன்
கோமைந்த னேடிளைய கோதையைக்கொண் டேகி
வீமன் நகர்க்கே விரைந்து. [னன்

சேலுற்ற வாவித் திருநாடு பின்னொழியக் [சேர்
காவிற்போய்த் தேவியோடுங்கண் ணுற்றான்-ஞாலஞ்
கள்ளிவேகத்தரவின் கண்மணிகள் தாம்பொடியாய்த்
துள்ளிவே கின்ற சுரம். (15)

மூரி யிரவும்போய் முற்றிருளாய் மூண்டதால்
சாரும் இடமற்றுத் தானில்லை — சோர்கூந்தல்
மாதராய் நாமிந்த மண்டபத்தே கண்டுயிலப்
போதராய் என்றான் புலர்ந்து. (16)

வைப முடையான் மகரயாழ் கேட்டருளும்
தெய்வச் செவிகொதுகின் சில்பாடல்—இவ்விரவில்
கேட்டவா என்றழுதாள் கெண்டையங்கண் ணீர்
தோட்டவார் கோதையாள் சோர்ந்து. [சோரத்

வீமன் றிருமடந்தை விண்ணவரும் பெற்றிலாத்
தாமம் எனக்களித்த தையலாள் — யாமத்துப்
பாரே அணையாப் படைக்கண் துயின்றாண்மற்
றாரே துயரடையார் ஆங்கு. (18)

காரிகைதன் வெந்துயரம் காணாமல் நீத்தந்தக்
கூரிருளிற் போவான் குறித்தெழுந்து — நேரே
இருவர்க்கும் ஓருயிர்போல் எய்தியதோர் ஆடை
அரிதற் கவன்நினைந்தான் ஆங்கு. (19)

ஒற்றைத் துகிலும் உயிரும் இரண்டாக
முற்றுந்தன் அன்பை முதலோடும்—பற்றி
அரிந்தான் அரிந்திட் டவள்நிலைமை நெஞ்சில்
தெரிந்தான் இருந்தான் திகைத்து. (20)

போயொருகால் மீளும் புகுந்தொருகால் மீண்டே
ஆயர் கொணர்ந்த அடுபாலின்—தோயல் [கும்
கடைவார்தங் கைபோலும் ஆயிற்றே காலன்
வடிவாய வேலான் மனம். (21)

திக்கான கத்துறையுந் தெய்வங்காள் வீமன்றன்
கோக்கா தலியைக் குறிக்கொண்மின்—நீக்காத
காதலன்பு மிக்காளைக் காரிருளிற் கைவிட்டின்
றேதிலன்போற் போகின்றேன் யான். (22)

[பேர்
எக்குலத்தாய் யார்மடந்தை யாதுன்னூர் யாதுன்
னெக்குருகி நீயழுதற் கென்னிமித்தம்-மைக்குழலாய்
கட்டுரைத்துக் காணென்றான் கார்வண்டு காந்தாரம்
விட்டுரைக்குந் தார்வணிகர் வேந்து. (23)

சேதி நகர்க்கே திருவைச் செலவிட்டப்
போதிற் கொடைவணிகன் போயினான் — நீதி
கிடத்துவான் மன்னவர்தங் கீர்த்தியினைப் பார்மேல்
நடத்துவான் வட்டை நடந்து. (24)

நினைப்பென்னுங் காற்றசைப்ப நெஞ்சிடையே மூளும்
கனற்புகைய வேகின்றான் கண்டான் — பனிக்குருகு
தண்படா நீழல் தனிப்பேடை பார்த்திரவு
கண்படா வேலைக் கரை. (25)

காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட
பாதகனைப் பார்க்கப் படாதென்றோ — நாதம்
அளிக்கின்ற ஆழிவாய் ஆங்கலவ ஓடி
ஒளிக்கின்ற தென்னோ உரை. (26)

பானலே சோலைப் பசுந்தென்றல் வந்துலவும்
கானலே வேலைக் கழிக்குருகே — யானுடைய
மின்னிமைக்கும் பூணாளை வீங்கிருள்வாய் ஆங்குணர்
என்னினைக்கும் சொல்வீர் எனக்கு. [ந்தால்

போவாய் வருவாய் புரண்டு விழுந்திரங்கி
நாவாய் குழற நடுங்குறுவாய் — தீவாய்
அரவகற்றும் என்போல ஆர்கலியே மாதை
இரவகற்றி வந்தாய்கொல் இன்று. (28)

முன்னீர் மடவார் முறுவற் றிரள்குவிப்ப
நன்னீர் அயோத்தி நகரடைந்தான் — பொன்னீர்
முருகுடைக்குந் தாமரையின் மொய்மலரைத் தும்பி
அருகுடைக்கும் நன்னாட் டரசு. (29)

அரிச்சந்திர புராணம்

பனியால் நனைந்து வெயிலால் உலர்ந்து
பசியால் அலைந்தும் உலவா
அனியாய வெங்கண் அரவா லிறந்த
அதிபாவம் என்கொல் அறியேன்
தனியே கிடந்து விடநோய் செறிந்து
தரைமீ துருண்ட மகனே
இனியாரை நம்பி உயிர்வாழ்வம் என்றன்
இறையோனும் யானும் அவமே. (1)

செங்கோல் அறத்தின் முறையே செலுத்து
நிறலோன் எவர்க்கும் உரவோன்
வெங்கோப யானை விறல்மன்னன் நம்மை
விடுவிக்க எண்ணி வருநாள்
பங்கே ருகத்து மலர்போல் விளங்கு
வதனு மகிழ்ந்த பரிவால்
எங்கேயென் ஆசை மகனென் றுரைக்கில்
எதிரேது சொல்வன் மகனே. (2)

நீராள வாவி செறிநா டனைத்தும்
நிறைமா தவற்கு தவினும்
பாராளும் நீர்மை தொடர்பற்ற தன்று
படியாளும் எந்தை முடியில்
காராளர் ஏர்கள் கடவோசை ஓய்வில்
கன்னோசி நாட தனைமேல்
ஆராள வல்லர் அவமே வனத்தில்
அரவால் இறந்த மகனே. (3)

நல்லோர் வகுத்த முறையாம் அறங்கள்
நாலெட்டில் ஒன்று குறையேம்
இல்லோரை அற்பம் இகழேம் இறுக்கும்
இறையன்றி ஏற உகவேம்
சொல்லோம் மறுத்தும் உரையேம் உரைத்த
துறவோர்கள் புத்தி கடவேம்
எல்லோர் தமக்கும் இனிதே விளைப்பம்
ஏதாக வந்த திதுவே. (4)

மறைநீதி யுற்ற புறநா டழித்து
வருசேனை ஆள்வ தறியேம்
அறைநீதி முற்றும் உணரா அமைச்சை
அணிவாயில் வைத்தும் அறியேம்
குறையே இழைத்து வினையே விளைத்த
குடிவைத் திருந்தும் அறியேம்
இறையே தவத்தின் விளைவே எமக்கும்
இதுவோ விதித்த விதியே. (5)

கனமும் தருக்கள் குலமும் தரித்த
கரமும் பெருத்த உரமும்
தினமுஞ் சிறக்கும் முகமும் தரித்த
சிகையும் கிடக்கு முறைகண்
டினமுந் தரித்த துயிரான பாவி
இறவாமல் என்றன் மகனே
மனமுந் தரிப்ப திலைநொந்து பெற்ற
வயிறுந் தரிப்ப திலையே. (6)

என்னுய கன்றன் மணிமார்பி லேறி
விளையாடு கின்ற எழிலோய்
முன்னுல் விளைந்த கனல்மூழ்க எம்மின்
முதலே நடந்த மதலாய்
செந்நாய் திரண்டு செறிகான் இருந்து
தெளியா திரங்கும் எனைநீ
அன்னுய் வருந்த லெயெனுதை துன்றன்
அறிவுக் கடாது மகனே. (7)

எனமறுகி இவனுடன்நாம் இறந்தோ மாகில்
இவனையெடுத் தெரித்தடக்க உரியார் இல்லை
மனமுருகான் நம்மைவிலை கொண்டோன் சால
வன்கண்ணன் மனைவியவன் றனின்மா பாவி
சினமுடையார் விடியுமுதற் செல்லே னுகில்
செறுவரிவன் றனைக்கருக்கிச் செல்வேன்என்று
தனதுதிரு மகனையெடுத் தணிதோள் வைத்துத்
தள்ளாடி மதிதயனுர் தனையை மீண்டாள். (8)

காடுமே டுஞ்செறிந்த செந்நாய் முன்னே
கவ்வியிழுத் திடப்பறந்து கழுகு மோதப்
போடுபோ டெனப்பலபேய் தொடரக் கொண்டு
போகேல்நீ எனக்கொடிய பூதஞ் சூழ
மாடுதோ றும்பறிக்க நரிகள் தாவ
வார்குழலும் சோர்துகிலும் வனந்தொட் டீர்க்க
இடுபா டித்தனையும் பட்டு நீண்முள்
இடுகாடு நீந்திநெடுஞ் சுடுகா டுற்றுள். (9)

பிணங்கள்சுடுங் கடும்புலையர் அரவத் தாலும்
பிளந்துதலை வெடித்திடுபே ரமலை யாலும்
நிணங்கருகிச் சுறுநாறும் முடையி னாலும் [ம்
நெடுங்கனலின் கொழுந்தெழுந்த நிவப்பி னாலு
கணங்கள்மிகக் களித்தாடுந் துழனி யாலும்
கனற்பொறியின் மலிவாலும் புகையி னாலும்
சுணங்குபல பிணங்குபெருங் குரைப்பி னாலும் [தாள்.
தோகையறிந் துணர்ந்துகொடுஞ் சுடலை சார்ந்

அரவுகடித் தரசிளங்கோ இறந்தான் என்ப
தறியாமல் வெகுண்டிறைவன் ஆரே இந்த
இரவுதனிற் பிணஞ்சுடுவார் அறிவோம் என்னா
எழுந்திருந்து விரைந்தோடி ஏடி மூடீ
தரவுரிய பொருளெனக்குத் தாரா தேநீ
தனியேயிப் பனியிருளிற் சவங்கொ ணர்ந்து
கரவினழற் சுடுவதுனக் கடைவோ என்னாக்
கால்வீசிக் கான்முளையை எடுத்தெ றிந்தான். ()

பொருளுடையேன் தமருடையேன் ஆனால் இந்தப்
புத்திரனைத் தோள்மீது வைத்துப் போந்திவ்
விருளிடையில் சுடலையில்வந் தெய்து வேனோ.
எறிந்தகுறைக் கட்டையினில் ஏற்று வேனோ
தெருளுடையாய் அறமுடையாய் எளியேன் இன்ற
சிறுவனையான் சுடக்கருணை செய்யாய் தேயா
அருளுடையாய் ஆகார மற்றேற் குன்றன்
அடியிணையே தஞ்சமென அலறி வீழ்ந்தாள். ()

நல்லைநல்லை அறச்சமர்த்தி நீயே கண்டேன்
நன்றுதலார் அனைவரினும் இந்த்ர சாலம்
வல்லைவல்லை விறகுகளுங் களவே செம்பொன்
மங்கலநாண் உன்கழுத்தில் இருக்க ஏதும்
இல்லையெனச் சொல்லுவது சற்றும் ஏலா
திதனையெனக் கீவாயென் றியம்ப வேடர்
பல்லமுயிர் நிலைவாயிற் பட்ட மான்போல் [தாள்.
பதைபதைத்துப் பைந்தொடியாள் பதறி வீழ்ந்

அலைவி லாவரிச் சந்திரற் கல்லது
தொலைவில் யாவர்க்குந் தோற்றரு மங்கலம்
புலையன் காணவும் போதுவ தோவென
உலையின் மீது மெழுகொத் துருகினள். (14)

அற்புக் காழி அனைரிச் சந்திரன்
விற்பப் போயின மேன்மைக் குலத்தொடும்
பொற்புப்போம்பொறைபோம்நிறைபோமென்றன்
கற்புப் போவதென் னென்று கலங்கினள். (15)

அலைய காலை அரிச்சந் திரனுந்தன்
மனைவி யாமிவள் என்று மனங்கொளாத்
தனையன் மாண்டது தன்னையுட் கொண்டுள
நினைவை நீக்கி மறப்பையும் நீக்கினன். (16)

அன்னை யின்றி அருங்கானி லெய்திய
உன்னை ஓடி உரகங் கடித்தலின்
மின்னை யும்முனை யும்விற்ற வெவ்வினை
என்னை எவ்வணம் நொந்தனை ஏந்தலே. (17)

விலைபட் டாய்பட்டும் வெவ்வர வாய்ப்பட்டுக்
கொலைபட் டாய்அன்னை தோளிற் சுமந்திடத்
தலைபட் டாய்தமி யேன்எறி யத்தகர்ந்
தலைபட் டாயிது வோவிதி யையனே. (18)

காத லாலுனைக் காணுத தாயையும்
இதெ லாம்விளைத் தேற்றிய என்னையும்
மீதெ லாம்அர வின்விடம் மேயநாள்
ஏதெ லாம் உரைத் தாயுரை எந்தலே. (19)

தீமை செய்த துனக்கும் சிறுவற்கும்
வாய்மை தானது மண்ணுக்கும் விண்ணுக்கும்
தூய்மை யேயினி என்று துணிந்தனன்
தீம யங்கல் அறத்தை நினையென்ருள், (20)

தோகை கேள்புலை யற்குத் தொழும்பன்நான்
ஆகை யால்மற் றவன்பணி நீத்தவன்
ஈகை யானிழந் தாற்றவ றெய்திடும்
போகை நன்று பொருள்தரு தற்கென்ருன். (21)

திருவிளையாடல் : மாமனாக வந்தது

கன்னிநான் மாடக் கூடற்
கடிநகர் வணிக மாக்கள்
தன்னின்மா நிதிக்கோ னன்னான்
தனபதி என்னும் பேரான்
மன்னினான் அனையான் கற்பின்
மடவரல் சுசீலை யென்பாள்
பொன்னினாள் முளரிச் சேக்கைப்
புண்ணியத் திருவி னன்னாள். (1)

எனவிவர் தமக்கு மைந்தர்ப்
பேறின்றி இரங்கு நாளில்
தனபதி மருகன் றன்னைத்
தகவுசால் மகவாக் கொண்டு
மனமகிழ் சிறப்பால் நல்க
மனைவியும் தொழுது வாங்கிப்
புனைவன புனைந்து போற்றிப்
பொலிவுற வளர்த்துக் கொண்டாள். (2)

தனபதி மகப்பே றற்றா
னயினுந் தணவாக் காதல்
மனைவிமேல் வைத்த ஆசை
மயக்கினால் வருந்தி யீன்ற
தனையனை மகவாத் தந்த
தங்கைமேல் தீராப் பூசல்
வினைவிளைத் தொழுக ஓர்நாள்
இளையளும் வெகுண்டு சொல்வாள். (3)

பெருமிதம் உனக்கேன் பிள்ளைப்
பேறற்ற பாவி நீயென்
அருமைநன் மகனு லன்ருே
இருமையும் அடைவாய் என்னப்
பெரிதுநாண் அடைந்து மேலைக்
காயினும் பிள்ளைப் பேறு
தருதவம் புரிவேன் என்னுத்
தனபதி தவமேற் செல்வான். (4)

தன்பெருஞ் செல்வ மெல்லாம்
மருமகன் றனக்கே யாக்கி
அன்புகொள் மனைவி யோடும்
அருந்தவ நெறியிற் சென்றுன்
பின்பவன் வரவு தாழ்ப்ப
மருமகன் பெற்ற வெல்லாம்
வன்பினுல் வழக்குப் பேசி
வெளவினுர் தாய மாக்கள். (5)

விளைநிலன் அடிமை பைம்பூண்
வெறுக்கைநன் பசுக்கள் ஏனை
வளனுமற் றவர்கைக் கொள்ள
வன்சிறை யிழந்த புட்போல்
தளர்வுறு மகனும் தாயும்
சார்பிலார் தம்ம னோர்க்கோர்
களைகணு யிருக்குங் கூடற்
கடவுளே சரணம் என்னு. (6)

வந்துவான் அகடு போழ்ந்த
மணிமுடி விமானக் கோயிற்
சுந்தர நாதன் பாதத்
துணைதொழு திறைஞ்சி யார்க்குந்
தந்தையும் தாயும் ஆகுந்
தம்பிரான் நீரே எங்கட்
கெந்தையும் ஆயும் என்று
இரங்கிநின் றினைய சொல்வாள். (7)

என்மகன் றன்னை மைந்தன்
இன்மையால் எவருங் காணத்
தன்மக னாகக் கொண்டு
தகுதியால் அன்றே காணி
பொன்மனை பிறவும் நல்கிப்
போயினன் என்முன் இப்பால்
வன்மையால் தாயத் தார்கள்
அவையெலாம் வெளவிக் கொண்டார். (8)

ஒருத்திநான் ஒருத்திக் கிந்த
ஒருமகன் இவனுந் தேறுங்
கருத்திலாச் சிறியன் வேறு
களைகணுங் காணேன் தூய
அருத்திசால் அறவோர் தேரும்
அருட்பெருங் கடலே எங்கும்
இருக்கிநீ அறியாய் கொல்லோ
என்றுபார் படிய வீழ்ந்தாள். (9)

மாறுகொள் வழக்குத் தீர்க்க
வல்லவர் அருளி ஞலே
சீறுகொள் வடிவேற் கண்ணுள்
சிறுதுயி லடைந்தாள் மெய்யில்
ஊறுகொள் கரணம் ஐந்தும்
உற்றறி கனவிற் கங்கை
யாறுகொள் சடையார் வேதச்
செல்வராய் அடுத்துச் சொல்வார். (10)

புலர்ந்தபின் தாயத் தோரைப்
புரவலன் ஆணை யாற்ருல்
வலந்தரு மன்றத் தேற்றி
மறித்தனை யிருத்தி யாம்போந்
தலந்தரும் அறிவான் மூத்தோர்
அனைவரும் இசைய அந்தச்
சலந்தரு வழக்குத் தீர்த்துத்
தருகுவம் போதி யென்ருர். (11)

வேரியங் குவளை யுண்கண்
விழித்தனள் வியந்து கெட்டேன்
ஆருமில் லார்க்குத் தெய்வந்
துணையென்ப தறிந்தேன் என்னுக்
காரிருங் கயலுண் கண்ணுள்
கணவனைத் தொழுது வாழ்த்திச்
சீரிளங் குமர னேடும்
தெரிவைதன் மனையிற் சென்ருள். (12)

சென்றவள் கங்கு லெல்லை
தெளிந்தபின் எழுந்து வெள்ளி
மன்றவன் கோயில் வாயில்
வந்துவந் தனைசெய் தம்பொன்
குன்றவன் உரைத்த வாற்றல்
கொடுமைசால் வழக்குப் பூட்டி
வென்றவர் இருக்கை யெய்தி
விளம்புவாள் பலருங் கேட்ப. (13)

அட்டில்வாய் நெருப்பி டேல்ஓர்
அடியிடேல் அறத்தா றன்றிப்
பட்டிமை வழக்கால் வென்று
போகொட்டேன் பலருங் கேட்க
விட்டிடேன் அரச னாணை
அறத்தவி சேறி ஆன்றோர்
ஓட்டிய படிகேட் டெங்கள்
உரிப்பொருள் தந்து போமின். (14)

என்றனள் மறித்த லோடும்
இழுக்குரை யாடி வைது
வன்றிறல் வலியார் தள்ளி
அடித்தனர் மைந்த னோடும்
சென்றனள் முறையோ என்னுத்
திருந்தறத் தவிசி னோர்முன்
நின்றுரை யாடி னாள்கேட்
டறிந்தனர் நீதி நூலோர். (15)

அறத்தவி சிருப்போர் ஏவ
லாடவ ரோடும் போந்து
மறித்தவைக் களத்தில் கூட்டி
வந்தனள் வந்த எல்லை
அறக்கொடி பாகர் வெள்ளி
யம்பல வாணர் தாமத்
திறத்தன பதியே என்னத்
திருவுருக் கொண்டு செல்வார். (16)

பெருவிலைக் குண்டலம் பிடரிற் பத்திபாய்த்
தெரிகதிர் கவிழ்ப்பவாள் எறிக்கும் அங்கதம்
அருவரைத் தோள்கிடந் திமைப்ப ஆகமேற்
குருமணிக் கண்டிகை குலாய்ப்பின் கோட்டவே. (17)

வாடிய முளரிபோல் மாறிட் டாரிடத்
தூடியும் மலர்ந்தபோ தொப்ப மைந்தன்மேல்
நாடிய தண்ணளி நயந்தும் உட்கிடை
கூடிய முகத்தினர் குறுகு வாரவை. (18)

அரசனிங் கில்லை கொல்லோ
ஆன்றவ ரில்லை கொல்லோ
குரைகழல் வேந்தன் செங்கோல்
கொடியதோ கோதில் நூல்கள்
உரைசெயுந் தெய்வந் தானும்
இல்லைகொல் உறுதி யான
தருமமெங் கொளித்த தேகொல்
என்றறத் தவிசிற் சார்வார். (19)

தனபதி வரவு நோக்கி
வஞ்சனைத் தாயத் தார்கள்
இனைவுறு மனத்த ராகி
விம்மிதம் எய்தி வெல்லும்
மனவலி யிழந்து பண்டு
வழக்கலா வழக்கால் வென்ற
வினைநினைந் துள்ளம் அச்சம்
நாணினால் விழுங்கப் பட்டார். (20)

மாதுல ராகி வந்தோர்
மருகனைத் தம்பின் வந்த
தாதுல ராத கோதை
தன்னொடுந் தழீஇத்தம் கண்டம்
மீதுல ராத சாம
வேதமார்ப் பவர்போல் வாய்விட்
டாதுல ரானீர் அந்தோ
ஐயவென் றழுது நைந்தார். (21)

குடங்கையின் நெடுங்க ணாளும்
குமரனும் வணிகன் தாளில்
தடங்கணீ ராட்ட வீழ்ந்தார்
தடக்கையால் எடுத்துப் புல்லி
மடங்கலே றனையான் தானும்
மற்றவர் தமைத்தன் கண்ணீர்
நெடுங்கடல் வெள்ளத் தாழ்த்திக்
குமரனை நேர்ந்து நைவான். (22)

ஒம்படை மார்பிற் காணேன்
சிறுசிலம் படியிற் காணேன்
மொய்ம்பிடை மதாணி காணேன்
முகத்தசை சுட்டி காணேன்
மின்படு குழைகள் காணேன்
வெற்றுடல் கண்டேன் அப்பா
என்பெறும் என்று பிள்ளைப்
பணிகளுங் கவர்ந்தார் என்னு. (23)

அனைவரும் இரங்க வாய்விட்
டழுதவர் இளையாள் தன்னைத்
தனையனைக் கண்ணீர் மாற்றித்
தடக்கையால் முதுகு தைவந்
தினையன்மின் என்முன் வேறொன்
றெண்ணன்மின் என்னு வஞ்ச
வினைஞர்வல் வழக்குச் சோர்ந்து
விடுவது காண்மீன் என்னு. (24)

நட்பிடை வஞ்சஞ் செய்தும்
நம்பினர்க் கூண்மா றூட்டத்
துட்படக் கவர்ந்தும் ஏற்றோர்க்
கிம்மியும் உதவா ராயும்
வட்டியின் மிகப்பக் கூறி
வாங்கியும் சிலர்போல் இட்டப்
பட்டதோ அறத்தா றீட்டும்
நம்பொருள் படுமோ என்னு. (25)

மங்கல மாடம் ஓங்கும்
மதுரைநா யகனை நோக்கிச்
செங்கரஞ் சிரமேற் கூப்பி
மாணிக்கந் தேற்றி விற்கும்
எங்குல வணிக ரேறே
எம்மனோர் வழக்கை யிந்தப்
புங்கவ ரிடனைத் தீர்த்துத்
தருகெனப் புலம்பி யார்த்தார். (26)

ஆவலித் தழூத கள்வர்
வஞ்சரை வெகுண்டு நோக்கிக்
காவலன் செங்கோல் நுண்ணூல்
கட்டிய தருமத் தட்டில்
நாவெனுந் துலைநா விட்டெம்
வழக்கையும் நமராய் வந்த
மேவலர் வழக்குந் தூக்கித்
தெரிகென விதந்து சொன்னார். (27)

நரைமுது புலியன் றன்சொற்
கேட்டலும் நடுங்கிச் சான்றோர்
இருவர்சொல் வழக்கும் மேற்கொண்
டனுவதித் திரண்டும் நோக்கித்
தெரிவழி யிழுக்கு ஞாதி
வழக்கெனச் செப்பக் கேட்டு
வெருவினர் தாயத் தார்கள்
வலியரின் வேறு சொல்வார். (28)

தவலருஞ் சிறப்பின் ஆன்ற
 தனபதி வணிக ரல்லர்
இவரென அவையங் கேட்ப
 இருகையும் புடைத்து நக்குக்
களமான் உரித்துப் போர்த்த
 கண்ணுதல் வணிகர் கோமான்
அவரவர் குடிப்பேர் பட்டம்
 காணிமற் றனைத்துங் கூறும். (29)

தந்தைதாய் மாமன் மாமி
 தாயத்தார் இவரை யீன்றூர்
மைந்தர்கள் உடன்பி றந்தார்
 மனைவியர் கிளைஞர் மற்றும்
அந்தமில் குணங்கள் செய்கை
 ஆகிய அடையா ளங்கள்
முந்தையின் வழுவா வண்ணம்
 முறையினன் மொழிந்தான் முன்னேன்.

அனையது கேட்ட ஆன்றோர்
 அனைவரும் நோக்கி யந்தத்
தனபதி வணிகர் தாமே
 இவரெனச் சாற்ற லோடும்
மனவலித் தாயத் தார்தம்
 வழக்கிழுக் கடைந்த தீது
நனைவழி வேம்பன் தேரின்
 தண்டிக்கும் நம்மை யென்னு. (31)

இல்லினுக் கேகி மீள்வன்
 யானென்றும் குளத்திற் கேகி,
ஒல்லையில் வருவே னென்றும்
 ஒவ்வொரு வார்த்தை யிட்டு
வல்லெழு வனைய தோளார்
 அனைவரும் வன்கால் தள்ளச்
செல்லெழு முகில்போற் கூட்டஞ்
 சிதைந்தனர் ஒளித்துப் போனார். (32)

அனையவர் போக நின்ற
 அறனவில் மன்றத் துள்ளோர்
தனபதி வணிகர் தந்த
 தனமெலாந் தந்த மைந்தற்
கெனமனை யெழுதி வாங்கி
 ஈந்தனர் ஈந்த வெல்லை
மனமொழி கடந்த நாய்கர்
 மறைந்துதங் கோயில் புக்கார். (33)

இம்மெனப் பலருங் காண
 மறைந்தவர் இருந்தண் கூடற்
செம்மலென் றறிந்து நாய்கச்
 சிறுவனுக் குவகை தூங்க
விம்மிதம் அடைந்து வேந்தன்
 வரிசையும் வெறுப்ப நல்கிக்
கைம்மறி வணிகர் கோயில்
 புகுக்கினன் கனகங் கொண்டு. (34)

குசேலோபாக்கியானம்.

எண்ணனைக் கிலங்கு மார்பம்
இத்தருள் பிரானை நீல
வண்ணனைத் திகிரி சங்கம்
வலமிடம் உறக்கொண் டானை
மண்ணனைத் தும்பு ரக்கும்
வாசுதே வனைம ணக்குந்
தண்ணனைத் துளவத் தாமக்
கண்ணனைக் கண்ணிற் கண்டான். (1)

காண்டலும் உவகை பூத்துக்
கால்விசை கொடுந டந்தான்
ஆண்டகை யவனுங் கண்ணுற்
றணையுடைத் தெழுநீத் தம்போல்
நீண்டபூம் பள்ளி நீத்து
நிலவுபே ரன்பு பொங்கப்
பூண்டமா தவன்முன் சென்று
பொன்னடி வணங்கி னான். (2)

வழிநடந் திளைத்த வேயிம்
மலரடி யிரண்டும் என்று
கழிமகிழ் சிறப்ப மெல்ல
வருடினன் கமலக் கண்ணன்
பழியில்பல் லுபசா ரங்கள்
பண்ணவும் தெரியா னாகி
ஒழிவறு தவக்கு சேலன்
ஒன்றும்பே சாதி ருந்தான். (3)

மன்னுடைய மறையனைத்தும்
வகுத்துணர்ந்த மாதவனே
உன்னுடைய தரிசனத்தால்
உடம்புபூ ரித்தனன்யான்
மின்னுடைய விளங்கொளிவேல்
வேந்தருளும் தேவருளும்
என்னுடைய பெறலரும்பே
றியார்பெற்றார் யார்பெறுவார். (4)

ஆயின்மறை முதற்கலைகள்
அனைத்துமுணர்ந் தறமறம்பாத்
தேயினிது நன்றிதுதீ
தென்றுணர்த்து மவர்நட்பை
வீயினுந்தான் மறப்பர்களோ
மேதையோர் மறப்பரேல்
நாயினுங்கீழ்ப் பட்டவர்கள்
அவர்காண்இந் நானிலத்தே. (5)

நல்லார்சொல் விரும்புவதும்
நல்லாரைக் காண்பதுவும்
நல்லார்க்கொன் றுதவுவதும்
நல்லாரைப் புகழ்வதுவும்
நல்லார்நன் றென்றுரைப்ப
நவிற்றியஇவ் வெலாமடங்க
நல்லார்நட் பென்றுமுறல்
நன்றன்றே நான்மறையோய். (6)

பொன்னுள்ளான் பூமியுள்ளான்
புந்தியுள்ளான் ஆயிடினும்
என்னுள்ளான் ஆவனவன்
இருந்தவர்நட் பில்லானேல்
பொன்னில்லான் பூமியில்லான்
புந்தியில்லான் ஆயிடினும்
என்னில்லான் ஆவனவன்
இருந்தவர்நட் புள்ளானேல். (7)

பேயோடு பழகுறினும்
பிரிவதரி தரிதென்று
தூயோர்கள் மொழிவரால்
தூயோரும் புகழ்தூயோய்
ஆயோர்கள் பெருநட்பை
அருந்தவத்தாற் பெறலன்றி
ஏயோஎண் மையிற்கிடைப்பின்
இகழ்வரோ இகழ்வில்லார். (8)

கூடுதற்குக் கூடாத
கூட்டத்துப் படுநட்பு
வீடுதற்குக் தக்கதாய்
நாடோறும் மெலிந்தொழியும்
நீடுதற்குத் தக்கது நன்
னெறிநின்றோர் நட்பொன்றே
தேடுதற்குக் கிடையாத
திரவியமும் அஃதாமால். (9)

முத்திக்கு வித்தாகும்
முழுதுணர்ந்தோர் பெருநட்பே
தித்திக்கும் நாடோறும்
தேவர்பெறற் கருந்திருவுஞ்
சித்திக்கும் படியருளும்
செப்பரிதால் அதுநிற்க
எத்திக்கும் புகழுநினக்
கியன்மணம்நன் காயிற்றே. (10)

நின்னுடைய மனைக்கிழத்தி
நிரம்புபெரு நீர்மையளே
மன்னுடைய சொற்காத்துச்
சேர்விலா மாண்பினளே
தன்னுடைய வுயிராநின்
றனைப்பேணுந் தன்மையளே
உன்னுடைய வருவாய்க்குத்
தக்கசெல வுஞற்றுவளே. (11)

பைங்குதலை வாய்மைந்தர்
பலர்பிறக்க வேண்டுமே
எங்குமரும் புகழுடையாய்
எத்தனைமைந் தர்கள்பிறந்தார்
அங்கவரைப் பேரவையோர்
அணிதரச்செய் செயலனைத்தும்
சிங்கலறப் புரிந்தனையோ
செய்தனையோ உபநயனம். (12)

நள்ளார்கள் அண்மைக்கண்
　　இருந்தாலும் நட்புறுத்தார்
விள்ளார்கள் சேய்மைக்கண்
　　இருந்தாலும் விருப்பொழியார்
தள்ளாத பலபொருள்கள்
　　தனைச்சூழ இருந்தாலும்
உள்ளாத வன்கதிரை
　　உறநோக்கும் நெரிஞ்சியே. (13)

ஐயநீ குடியிருக்கும்
　　அணிநாட்டில் அதிகமழை
பெய்யுமழை யின்மைகிளி
　　விட்டில்முதற் பெருங்கேடு
வெய்யகொடுங் கள்வர்வன
　　விருகமுதற் பலகேடு
நையவினி துயிரெலாம்
　　நன்குதழைக் கின்றனவே. (14)

இருவேழும் முன்னாளில்
　　இலங்குசாந் தீபமுனி
வருகாம ரடிவணங்கி
　　மாமறைகற் றுணர்ந்திடுநாள்
பெருகார்வத் தொடும்பேசிக்
　　கொண்டிருந்த பேச்செல்லாம்
திருகாரா வுளத்துநினைத்
　　திருக்கின்ற யோசிறப்ப. (15)

VI - கமவன் கல்வி யருமை அறிந்தது

சீர்மிகும் பெயரான் ஓங்கும்
திருநின்ற வூரில் வாழ்வோன்
நீர்மிகும் நிலங்கள் உள்ளோன்
நிறைபல ஏர்கள் உள்ளோன்
கார்மிகும் மேதி யுள்ளோன்
கால்நடை பலவும் உள்ளோன்
ஏர்மிகும் இல்லம் உள்ளோன்
எல்லனென் றியம்பும் பேரோன். (1)

மையெனக் கறுத்த மெய்யன்
வாங்கியுட் குழிந்த கண்ணன்
பையெனச் சுருங்கும் வாயன்
பலகறை படிந்த பல்லன்
கையினிற் கொண்ட கோலன்
காம்பெனத் திரண்ட காலன்
மெய்யினல் நீண்ட பாம்பின்
வயிற்றினன் வெடித்த சொல்லன். (2)

காக்கைகண் விழிக்கு முன்னே
கண்விழித் தெழுந்து வாயிற்
பாக்குடன் இலையை மென்று
பண்ணையை நோக்கிச் செல்வான்
ஊக்கமாய் வரப்பின் மீதே
உலவிவந் துறுவைக் கோலை
மேக்குறத் திரித்துப் பல்லை
மினுக்குறத் துலக்கு வானே. (3)

உச்சியிற் பொழுது நிற்கும்
ஒருபகல் வேளை நண்ண
வெச்சுடன் வீட டைந்து
வெறியகூழ் கலக்கி உண்டு
இச்சையில் சொக்கட் டானை
இன்புடன் விரித்துக் கொண்டே
அச்சம யத்தில் ஆட
அயலவர் தமைய ழைப்பான். (4)

அழைத்தவ ருடனி ருந்தே
ஆடுவன் ஆங்கண் ஓர்நாள்
செழித்தநல் லறிவு சான்ற
தேசிகன் ஒருவன் போந்து
பழுத்தநற் பெரியீர் நுந்தம்
பாலனும் படித்தி டாமற்
பழித்திடத் திரிய வைத்தல்
பான்மையோ பகரும் என்றான். (5)

கல்வியிங் கெமக்கேன் எங்கள்
கழனியைக் கண்கா ணித்துச்
செல்வமாய் வளர்ந்து மேனி
திகழுற இருந்தால் போதும்
நல்விவே கத்தாற் செல்வம்
நாசமே யாகும் என்னச்
சொல்லினர் எங்கள் முன்னோர்
சூதல மற்றும் கேளும். (6)

எங்கள்முற் பாட்ட ஞருக்
கிருவராம் குமரர் தம்முள்
அங்கொரு வனைப்பள் ளிக்கே
அனுப்பினர் அவனும் அன்றே
பொங்கிய காய்ச்சல் கண்டு
போயினன் என்பர் அந்தோ
இங்கென்மைத் தனையும் அவ்வா
றிறந்திடச் சொல்கின் றீரே. (7)

பிள்ளையும் படிக்க வேண்டா
பிரம்படி படவும் வேண்டா
சள்ளையாஞ் சுவடி தூக்கிச்
சங்கடப் படவும் வேண்டா
முள்ளெனும் ஆணி கொண்டு
முறியினில் எழுத வேண்டா
பிள்ளையென் றிருந்தாற் போதும்
பெற்றவள் களிக்க என்றாள். (8)

ஐயநீர் சுவடி தம்மை
அடுக்கடுக் காகக் கற்றும்
உய்யவோர் வழியும் இன்றி
உழல்கிறீர் வீடு தோறும்
கையினிற் பொருளுள் ளார்க்குக்
கல்வியாற் பயன்றான் யாதோ
செய்யுமோர் தொழிலி லார்க்குச்
செப்புமிக் கதையை என்றே. (9)

நல்லதென் மைந்தன் தன்னை
நலனுறப் படிப்பித் தற்குச்
செல்லுமோர் தொகைதான் யாது
செப்பிடும் பார்ப்போம் என்றான்
எல்லரே உமது மைந்தன்
எழுதவும் படித்தி டற்கும்
வல்லவன் ஆவ தற்கும்
வராகனோர் நாலந் தாமே. (10)

என்றனன் என்ற லோடும்
எல்லனும் இறும்பூ தெய்தி
என்றது நாலும் ஐந்தோ
இருபதோ இருப தாயின்
இன்றொரு கடாவும் வாங்கி
ஏரினிற் பூட்டி நன்றாய்க்
குன்றென நெல்வி ளைத்துக்
குவியலாக் குவித்தி டேனோ. (11)

இருபது வராகன் அந்தோ
எழுபது வெள்ளி யன்றோ
ஒருபதொ டிருப தாயின்
ஒருவிதத் தொழிக்க லாகும்
வருவதிங் கதனா லென்ன
வண்டியோ மணியோ மாடோ
தருவதிங் கெழுத்தே யன்றோ
தலையெழுத் தழிவ துண்டோ. (12)

என்னையே வெறுத்துக் கூறும்
எல்லனை இழித்து நோக்கி
நன்னய உபாத்தி யாயன்
நரைமுதிர் கிழவ ரேநீர்
பொன்னையே பெரிதாக் கொண்டீர்
புந்தியைச் சிறிதாக் கண்டீர்
பின்னையப் பொருளைக் கொண்டோர்
பெருங்கடாக் கொள்ளு வீரேல். (13)

அப்பொழு தும்மி டத்தே
அருங்கடா இரண்டி ருக்கும்
ஒப்புடன் ஏரிற் பூட்டி
உழுதிட லாகும் என்ன
எப்படி இரண்டுண் டாகும்
யான்கொள்வ தொன்றே யன்றோ
அப்படி இரண்டுண் டாயின்
அதிட்டமென் றடைவேன் அன்றே. (14)

சொல்லும்அவ் வுபாய மென்றே
துனைத்திட உபாத்தி யாயன்
எல்லரே நீவிர் கொள்ளும்
எருமையொன் றுடனே உந்தம்
கல்வியில் லாத மைந்தன்
கடாவெனத் திரிவ னன்றே
வல்லவாம் இரண்டு மேதி
வரும்வழி அறிகி லீரோ. (15)

என்றனன் அதனைக் கேட்ட
எல்லனும் என்னே என்னே
என்றனேர் மைந்தன் றன்னை
எருமையே யாக்கி விட்டீர்
இன்றெனக் கதனை நன்று
இயம்புக எனஅந் நல்லோன்
ஒன்றிய கல்வி யின்சீர்
உழவனுக் குரைப்ப தானன். (16)

மன்னிய உயிர்கள் தம்முள்
மானிடன் சிறந்து நிற்றல்
அன்னவன் அரிதிற் கொண்ட
அறிவினு லன்றோ ஐயா
துன்னும் அவ் வறிவு நாளும்
துலங்கிடச் செய்யுஞ் சீர்மை
நன்னயக் கல்விக் கல்லால்
நாடுமற் றெதற்கு முண்டோ. (17)

வித்தையில் லாத மக்கள்
விலங்கினும் கடைய ராவர்
புத்தியில் லாத மாந்தர்
புல்லினும் புல்ல ராவர்
மெய்த்திறங் காண்ப தற்கு
வித்தையே விழிய தாகும்
கைதலப் பொருளோ நந்தம்
கருத்தினை மயக்கும் அன்றே. (18)

கற்றறி வில்லா மாந்தர்
கண்கெட்ட மாடே யாவர்
மற்றவர் மண்ணின் மீதே
மடமையில் மாழ்கி நிற்பர்
உற்றமற் றவர்கள் இந்த
உலகுக்கோர் சுமையே யாவர்
பெற்றவர் செய்த பாவம்
பிள்ளையாய்ப் பிறந்த தாமே. (19)

அந்தநாள் தொட்டு நந்தம்
ஆன்றவர் ஆய்ந்து வைத்த
அந்தமில் பொருளைக் கல்லான்
அறிவனோ அரிதின் நாளும்
இந்தநல் லுலகில் தோன்றும்
இயல்பினை அறிகி லானை
அந்தமில் கிடாயே என்றல்
அதிசய உத்தி யாமோ. (20)

மாண்புறு கல்வி மாந்தர்
மடமையைக் கொல்வ தல்லால்
பூண்பணி போன்ற மக்கள்
பொன்றிடக் கொல்லா தையா
வீண்பழி சுமத்தல் நன்றோ
வித்தையால் விளிந்தான் என்றே
ஆண்பெணென் றிருபா லாரும்
அறிவுறக் கற்கை நன்றால். (21)

என்னவே கூறக் கேட்ட
எல்லனும் இதயம் நைந்து
முன்னமே அறியா தியானும்
மூடரில் முதன்மை பெற்றேன்
இன்னமும் அறிவு மாழ்கி
இருந்திடல் எளிமை யாமே
மன்னிய கல்வி என்றன்
மைந்தனுக் குணர்த்து கென்று. (22)

தேசிகன் தன்னை வேண்டிச்
சிறுவனை அவன்பா லாக்கி
நேசமா யிவனை நல்ல
நெறியினில் உய்க்க என்ன
மாசிலவ் வுபாத்தி யாயன்
மைந்தனைத் தன்பாற் கொண்டே
ஆசிகள் பலவுங் கூறி
அறிவுநூல் புகட்டி னனே. (23)

V - விஞச் செய்யுள்

சோலையை ஓரெழுத்தால் என்சொல்லும் நோக்குதன்மேல்
நீலப்பேர் எவ்வெழுத்தி னல்நிரம்பும்—மாலைக்
குடைவேந்தன் சென்னி குலநதியின் பேரைக்
கடைநின்ற ஓரெழுத்தால் காண். (1)

ஆற்றின்பேர் இற்றின் எழுத்தொழிய இன்பஞ்சேர்
நாற்கால தாமீற் றுயிர்நடப்ப—ஏற்புடைய
உண்பயனும் ஆங்கதனின் இறுெழிந்தால் ஓதுநாற்
கின்பஞ்சேர் செய்யுளாம் இன்று. (2)

பூமேலாள் ஆரென்பர் பூம்போர்வை என்செய்யும்
தீமேற் படிற்கொடுத்தாற் கொள்வதெவன்—ஆமே
நலந்திகழுஞ் செங்கோல் நயதீரன் எங்கோன்
சிலம்பன் திருவேங் கடன். (3)

நீத்தொழிந்த யாறைந் தடக்கிப்பின் நிச்சயமே
வாய்த்தமைந்த வாயில்பெண் யானையும்—கூத்தற்கு
வாளேறு டோசை விளைநிலம் இவ்வல்லாற்
கேளாய் உடன்வருவ தில். (4)

எழுதுவரிக் கோலத்தார் இவாற் குரியார்
தொழுதிமையார் கண்ணமைந்த தோட்டார்—பழுதகல
நாணிற் செறிந்தார் நலங்கிள்ளி நாடோறும்
பேணற் கமைந்தார் பெரிது. (5)

1. தமிழ் மக்கள்

தமிழ்மக்கள் யாவர்? என்று வினவினால், தமிழ் நாட்டில் வாழ்பவரே தமிழ் மக்கள் ஆவர் என்று உடனே விடை கூறி விடலாம். ஆயினும், அது சாலாது.

தமிழர், தமிழ் நாட்டிலேயே வாழ்ந்துவந்த பழங்குடிகளா, அல்லது, வேறுநாட்டினின்றும் இங்கே வந்து குடியேறினவர்களா என்னுஞ் செய்தி ஆராயத்தக்கது. அவ்வாறு ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருவோமாயின், அம் முடிபே தமிழ்மக்கள் யாவர் என்னும் வினவிற்கு ஏற்ற விடையாகும்.

பண்டைத் தமிழாசிரியர், தமிழ் நாட்டிற்கு வேங்கடத்தை வடவெல்லையாகவும், குமரியைத் தென்னெல்லையாகவும், கிழக்கிலும் மேற்கிலும் கடலை எல்லையாகவும் கூறியிருக்கின்றனர். ஆதலின், இந் நாற்பால் எல்லைக்கு உட்பட்ட நாடே தமிழ்நாடு என்பதாயிற்று. இக்காலத்தே தமிழ்நாட்டின் எல்லை பெரிதும் மாறி யிருக்கின்றது. திருவேங்கடம், நெல்லூர், குன்றூர், (குண்டூர்) என்னும் பெயர்கள், தமிழ் மொழியாக இருப்பவும், அவ்வூர்களில் இப்போது வழங்கும் மொழி தெலுங்குமொழியே யாகும்; அதனால், வடவேங்கடத்தைத் தமிழுக்கு வடவெல்லையாகக் கூறுவது இக் காலத்துக்குப் பொருந்துவதன்று. தென்பால் எல்லையாகிய

குமரிக்குக் கீழுள்ள சிங்களத் தீவிலும், பினாங் சிங்கப்பூர் சுமத்ரா ஜாவா மலேயா பர்மா முதலிய நாடுகளிலும், நெட்டால் மடகாஸ்கர் முதலிய தீவுகளிலும் தமிழர் குடியேறவே, அங்கெல்லாம் தமிழ்மொழி வழங்குவதாயிற்று. ஆகவே, தெற்குப் புறத்தில் தமிழின் எல்லை பெரிதும் வளர்ந்திருக்கின்றது. மேற்குப் புறத்தில் மலையாளம் ஓங்கவே, தமிழ்மொழியின் வழக்காறு அறவே அற்றுப் போயிற்று. உள் நாட்டிலும் கன்னட மொழி ஓங்கவே, தமிழ் தலையெடாமற் போயிற்று.

தெலுங்கு அச்ச தெலுங்காக இருந்த காலத்தில், மலையாளம் பச்சை மலையாளமாக இருந்த காலத்தில், கன்னடம் பழங் கன்னடமாக இருந்த காலத்தில், இத் தமிழ்நாடு, அவை யனைத்துஞ் சேர்ந்த ஒரே நிலப்பரப்பாகவே இருந்து சிறப்புற்றது. அக் காலத்தில்தான் பண்டைத் தமிழ்ப் புலவர்கள் தமிழ்நாட்டிற்கு எல்லை வகுத்தனர் போலும்.

சிலப்பதிகாரத்திற்கு உரை வகுத்த அடியார்க்கு நல்லார் முதலியோர், பண்டைக் காலத்தே குமரிக்குத் தென்புறத்தில் நிலம் நீண்டிருந்தது என்றும், அந் நிலம் நாற்பத்தொன்பது நாடுகளாகப் பிரிந்திருந்தது என்றும், அது கடல்கோளால் அழிந்துபட்டது என்றும் கூறுவர். அவர் கூற்றில் பெரிதும் உண்மையுளது எனத் தோன்றுகின்றது.

ஒரு நிலப்பகுதி நீரால் கொள்ளப்பட்டது என்பதற்குச் சிற் சில அறிகுறிகள் உண்டு: முதலாவது, அக் கடல் ஆழமற்றதாக இருக்கும். இரண்டாவது, ஆங்காங்கே தொகுதியான தீவுகள் அமைந்திருக்கும். மூன்றாவது, அக் கடலிற் கிடைக்கும் பொருள்களை எடுத்து ஆராய்ந்து பார்த்தால், அவை ஒரு காலத்தே மக்களால் வழங்கப்பட்டவை என்பது நன்கு விளங்கும். இவ்வகையில் இந்து மகா சமுத்திரத்தை ஒப்பிட்டுப் பார்ப்போம்:

(1) மற்றைய சமுத்திரங்களைக் காட்டிலும் இந்து சமுத்திரம் ஆழமற்றது. அதனாலேயே, அமெரிக்கா தேசத்துப் பெருங்கப்பல்கள் இந்து சமுத்திரத்தில் வருவதற்கு இயலுவதில்லை.

(2) மற்றையசமுத்திரங்களில் இருப்பதைக் காட்டிலும் இந்து சமுத்திரத்தில் எண்ணிறந்த தீவுகளும், தீவுக்கூட்டங்களும் உள்ளன. அந்தமான் தீவுகள், இலட்சத் தீவுகள் முதலிய தீவுக்கூட்டங்களும், சிங்களம் பினாங் சிங்கப்பூர் முதலிய தீவுகளும் இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள செய்தி பலரும் அறிந்ததே.

(3) இந்து சமுத்திரத்தில் கிடைக்கும் பல பொருள்களை எடுத்து ஆராய்ச்சி செய்த ஹேறக்கல் என்னும் ஜெர்மானிய ஆசிரியர் அப்பொருள்கள் பல்லாயிர வருடங்களுக்குமுன் மாந்தரால் வழங்கப்பெற்றவையா யிருத்தல் வேண்டும் என்கின்றனர். அதனால், இந்துசமுத்-

திரம் ஒரு காலத்தில் நிலப்பகுதியா யிருந்தது என்பது போதரும். ஆதலின், பண்டைத் தமிழாசிரியர்கள் குமரிக்குத் தெற்கில் நிலப்பகுதி பெருகியிருந்த தென்று கூறியது உண்மையே யாகுமன்றோ?

கடல் கொண்ட பகுதி நாற்பத்தொன்பது நாடு என்ப. அவை இப்பொழுது வழங்கும் ஜில்லாக்களைப் போன்ற தொண்ணூற்றெட்டு ஜில்லாக்கள் அடங்கிய நிலப்பரப்பு எனக் கருதலாகும். பண்டைக் காலத்தில் ஒரு நாடு என்றது, இக் காலத்தே இரண்டு ஜில்லாக்கள் கொண்ட நிலப் பரப்பாகக் காண்கின்றது. சேர சோழ பாண்டிய நாடுகளும் இவ்விரண்டு ஜில்லாக்கள் கொண்ட நாடுகளே யாகின்றன. இத்தகைய பெரிய நிலப்பரப்பு கடல் கொள்ளப்பட்ட பொழுது, தென்னிந்தியாமட்டும் அவ்வாறு கொள்ளப்படாமைக்குக் காரணந்தான் என்னே என்று வினவலாம். அதற்கு விடை கூறுவோம்:

அந் நிலப்பரப்பில் மலையும் மலையடர்ந்த நாடுகளும் சேர்ந்திருந்த பகுதிகள் கடலால் கொள்ளப்படா தொழிந்தன. சிங்களம், சிங்கப்பூர் முதலிய தீவுகளைக் காணின் இச் செய்தி தெள்ளிதின் விளங்கும். அஃதேபோல், தென்னிந்தியாவும் மலையடர்ந்த நாடாகும். கிழக்கில் கிழக்குத் தொடர்ச்சி மலையும், மேற்கில் மேற்குத் தொடர்ச்சி மலையும் எல்லையாக அமைந்து;

கன்னியா குமரியில் கூடுகின்றன. இவ்விரண்டு பெருமலைத்தொடர்களும் தென்னிந்தியாவுக்கு உயரிய மதிலேபோல் அமைந்திருக்குங் காரணத்தினால், இதனைக் கடல்கொள்ள முடியாமற் போயிற்று என்னலாம். இத்தேசத்தின் கிழக்கிலும் மேற்கிலும், கங்கை சிந்து என்னும் பேராறுகள் பாய்வதனால், அவற்றின்மூலமாகக் கடல் உள்ளேறுவதாயிற்று. அதனால், இந்தியாவின் தென்பாகம் ஒரு தீபகல்பமாக நிலைத்திருக்க நேர்ந்தது. ஆதலின், தென்னிந்தியா, கடலாற் கொள்ளப்படாமல் நிற்கின்றது எனச் செப்பலாம்.

இஃது இவ்வாறிருக்க, சரித்திர ஆசிரியர் சிலர், 'மக்கள், பண்டைக் காலத்தில் மத்திய ஆசியா கண்டத்தினின்றும் பிரிந்து, ஆப்கானிஸ்தானத்தின் வழியே இந்தியாவுக்கு வந்தனர்' என்பர். மற்றொரு சாரார், 'அம் மக்களுட்சிலர், மங்கோலியா நாட்டின் வழியாகக் கங்கைப் பிரதேசத்திற்கு வந்து சேர்ந்தனர்' என்பர்; அவ்வாறு வந்த ஆரியருள் ஒரு பிரிவினரே தமிழராயினர் என்றுங் கூறுவர். ஆரியர் பிரிந்தே தமிழராயினர் எனின், அவ்விருவருக்கும் சில ஒற்றுமைகள் இருத்தல்வேண்டும். அவை, உருவ அமைப்பு, நிற அமைப்பு, மொழியமைப்பு முதலாயினவாம்.

ஆரியர் மஞ்சள் நிறம் வாய்ந்தவர்; தமிழர் செப்பு நிறம் வாய்ந்தவர். ஆரியமக்கள் முக-

வடிவிற்கும் தமிழ்மக்கள் முகவடிவிற்கும் எத்துணையோ வேற்றுமையுண்டு. பண்டைக்காலத் தமிழ் மொழிக்கும் வடமொழிக்கும் இயைபு ஏதும் இல்லை என்னலாம். வழக்க ஒழுக்கங்களும் இவ்விருதிறத்தாருக்கும் வேறுபட்டனவே யாம். ஆதலின், இவ்விருவரும் ஒரே இடத்தினின்றும் வந்தவர் என்பது பொருந்துவதாகக் காணேம்.

அவ்வாறாயின், தமிழர் இருந்த இடந்தான் யாது? என்னும் கேள்விக்கு, அவர்கள் தென்னிந்தியாவிலும், அதை அடுத்துப் பரந்திருந்த நிலப்பரப்பிலும் வாழ்ந்திருந்தவர்கள் என்றே கூறலாம். அதனால், தமிழர் தென்னிந்தியாவின் பழங்குடிகளே என்பதுபோதரும். இதனை விளக்க மற்றோர் உதாரணம் தருவோம்:

ஆஸ்திரேலியாக் கண்டத்தின் தென் கோடியும், ஆபிரிக்காக் கண்டத்தின் தென் கோடியும் சற்றேறக் குறைய ஒரே அளவில் அமைந்துள்ளன. அப் பெரிய நிலப்பரப்பைக் கடல்கொள்ளவே, அங்கிருந்த தமிழர், மேலேறி, தென்னிந்தியாவில் வந்து தங்கியிருத்தல் கூடும். அக்காலத்தும், ஒருபிரிவினர் தென்னிந்தியாவிலேயே வாழ்ந்திருந்தனர் என்று துணிந்து கூறலாம்.

பெலுசிஸ்தானத்தின் தென் கோடியில் வாழும் பழங்குடிகள் வழங்கும் மொழி, தமிழ் மொழியின் சிதைவு என்பர். அதனால், ஆரிய

மக்களுள் ஒரு பிரிவினர் தமிழராயின், ஆப்கானிஸ்தானத்தில் வழங்காத தமிழ்மொழி, பெலுசிஸ்தானத்தில் வழங்குதல் எவ்வாறு? ஆகவே, தெற்கே யிருந்த தமிழர், வடக்கே யேறி நிலைத்து வாழ்ந்திருந்தனர் என்பதே உறுதியுடையது.

தமிழர்களையும், தமிழரைச் சார்ந்து விளங்கிய தெலுங்கர், கருநடர், மலையாளர், துளுவர் முதலியோரையும் திராவிடர் என்று ஆரியர் வழங்கினார்.

பண்டைக் காலத்தில், ஆரியர், திராவிடர் என்னும் இரு பிரிவினரும் தனித்தனியே சிறக்க வாழ்ந்திருந்தனர். பின்னர், வழக்க வொழுக்கங்களாலும், சமய வுணர்ச்சியினாலும், மொழியினாலுங் கலந்து உறவாடினமையின், இக்காலத்தில் இந்தியாவில் வாழ்பவர் திராவிட-ஆரியரே யாவர். கலப்பில்லாத திராவிடரும் இலர்; கலப்பில்லாத ஆரியரும் இலர் என்னலாம். ஆகவே, பண்டைக் காலத்தில் இருந்த தமிழர், தென்னிந்தியாவிலும், அதன் தெற்கே கடல் கொள்ளப்பட்ட பழைய நாடுகளிலும் வாழ்ந்திருந்த மக்கட்பிரிவின ராவர் என்பது தெளிவாகும்.

2. நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செல்வாளியா? சிக்கனக்காரனா?

பாண்டிவள நாட்டில் பண்டைக் காலத்தே மணிமுடிதாங்கிய மன்னனொருவன் செங்கோல் செலுத்திச்சிறப்புறவிளங்கியிருந்தான். அவன், கல்வியறிவு பெரிதும் உடையவன்; எத்தனையும் ஆராய்ந்து பார்ப்பவன்; எதனையும் உய்த்துணர்ந்து, அதன் உண்மையைத் தேர்பவன்; கற்றோரைத் தன் கண்ணேபோற் கருதிக் காக்கவல்ல நல்லியல்பு வாய்ந்தவன். அதனால் இன்னிசைப் புலவ ரனைவரும் அவன் அவைக்கண் குழுமி அன்புற்று வாழ்வா ராயினர். அரசன் தன் மனத்தில் தோன்றும் ஐயப்பாடுகளை அவர்கள் முன்னிலையில் வெளியிட்டுத் தீர்த்துக்கொள்ளும் அவாவுடையவன். அவன் பெயர் பாண்டியன் மாகீர்த்தி யென்பது.

மாகீர்த்திக்கு மக்கள் இருவர் இருந்தனர். அவ் விருவர்க்கும் மனப்பான்மை வேறுபட்டிருந்தது. ஒருவன், தன் தந்தை தனக்கு வழங்கும் பொருளனைத்தையும் செலவுசெய்து மகிழ்ச்சி யடைவான். மற்றவனோ, தனக்குக் கிடைக்கும் பொருளனைத்தையும் சிதறவிடாமல் சேர்த்து வைத்து, அதனைக் கண்டு கண்டு மனம் பூரிப்பான். அவ்விருவர் செயல்களையும் கண்ணுறக் கண்ட காவலன், 'என்னே இவர்தம் இயல்பு! ஒன்றுக்கொன்று, மாறான வழியை-

யுடையன. செல்வாளி தன் நாட்டுக்கு நன்மை விளைப்பவனா? சிக்கனக்காரன் தன் நாட்டிற்கு நலம் பயப்பவனா? இவற்றின் உண்மை நன்கு புலப்பட அறிதல் வேண்டும்' என்று ஆராய்வானானான். அவனுக்கு ஏதும் புலப்படவில்லை; அதனால், அவன் தன் அவைக்கண் சிறந்து விளங்கிய புலவர்களுள் இருவரை நோக்கி, ஒரு நாள் வினவுவானாயினன்.

'இன்னிசைப் புலவீர், என் மனத்துள் ஓர் ஐயப்பாடு உளது; அதனை நீவிர் ஆராய்ந்து தீர்த்தல் வேண்டும். இவ்வுலகில் மானிடர்க்கு மனப்பான்மை மாறுபடுகின்றது; அதனை மனத்தின் இயல்பு என்கின்றனர். ஒருவன் பெருஞ் செலவாளியாக இருக்கின்றான்; மற்றொருவன் மிக்க சிக்கனக்காரனாக இருக்கின்றான். இவ்விரண்டு இயல்புகளும் ஏறுமாறானவை. இவற்றை அவனவனுக்கு உற்ற மனப்பான்மை என்னலாம். இவ் விருவரின் மனப்பான்மையையும் மாற்ற இயலாது. ஆயினும், இவ்விருவருள் தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் யாவன் என்னுஞ் செய்தியே என் மனத்துக்கண் எழுந்த ஐயப்பாடாகும். அதனை நீவிர் இருவீரும் ஆராய்ந்து சொற்போரின் மூலமாக எனக்குத் தெளிவித்தல் வேண்டும்' என்றான்.

கீரன், நக்கீரன் என்னும் புலவர் இருவரும் அவ் வையப்பாட்டைத் தீர்த்தற் பொருட்டுச் சொற்போர் புரிவாராயினர்:

கீரன்—‘பாண்டி வேந்தே, யாணிடன் ஒருவன் பெறத்தக்க பேறுகள் நான்காகும். அவை, அறம் பொருள் இன்பம் வீடு என்பன. அவற்றுள், அறமும் பொருளும் இன்பமும் இம்மையில் அடையக் கூடியவை. அம் மூன்றனுள்ளும் முந்துறச் சிறந்து நிற்பது பொருளேயாம். ஒருவன் அறஞ் செய்தற்கும், இன்பம் துய்த்தற்கும் பொருளொன்றே ஆதாரமாகும். ‘ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள் ஏனை யிரண்டும் ஒருங்கு’ என்றார் வள்ளுவனார்.

அஃதாவது, அறத்தான் வரும் பொருளைப் பெரிதுந் தேடினவர்க்கு மற்றைய அறமும் இன்பமும் ஒருசேர எளிதில் வந்தடையும் என்பதாம். ஆதலின், அத்தகைய பொருளை வீணிற் செலவு செய்யாது, எவ்வாற்றானும் அதனைக் காத்து வாழ்வதே பேரறமாம். ‘பொருடனைப் போற்றி வாழ்’ என்னும் மூதுரையும் உலகில் வழங்குகின்றதே. பெருஞ் செல்வாளியைக் காட்டினும் பெருஞ் சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நற்பயன் விளைப்பவன் என்பது என் கருத்து. ஆதலின், அதற்கான நியாயங்களை எடுத்துக் காட்டுகின்றேன்:

முதலாவது—சிக்கனக்காரன், பொருள் பல வகையினாலுஞ் சிதறுண்டு போகாமல், ஓரிடத்திலேயே முதற்பொருளாகச் சேர்ந்திருக்கச் செய்துவருவதனால், அவன் நாட்டின் செல்வம்,

அவன் நாட்டிலேயே நிலைத்திருக்கும். அதனால், பொருள்நூலின் கொள்கைப்படி, சிக்கனக்காரன் தன் நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவனாகின்றான். பிற நாடுகளுக்கு நம் நாட்டுப் பொருள்கள் பற்பல வகையில் செல்லுமாயின், நம் நாடு நாளடைவில் நலங்குன்றி வறுமையடையும். ஆதலின், சிக்கனக்காரன் செய்கை, பொருள்நூலின் முறைக்குப் பொருந்தியிருக்கின்றது. பிறநாட்டு வேந்தர் நம் நாட்டின்மீது படையெடுத்து வருங்காலத்தும், பஞ்சம் முதலிய இடுக்கண்கள் நேருங் காலத்தும், பொருள் பெரிதும் வேண்டப்படுவதாகும். அதனால், சேமித்து வைக்கப்பெறும் பொருளே நாட்டிற்கு நலம்பயப்பதாகும்.

இரண்டாவது — பெருஞ் செலவாளியின் செய்கை அறநூல் முறைக்கு மாறானதாகும்.

'ஆன முதலில் அதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப் — போனதிசை
எல்லார்க்குங் கள்ளனாய் ஏழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு.'

ஆதலால், பெருஞ் செலவாளியின் செய்கை அறிவுடையோரால் வெறுத்து ஒதுக்கத்தக்கதே யாகும்.

மூன்றாவது — பொருளினிடத்துப் பற்றில்லாத ஒருவன் அதனைப் பற்பல வகையில் செலவழிக்கத் துணிவான். பொருள், தீச்செய்கைக்கே பெரும்பாலும் காரணமாயிருத்தலின்,

செலவாளி அதனைத் தீச்செயலில் செலவிடப் பின்னிடான். நற்செயலுக்கும் பொருள் காரணமாகு மன்றே; பெருஞ் செலவாளி அப்பொருளை நற்செயலிற் செலவு செய்யானே எனின், செய்தலுங் கூடும். ஆயினும், தீச்செயலில் தன் பொருளைச் செலவிடாமல் இருக்க அவனைத் தடுப்பது ஏதுமில்லையே. சிக்கனக்காரன் நற்செயலில் தன்பொருளைச் செலவிட்டுப் புகழைத் தேடிக்கொள்ளாவிடினும், தீச்செயலில் அதனைச் செலவுசெய்து இகழ்வைத் தேடிக்கொள்ள இடந்தரமாட்டான்.

நான்காவது—செலவாளி, சிக்கனக்காரன் ஆகிய இவரிருவரும் நேர்மாறாக இருந்து, தம் நாட்டுக்குச் சில வழிகளில் நன்மையையும், சில வழிகளில் தீமையையும் புரிந்து வருகின்றனராயினும், மிக்க செலவாளியைவிட மிக்க சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் ஆகின்றான். அஃது எப்படியெனின், தேனீக்கள் காலமறிந்து மலர்தோறும் சென்று வருந்தி யுழைத்து, தேனைத் திரட்டிக் கொண்டு போய்க் கூட்டில் சேர்த்து வைப்பதுபோல, சிக்கனக்காரன் ஒல்லும் வகையால் செல்வம் தேடித் தன் பேழையில் சேர்த்து வைக்கின்றான். ஈக்கள் தேடிவைத்த தேன் பலருக்கும் பயன்படுவதுபோல, சிக்கனக்காரன் இட்டிவைத்த பொருள், அவனுக்குப் பின்னர், பலருக்கும் பயன்படுவதாகும். ஆகவே, சிக்கனக்-

காரன் தன் வாழ்நாள் வரையில் தான் தேடிய பொருளினால் ஒரு பயனும் அடையாமற் போயினும், பின்னர் அதனால் பலர் பயனடைகின்றனர். பெருஞ் செலவாளியோ எனின், பொருளினாலாகிய பயனைத் தானிருக்குமளவும் துய்க்கின்றானில்லை; சிறிது காலமே அதன் இன்பத்தை அனுபவிக்கின்றான்.

ஐந்தாவது — சிக்கனக்காரன் ஒருவகையில் இன்பமும் அடைகின்றான். தன் பொருளைப் பார்த்துப் பார்த்து இன்புறுகின்றான். செலவாளியோ இவ்வகையான இன்பம் எய்துதல் அரிது. ஏனெனின், பெருஞ்செலவினால் தன் கைப்பொருள் அனைத்தையும் செலவிட்ட பிறகு மேன்மேலும் வருவாயில்லாத காலத்தில் துன்புறுவான். பலருக்கும் வழங்கிய காரணத்தால் அவன் அடைந்த மகிழ்ச்சியினும், பொருளற்ற காலத்தில் அடையும் வருத்தமே மிகப் பெரிதாகக்காணும்; இம்மட்டோ, பொருள் மிக்கிருந்த காலத்துத் தான் மேற்கொண்டிருந்த பழக்கவழக்கங்களெல்லாவற்றையும், வருவாய் குன்றியவிடத்துத் தான் விடக்கூடாமையின், மிக்க துன்பமே அடைவான்; தான் உலகத்தில் இருந்து என்னபயன் என்றும் எண்ணுவான். எப்பொழுதும் வறுமை நிலையிலேயே வாழ்ந்துகொண்டிருப்பவனது நிலைமையைக் காட்டிலும், முதலில் செல்வனாயிருந்து, பின்னர் வறுமையடைந்தவனது நிலைமை, அம்மம்ம, கொடிது

கொடிது! சிக்கனக்காரன், செல்வம் இருந்தும், வறிய நிலையிலேயே வாழ்ந்து வந்தவனாதலால், அவனுக்கு எவ்விதத் துன்பமும் இல்லையாம். மேற்போந்த நியாயங்களால், சிக்கனக்காரனே தன் நாட்டுக்கு நலம் பயப்பவன் என்பது என் கொள்கை.

கீரன் கூறிய கட்டுரையைக் கேட்ட நக்கீரன் எழுந்து தன் உட்கோளை எடுத்து உரைப்பானானன்:

மன்னர் மன்ன, கீரர் கூறிய உரையின்படி இவ்வுலகில் ஒருவன் அடையத்தக்க பெரும் பேறுகளுள் பொருளே முதன்மை யானது என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை.

'வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்'

என்பது உண்மை யுரையே. அத் தகைய பொருளை எவ்வகையிலும் இம்மியும் செலவு செய்யாமல் சேர்த்து வைக்கும் சிக்கனக்காரனை, வரையாது வழங்கும் வள்ளலைக்காட்டிலும் தன் நாட்டிற்குப் பெரும்பயன் விளைப்பவன் எனக் கீரர் கூறியது எனக்குச் சிறிதும் உடம்பாடன்று.

முதலாவது — பொருள்நூலின் கொள்கையின்படி ஒரு நாட்டின் பொருள் நாற்புறமும் பரவச் செய்வதே, அந் நாட்டின் நலத்திற்கு அடுத்ததென்பதைக் கீரர் மறந்தனர்போலும்! ஒரு நாட்டில் சிலர் பெருஞ்செல்வராய் இருக்கப்

பலர் மிக்க வறியர்களா யிருப்பது அந்நாட்டிற்கு நலம் விளைப்பதன்று. எந்நாட்டில் மக்கள் அனைவரும் ஒரே நிலையில் இருக்கின்றார்களோ, அந்நாடே சிறந்ததாகும். சிக்கனக்காரன் பொருளையெல்லாம் பிறரிடத்துப் பரவாதபடி தன்னிடத்திலேயே சேர்த்துவைத்துக் கொண்டிருப்பானாயின், அப் பொருளினாலாகிய பயனை அந்நாடு முற்றும் இழந்துவிடும். இவ் வுண்மையை யுணர்ந்தே, நம் பெரியோர் நல்ல ஏற்பாடுகள் பலவற்றைச் செய்திருக்கின்றனர்.

திருமணம் முதலிய சிறந்த செயல்களை நடத்துங் காலத்தில் செல்வர்கள்—இயம், இன்னிசை, நாட்டியம் முதலியவற்றில் தேர்ச்சி பெற்றவர்களை அமைத்துப் பொருள் தந்து, சிறப்புற நடாத்தும் செயலை மேற்கொண்டிருந்தனர் என்று தெரியவருகின்றது. பெருஞ்செல்வனான ஒருவன் தன் பொருளனைத்தையும் சேமித்து வைத்திருப்பானாயின், அது மற்றையோர்க்குப் பயன்படாமற் போகுமன்றே! அன்றியும், பெரிதும் முயன்று கற்ற இன்னிசையாளர் முதலியோர்க்குப் பிழைப்பின்றி, அன்னார் பெரிதும் வறுமையுற்றுத் துன்பம் எய்துவர்.

இரண்டாவது — செலவாளியின் செய்கை அறநூலுக்கு முரண்பாடாகும் என்று நீரர் கூறியது வியப்பினும் வியப்பாகும். அவர், தம் கொள்கையை நிலைநிறுத்த, 'ஆன முதலில்

அதிகஞ் செலவானால்' என்னுஞ் செய்யுளை எடுத்துக் கூறினார். இவ்வறநூலே எனக்குந் துணைசெய்யாமற் போகவில்லை.

'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள் — கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் யாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம்.'

என்னுஞ் செய்யுளைக் கீரர் கேட்பாராயின் யாது விடை கூறுவரோ அறியோம். அதனால்; பொருளைச் சேர்த்துவைக்கும் சிக்கனக்காரன் செய்கை, அருவருக்கத் தக்கதென்பது தெளிவாகுமன்றே.

மூன்றாவது—பெருஞ் செலவாளி, தீமைக்குக் காரணமான பற்பல கொடிய செயல்களைச் செய்யவும் பின்னிடான் என்று கீரர் கூறியது சிறுவர் வாயினும் சிரிப்பை விளைவிக்கும்; அவன் தீச் செயலுக்கே தன் பொருளைச் செலவிடுவான் என்பது பொருந்தாதன்றே! குமணன் என்னும் அரசன் தன் நாட்டைத் துறந்து காட்டில் வதிந்தகாலத்தும், வறுமையால் வாடித் தன்னைத் தேடியடைந்த பெருந்தலைச் சாத்தனார் என்னும் புலவர்க்குத் தன் தலையையும் கொடுக்க உடம்பட்டானன்றே. அதனால், வள்ளலாவான் தன் உயிரையும் வழங்கப் பின்னிடான் என்பது வெளியாகும்.

நான்காவது — சிக்கனக்காரன் தேனீக்களைப்போல மெய்வருந்திப் பொருளைத் தேடி

அதனைச் செலவு செய்யாமல் சேர்த்து வைப்பதனால், அப்பொருள் அவன் இறந்த பின்னர்ப் பலருக்கும் பயன்படுவதாகும் என்று கீரர் கூறியதும் ஒரு நியாயமாமோ? வள்ளலாகிய செலவாளி தான் வாழும்போதே பலருக்கும் வழங்கித் தானுந் துய்த்து அப் பொருளைப் பயன்படுத்துவது சிறந்த செயலன்றோ?

'உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் றெண்ணப் படும்'

என்னுஞ் செய்யுளுக்கு இசையச் சிக்கனக்காரன் சேர்த்து வைத்த பொருள் சிதறி அழிந்து போகுமன்றோ?

ஐந்தாவது—பொருட்பேய் பிடித்தபேராசையுள்ள ஒருவன் அப்பொருளைச் சேர்ப்பதற்கு எவ்வகைப்பட்ட தீச்செயலையும் செய்யப் பின்னிடான். கொலை முதலிய குற்றங்களைச் செய்யவும் அஞ்சான். சிக்கனக்காரன் தான் இறக்குமளவும் தன் பொருளைப் பார்த்துக்கொண்டே இன்பமடைகின்றான் என்று கீரர் கூறினர். வள்ளலோ தன் வாழ்நாளில் தான் ஈட்டிய பொருள்களைப் பலர்க்கும் வழங்கிப் பெருமகிழ்வடைகின்றான்.

ஆறாவது—அறத்திற்கும் இன்பத்துக்கும் பொருள் காரணமாகும்; அதுவே வீட்டிற்கும் ஒருவாறு காரணமாகும். ஆதலின், பொருளை

நல்வழியிற் செலவழிப்பவனே அறம் இன்பம் வீடு ஆகிய இவற்றை அடையப் பெறுவான். சிக்கனக்காரன் இவற்றில் ஒன்றையேனும் பெறான்: ஆதலால், செலவாளியின் செயல் இவ் வுலகத்திற்கு உபகாரமாகவும், தனக்கே பெரும்பயனை விளைப்பதாகவும் இருத்தலினால், சிக்கனக்காரனைவிடச் செலவாளியே சிறந்தவனாவான் என்பது என் சித்தாந்தம் என்றான்.

இவ் விருவரும் கூறிய பேருரைகளைக் கேட்டு முடிவு தேறாதாகி மன்னன் மனந்தடுமாறி நிற்கையில், கீரன்கொற்றனார் என்னும் புலவர் ஆராய்ந்து முடிவு கூறுவாராயினர்:

'மன்னர் மன்ன, இன்னிசைப் புலவர்களாகிய இருவரும் நேர்மாறான கருத்தையே கூறினர். கீரர் பொருளைச் சேர்த்துவைக்கும் சிக்கனக்காரனே சிறந்தவனென்று கருத்துக் கொண்டனர். நக்கீரர் வரையாது கொடுக்கும் வள்ளலே சிறந்தவனென்று வாதித்தனர். அவரவர் தத்தம் கூற்றுக்கேற்ப மேற்கோளுங் காட்டினர்.

'செல்வம் உலக இன்பத்திற்கு முக்கிய காரணமாகும். அதனைச் செலவு செய்யாது வறிதே வைத்திருப்பதனால் பயனின்றாம். செலவாளி தன் வருவாய்க்குத் தக்க செலவு செய்தல் வேண்டும். வருவாய் சுருக்கமாகவும் செலவு பெருக்கமாகவும் இருப்பின், அச் செலவாளி இன்னலுறுவான். ஆதலால், தன்

வருவாயை நோக்கி ஒருவன் செலவு செய்தல் வேண்டும். தேடிய பொருள் அனைத்தையும் புதைத்து வைப்பவன் பூதம் போல்பவன் ஆவன்.

இவ்வாறு கீரன் கொற்றனார் கூறிய முடிவுரையைக் கேட்ட முடிமன்னன் உண்மை தேர்ந்து உவப்புற்றான். அதனால், அரசன், 'செலவாளியே இவ் வுலகத்திற்கு மிகச் சிறந்த துணைவனாவன்' என்பதை அனைவர்க்கும் விளங்கக் கூறினான். 'செலவாளி தன் செயலினால் தான் ஒருவன் துன்புற்றாலும், பலருக்கும் பயன் பட்டு, அவரனைவரையும் இன்புறச் செய்வதனால் செலவாளியே சிக்கனக்காரனைவிடத் தன் நாட்டிற்கு மிக்க நலம் புரிபவ னாகின்றான் என்பது தேற்றம்' என்றான்.

3. மாதவி

தண்டலை மயில்க ளாடத்
தாமரை விளக்கந் தாங்கக்
கொண்டல்கள் முழவி னேங்கக்
குவளைகண் விழித்து நோக்கத்
தெண்டிரை யெழினி காட்டத்
தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட
மருதம்வீற் றிருக்கும் மாதோ.

ஆறுபா யரவம் மள்ளர்
ஆலைபா யமலை ஆலைச்
சாறுபா யோசை வேலைச்
சங்குவாய் பொங்கும் ஓதை
ஏறுபாய் தமரம் நீரில்
எருமைபாய் துழனி இன்ன
மாறுமா றாகித் தம்முள்
மயங்குமா மருத வேலி.

இத்தகைய சிறப்புக்கள் அனைத்தும் இடையறாது அமையப்பெற்ற சோழவள நாட்டுக்கு, முற்காலத்தில் உறையூர் தலைநகராகவும், புகார் துறைநகராகவும் விளங்கி யிருந்தன. அந்தக் காலத்தில், கரிகால்வளவன் என்னும் மன்னர் மன்னன் செங்கோல் செலுத்திச் சிறப்புற வாழ்ந்திருந்தான். அவனாட்சியில், புகார் நகரம்

பெரிதும் பொலிவுற்று விளங்கிற்று. அந் நகர், மருவூர்ப் பாக்கம் எனவும், பட்டினப் பாக்கம் எனவும் இரு பிரிவினதாய் இலகி யிருந்தது. அவ்விரண்டு பிரிவினுள், மருவூர்ப்பாக்கத்தில், தெருக்கள் பல திகழ விளங்கியிருந்தன. ஒரு தெருவில், தூசும் துகிரும், ஆரமும் அகிலும், முத்தும் மணியும் முதலிய பலவும் விற்கப்பெற்றன. ஒருமறுகில், எண்வகைக் கூலங்களும் நிரைநிரை யாகக் குவித்திருந்தன. மற்றொரு மறுகில், பிட்டு வாணிகர், அப்ப வாணிகர், கள் விலைஞர், உமணர், பரதவர், வாசவர், பாசவர், மைந்நிணவிலைஞர் முதலியோர் வதிந்திருந்தனர். ஆங்கு, கரும்பொன், செம்பொன், வெண்பொன், பைம்பொன் முதலிய பொன்னினால் பணிசெய்வோரும், அரதனங்களால் அருங்கலன் அமைப்போரும், ஓவியக்காரரும், பாவைசெய்வோரும், துன்னகாரரும், தோலின்துன்னரும், கிழியினும் கிடையினும் தொழில் பல செய்து துலங்குவோரும் வாழ்ந்திருந்தனர்; குழலினும் யாழினும், குரல் முதல் ஏழும் பயிலும் பாணரும் பயின்று வாழ்ந்தனர். இவர்களே யன்றி, ஏவல்வினை செய்வோர் பலர் ஆண்டு வதிந்தனர். பூவும், புகைப் பொருளும், விரைப்பொருள் பிறவும் விற்போர், நகரவீதியில் நாளும் விலை கூறித் திரிவர். இத்தகைய வளம் பல நிறைந்து மருவூர்ப்பாக்கம் வயங்கியிருந்தது.

இனி, பட்டினப் பாக்கத்தின் அமைதி கூறுவோம்:

அங்கு, அரசர் வீதியும், அந்தணர் வீதியும், வணிகர் வீதியும், உழவர் வீதியும், பீடிகை மறுகும், பெருந்தேர் வீதியும் அமைந்திருந்தன. ஒருபால், கணிகரும், மருத்துவரும், நாழிகைக் கணக்கரும் கலந்து வாழ்ந்திருந்தனர். ஒருபால், முத்துக்கோப்பாளரும், சங்குவளை சமைப்போரும் தங்கியிருந்தனர். மற்றொருபால், சூதர் மாகதர் வேதாளிகர் வசித்திருந்தனர். ஒருசார், கரி பரிகளை நடத்துநரும், கடுங்கண் மறவரும், தேர் வலவரும் செறிந்திருந்தனர். ஒருசார், ஆடல்மகளிரும், பூவிலைமகளிரும் பொலிவுற்றிருந்தனர். மற்றொருசார், நால்வகைக் கருவியில் நல்லிசை நவில்வோரும், நகைவேழம்பரும், பிறரும் நலமுற்றிருந்தனர்.

அக்காலத்தில், ஆடல்பாடல்களில் தேர்ச்சியுற்ற சித்திராபதி என்னும் நாடகக் கணிகை, தன் மகள் மாதவியை, ஐந்து யாண்டு முதல் பன்னிரண்டு யாண்டு அளவும் ஆடல் பாடல் அவிநயம் முதலியவற்றில் பயில்வித்து, ஒரு நன்னாளில் அரசவைக்கண் அவளை அரங்கேற்றலாயினாள்.

அரசவையில் அரசன் தன் அரியணையில் அமர்ந்திருப்ப, அமைச்சர் முதலியோர் அருகிருப்ப, மாதவியை அவ்வவைக் களத்திற்கு உய்த்துச்சென்றனர். அப்பொழுது, பலவகைக்

கூத்துக்களிலும் வல்ல ஆடலாசிரியனும், யாழ் குழல் முதலியவற்றில் இசைபெற்ற இசையாசிரியனும், நாடகத் தமிழில் நன்கு பயின்று நாடகக்காப்பியம் இயற்றவல்ல நன்னூற் புலவனும், யாழும் குழலும் இசைவன கேட்பக் குறியறிந்து வாசித்தலில் வல்ல தண்ணுமையாசானும், அத் தண்ணுமை யாசானுடன் பொருந்தி வழுவின்றி இசைக்குங் குழலாசானும், நரப்பின் அடைவு கெடாது, பண்ணின் நீர்மை வழாது. ஏழிசை பயின்ற யாழாசிரியனும் உடன்வர, மாதவி நாடக அரங்கம் நண்ணினாள். அவ்வரங்கத்தில், ஓவிய விதானம் அமைத்து, மாலைத்தாமம் நாற்றி, பொருமுக எழினியும் ஒருமுக எழினியும் வகுத்து அமைத்திருந்தனர். ஆங்கு, தலைக்கோலை எதிர்முகமாக வைத்து, குயிலுவ மாக்கள் நெறிப்பட நிற்ப, ஆடி முதிர்ந்த தோரிய மகளிர் இடப் பக்கத்துத் தூணைச் சேர்ந்திருப்ப, மாதவி வலக்கால் முன் மிதித்தேறி வலத்தூண் சேர்ந்து, வாரம் இரண்டும் பாடினாள். அவ் வாரத்தின் இறுதியில் குழலும், குழலின்வழி யாழும், யாழின்வழித் தண்ணுமையும், தண்ணுமையின்வழி முழவும், முழவின்வழி இடக்கையும், பருந்தும் நிழலும் போல், ஒன்றி நின்று இயம்பின. இயம்பவே, மாதவி, நாட்டிய நன்னூல் நன்கு கடைப்பிடித்து, ஆடல் பாடல் அபிநயம் முதலியன நிகழ்த்தினாள். அரசன் அவளது ஆடல் பாடல்

முதலியவற்றைக் கண்டு வியந்து, அவளுக்கு ஆயிரத்தெண் கழஞ்சு பரிசமாகத் தலைக்கோல் தந்தனன்.

தலையரங்கேறித் தலைக்கோல் பெற்ற மாதவியை மகிழ்வுடன் மனைக்குக் கொண்டு சென்றனர். சென்றதும் சித்திராபதி, அரசன் தலைக்கோற் பெயருடன் தந்த மாலையைத் தன் பாங்கி கையிற் கொடுத்து, நகர நம்பியர் திரிதரும் மறுகில், 'இம் மாலைக்கு ஆயிரத்தெண்கழஞ்சு பொன்னைத் தருபவர் மாதவிக்கு மணாளராவர்' என்று பகருமாறு நிறுத்தினள். அப்பொழுது அம் மறுகின் வழியே சென்ற கோவலன் அதனை யறிந்து, அம் மாலையை வாங்கி, அப் பாங்கியோடு மாதவியின் மனையை யடைந்தான். அடைந்த அவன் மாதவியின் அழகிலும் ஆடல் பாடல்களிலும் இடுபட்டு, தன் மனையையும் மனைவியையும் மறந்து, ஆண்டே தங்கி வதிவானாயினன். இது நிற்க.

புகார்நகரில் யாண்டுதோறும் நடைபெறும் இந்திரவிழவு நிகழ்வுறுவதாயிற்று. ஆகலின், சித்திரைத் திங்கள் சித்திரை நாளில், மறக்குடி மகளிர் ஒருங்கு கூடி, இரு பெரும் பாக்கத்தின் இடைநிலமாகிய இளமரச் சோலையில், கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும் நடுக்கின்றி நிலையுறு நாளங்காடியில், காவற் பூதத்தின் பீடிகையைச் சார்ந்தனர். சார்ந்து, புழுக்கலும் நோலையும்

விழுக்குடை மடையும் பூவும் புகையும் பொங்கலும் சொரிந்து, துணங்கும் குரவையும் ஆடி, 'பெருநில மன்னன் இருநில முழுதும், பசியும் பிணியும் பகையும் நீங்குக ; மழையும் வளனும் மல்குக' என வாழ்த்திப் பெயர்ந்தனர்.

பின்னர், மருவூர்ப் பாக்கத்து மறங்கெழு வீரரும், பட்டினப் பாக்கத்துப் படைகெழு வீரரும், வெற்றி வேந்தர்க்குக் கொற்றம் உண்டாக வேண்டி, 'உயிர்க்கடன் தந்தோம், கொள்க' என்று, தமது பசுந்தலையை அரிந்து பலியாகத் தந்தனர்.

ஐம்பெருங் குழுவும், எண்பேராயமும், அரச குமரரும், பரத குமரரும், களிற்றின் மேலும் கடும்பரியின் மேலும் தேரின்மேலும் இவர்ந்து ஒருங்கே வந்து, பண்டசாலைகளிலிருக்கும் பொதிகளைக் களவு செய்வோரை வருத்தி நடுக்குவிக்கின்ற வெள்ளிடை மன்றத்தும், கூனும் குறளும் ஊமும் செவிடும் அழுகுமெய்யாளரும் முழுகி நீராடின் நன்னிறம் பெற்று நலமுறுகின்ற இலஞ்சி மன்றத்தும், நஞ்சுண்டோரும் நாகந் தீண்டினோரும் பேய்கொண்டோரும் சூழ்வந்து வணங்கிக் கடுந்துயர் தீரும் கல்மன்றத்தும், தவமறைத் தொழுகுந் தன்மையோரையும் அவமறைந்தொழுகும் அரிவையோரையும் அரசைக் கெடுக்கும் அமைச்சரையும் பொய்க்கரி கூறும் புல்லரையும் கைக்கொள் பாசத்திற் கைப்பற்றிப் பூதம்

புடைத்துண்ணும் பூதசதுக்கத்தும், அரசுகோல் கோடினும் அறச்சவை கோடினும் நாவில் நவிலாது நீருகுத்து அழும் பாவை நின்ற பாவைமன்றத்தும் அரும்பலி தந்தனர்.

பின்னர், வச்சிரக்கோட்டத்து முரசினை யானைமீதேற்றி, இந்திர விழவின் தொடக்கமும் முடிவும் அறிவித்து, கருநிலைக் கோட்டத்தில் நெடுங்கொடி எடுத்து, தோரணம் நாட்டி, பூரணகும்பம் வைத்து, பாவைவிளக்கு நிறுத்தி, சுண்ணம் தெளித்து அழகுறுத்திய நெடுந்தெருவிற் சென்று, பொன்னி நன்னீர் பொற்குடத்தேந்தி, விண்ணவர் தலைவனை விழுநீர் ஆட்டினர். ஆட்டி, 'வெற்றிமன்னன் கொற்றங் கொள்க' எனக் கூறி, வணங்கி வாழ்த்தெடுத்தனர்.

அவ் விழாநாட்களில் கண்ணுதல் கோயிலிலும், செவ்வேள் கோயிலிலும், நம்பி மூத்தபிரான் கோயிலிலும், மாயோன் கோயிலிலும், வாசவன் கோயிலிலும் மாமறை மரபின் ஓமஞ் செய்தனர். அன்றியும், வசுக்கள், திவாகரர், மருத்துவர், உருத்திரர் முதலிய வேறு வேறு கடவுளர்க்கும் சாறு நிகழ்த்தினர். அறவோர் பள்ளியிலும், அறச்சாலையிலும் திறவோர் கூடி, அறவுரை கூறினர். சிறைப்பட்ட மன்னரை அடித்தளை நீக்கினர். யாழோர் முதலியோர் இசை நவின்றனர். இவ்வாறே மறுகும் முடுக்கும் விழவுக்களி சிறந்தன.

அந்நாட்களில் நகர மாந்தர், மல்லிகை முல்லை முதலிய நறுமலர்களைச் சூடிப் பூமலி கானத்துப்பொழிலாட்டயர்ந்து, நாளங்காடியில் நறுமணம் புக்கு, நகையாடு ஆயத்தொடு திரிந்தனர். கோவலன் மாதவியோடு கூடி, புகையும் சாந்தும் புலராது சிறந்து, நாளங்காடியிலும் நறுவிரைப் பொழிலிலும் திரிந்து, அன்புற்று இன்புற்று இருந்தான்.

இந்திர விழவின் கடைநாளில், அரசிளங்குமரரும், அமைச்சர் குழாமும், பரதகுமரரும், பல்வேறு ஆயமும், நகர மாந்தரும், ஆடல் மகளிரும், பாடல் மகளிரும், பிறரும், கடலாடுதற்குக் களிப்புடன் சென்றனர். மாதவியும் கோவலனோடு செல்ல விரும்பி, ஒப்பனைசெய்துகொள்வாளாயினள். அவள், தன் கூந்தலை வாசநீராட்டி அகிற்புகை யூட்டிப்புலர்த்தி, மான்மதம் ஊட்டினள்; முப்பத்திரண்டு வடத்தாற்செய்த மேகலையை உள்ளணிந்து, நன்னிறப்பூந்துகிலை அதன்மேல் நலம்பெற உடுத்தாள்; தோளில் தோள்வளை செறித்து, கையிற் பொன்வளை தொடுத்து, முன்கையிற் பவள வளையும், சங்க வளையும் பூண்டு, அரதன ஆழியை விரலிடைச் செறித்தாள்; நீலக் குதம்பையைக் காதில் அணிந்து, கழுத்தகத்தில் ஆரம் பூண்டு, தெய்வ வுத்தியைச் சிறப்புற அணிந்து, அடிகளுக்கு அலத்தகம் ஊட்டி, பாடகம் சதங்கை காலில் அணிந்து, அழகினுக்கு அழகுசெய்தாள்.

பின்னர், வைகறைப்போதில் கோவலனோடு கூடிக் கடற்றுறை நோக்கிச் செல்வாளாயினள். செல்பவள், மாடமறுகின் பீடிகை வீதியைக்கடந்து, நகரவீதியின் நடுவண் நடந்து, வேலையை நண்ணினள்.

ஆங்கு மணற்பரப்பில், ஒருசார், வண்ணமும் சுண்ணமும், மலரும், சாந்தும், பண்ணியாரமும் பரப்பிப் பகர்வார் சிலர். ஒருசார், அப்பம், மோதகம், பிட்டு முதலியன விற்பார் சிலர். ஒருசார், பல்வகைப் பண்டமும் பரப்பி விற்கும் மகளிர் சிலர். அங்கே பண்டங்காக்குங் காவலரும், மீன்விலைப் பரதவரும் வேறு வேறு இடங்களில் தங்கியிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே விளக்குக்களை வைத்து, தந்தொழிலில் கண்ணுங் கருத்துமா யிருந்தனர்.

மாதவி அவ்விடங்கள் அனைத்தும் கண்டு களிப்புற்று, ஆங்கு ஒருசார் தாழை வேலிப் புன்னை நீழற்கண் புதுமணற் பரப்பில் எழினி போக்கிய படமாடத்துள், வெண்கால் அமளியில் கோவலனோடு குலாவி அமர்ந்திருந்தாள்.

பின்னர், மாதவி தன் பாங்கியாகிய வசந்தமாலையின் கையினின்று யாழை வாங்கித் திருத்தி, அதனைக் கோவலன் கையிற் கொடுத்தாள். கொடுத்தலும், கோவலன் அவ்யாழை வாங்கி,.

‘திரைவிரி தருதுறையே திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுழலே மதிபுரை திருமுகமே
இருகய லிணைவிழியே எனையிடர் செய்தவையே.

பவள வுலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய.’

என்று, பல வரிப்பாட்டுக்களைப் பாடினான். அப் பாட்டுக்களில், அவன் வேறொரு தலைமகளைக் காதலித்துப் பாடுதல்போன்ற குறிப்பு மாதவிக்குத் தோன்றிற்று. அதனால், அவள் கோவலனிடத்திருந்த யாழை வாங்கித் தானும் வேறு குறிப்புடையாள் போன்று,

பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்க ளிசைபாடக்
காமர் மாலை யருகசைய நடந்தாய் வாழி காவேரி
காமர் மாலை யருகசைய நடந்த வெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே அறிந்தேன் வாழி காவேரி.

தம்முடைய தண்ணளியும் தாமும்தம் மான்தேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்.

அடையல் குருகே அடையலெங் கானல்
அடையல் குருகே அடையலெங் கானல்
உடைதிரைநீர்ச் சேர்ப்பற் குறுநோ யுரையாய்
அடையல் குருகே அடையலெங் கானல்.

என்று பல பாட்டுக்களைப் பாடினாள். அவற்றைக் கேட்டதும் கோவலனுக்கு மனம் வெதும்பியது; வேறுபட்டது. 'யான் இயல்பான வரிப்பாட்டுக்களைப் பாட, இவள் இவ்வாறு கருத்து வேறுபட்டுப் பாடினாளே!' என்று அவள்மேல் வெறுப்புக் கொண்டு, ஆங்குநின்றும் வெளிப்பட்டு, தன் இல்லம் நோக்கிச் செல்வானாயினான்.

கோவலன் பிரிந்து செல்லக் கண்ட மாதவி, ஒன்றுந் தோன்றாது செயலற்று நின்றாள்; பின்னர்த் தான் தனிமையாகத் தேரிலேறிச் சென்று, தன் இருக்கை யடைந்தாள்.

தன் இல்லத்தில் சென்ற மாதவி, நிலாமுற்றத்தில் ஏறி, யாழெடுத்துப் பாடிக்கொண்டிருந்தாள்; பின்பு, தன்னைப் பிரிந்து சென்ற கோவலன் அதுகாறும் மீண்டு வாராமையின், அவனுக்குத் தூதனுப்பி அழைக்க எண்ணினாள்; அதனால், தாழைப் பூவின் வெண்டோட்டை வாங்கிப் பித்திகையின் முகையால் எழுதுவாளாயினாள்.

அஃது—'என் அன்பே, ஆருயிரே, காதலர் களித்து இன்புறத் தக்க இவ் விளவேனிற்பருவத்தில் அந்திநேரத்தில் யான் தங்களையின்றித் தனிமையாய் வருந்துதல் தகுமோ! வெண்டிங்கள் செந்தழலேபோல் வெதுப்புமே! தாங்கள் அருள் செய்யீரேல், யான் உய்யேன்' என்பதாம்.

இவ்வாறு பலபட எழுதி, அதனை வசந்தமாலையின் கையிற் கொடுத்து, 'கோவலனுக்கு ஏற்பன இயம்பி, இப்பொழுதே அழைத்து வருவாயாக' என்று அவளை விடுத்தாள். அவளும் அம் மலர்மாலையை வாங்கி, கூலமறுகிற்சென்று, ஆண்டிருந்தகோவலனைக் கண்டு, அவன்கையிற் கொடுத்தாள். அவனும் அவளை நோக்கி, 'பெண்ணே, நின் தலைவி நடிப்புக்களெல்லாம் நன்கு புலப்பட்டன; நடித்த அவை, அவள் குலத்துக்கு இயல்பேயாகும். ஆதலின், இம் மாலையை யான் வேண்டேன்; நீ இதனைக் கொண்டுசெல்' என்று வெறுத்துக்கூறினான். வசந்தமாலை மீண்டு, மாதவியை அடைந்து, கோவலன் கூறிய வெறுப்புரைகளைக் கூறி, வருந்தி நின்றாள். அவற்றைக் கேட்ட மாதவி, தன் தலைவனை இயற்பழித்துக்கூறிய தோழியை நோக்கி, 'அவர் அன்னர் அல்லர்; இன்று மாலைப்பொழுதினுள் வருவர். அங்ஙனம் வாராராயினும், நாளைக் காலைப்போதில் நாம் கண்களிக்க வருவர்' என அவட்குக் கூறிவிட்டு, அமளியின்மேல் இமை பொருந்தாது செயலற்று விழுந்து கிடந்து வருந்துவாளானாள்.

மாதவி நிலைமை இவ்வாறாக, கோவலன், பீடிகைத் தெருவில்நின்று நீங்கி, தன் மனையை யடைந்தான். ஆண்டுக் கண்ணகி, தான் கண்ட தீக்கனவைத் தன் தோழியாகிய தேவந்தி

என்னும் பார்ப்பனிக்குச் சொல்லி, அதனை நினைத்து வருந்திக்கொண் டிருந்தாள். அப்பொழுது கோவலன் வரவைக் கண்ட பாங்கி யொருத்தி, விரைந்து உள்ளே சென்று, அவன் வரவைக் கண்ணகிக்கு அறிவித்தாள். அவ்வளவில் கோவலனும் தன் இல்லம் புகுந்து, கண்ணகியை அணுகினன். அவளது நகையிழந்த முகமும், பொலிவழிந்த உடலும் கண்டு, தனது தீச்செயலை நினைந்து நினைந்து வெய்துயிர்த்தான். பின்னர், அவன் அவளை நோக்கி, 'பொய்யை மெய்யாகக் காட்டி யொழுகும் வஞ்ச நெஞ்ச முடைய மாதவியால், என் முன்னோர் தந்த பெருநிதி முற்றும் இழந்தேன்; நினக்கும் துயர் இழைத்தேன்; வறுமைவாய்ப்பட்டேன்; இஃது எனக்கு மிக்க நாணைத் தருகின்றது' என்று வருந்திக் கூறினன். அதனைக் கேட்ட கண்ணகி, முகமலர்ந்து, முறுவல் பூத்து, 'தாம் பொருள் கருதி வருந்துதல் வேண்டா; என்பால் இன்னும் இரண்டு சிலம்புகள் உள; அவற்றைக் கைக்கொள்ளலாமே' என்று கனிவொடுங் கூறினள். அக்கனிவுமொழியைக் கேட்ட கோவலன் மனங் கரைந்து, அவளது நல்லியல்பினை உள்ளங் கொண்டு, 'பெண்ணே, யான் இச்சிலம்பை முதலாகக்கொண்டு பெரும் பொரு ளீட்டி, இழந்த அணிகலனையும் அழிந்த பெருநிதியையும் மீட்டும் சேர்க்க நினைந்துள்ளேன். அதன்பொருட்டு இங்குநின்றும் நீங்கி

மதுரை நகர்க்குச் செல்ல எண்ணுகின்றேன். வறியவனாகிய பின்னர் இண்டு வாழ்தல் மாண்பன்று; ஆதலின், நீயும் என்னுடன் மதுரைக்கு வருதி' என்றான். அவளும் உடம்பட்டாள்.

மதுரைக்குச் செல்ல மனங்கொண்ட கோவலன், இரவின் கடையாமத்தில் எழுந்து, தன் மனைவியை உடன்கொண்டு, தன் வீட்டினின்றும் வெளிப்பட்டு, திருமால் கோயிலை வலஞ் செய்து வணங்கி, அசோகின் நீழலில் சாரணர்க்காக விட்டிருந்த சிலாதலத்தை வலம் வந்து தொழுது, ஊரைக் கடந்து, காவிரியை யடைந்து, அதன் வடகரையிலுள்ள மலர்ப் பொழிலிற் புகுந்து, அவ்வழியே மேற்குநோக்கி ஒரு காவதம் நடந்து சென்றான். அவ்வளவில் கண்ணகி, 'மதுரைநகர் யாது?' என, கோவலன் 'ஐந்நாறு காதம் கடந்து சென்றால், மதுரையை யடையலாம்' என்று புகன்று, புன்முறுவல் பூத்தான். பின்னர், அருகிலிருந்த தவவேலிக்கண் தங்கித் தவம் புரிந்துகொண்டிருந்த கவுந்தியடிகள் என்னும் மாதவத்தாளைக் கண்டு வணங்கினான். கவுந்தி அவனை நோக்கி, 'நீவிர் உருவும் ஒழுக்கமும் நோன்பும் உடையீர் போலக் காண்கின்றீர்; நும் ஊரினின்று நீங்கி எளியவர்போல் இண்டு வந்தமைக்குக் காரணம் என்னை?' என்று வினவினார். அதற்குக் கோவலன், 'யான் பொருளீட்டும் விருப்புடையேனாய் மதுரையம்பதிக்குச் செல்கின்றேன்' என்றான்.

அதனைக்கேட்ட கவுந்தி, 'திருமகள்போன்ற இச் செல்வியின் சீறடி, பரலில் நடக்கப் பதைக்குமே! காடுமிக்க நாடு கடந்து செல்லுதல் எவ்வாறு? இது நமக்குத் தக்கதன்று. யான் அறவுரை கேட்டற்பொருட்டு மதுரைக்குச் செல்ல எண்ணியுள்ளேன்; யானும் நும்மோடு வருகின்றேன்' என்றார். அச் செய்தியைக் கேட்ட கோவலன், மனம் மகிழ்ந்து, 'அடிகள், தாம் உடன் வருவீரேல் இவளது துன்பம் நீங்கும்; எனக்கு இன்பம் ஓங்கும். ஆதலின், அவ்வாறே அருள்புரியவேண்டும்' என்றான்.

கவுந்தியும் மதுரைக்குச் செல்லக் கருதி, கடிகையையும் உறியையும் பீலியையும் உடன்கொண்டு மந்திரம் நவின்று, கடவுளை வேண்டிப் புறப்பட்டார். கோவலனும் கண்ணகியும் உடன்செல்வாராயினர். அவர்கள் காவிரிவளமும் கழனிவளமும் ஊர்வளமும் பொழில்வளமும் கண்டு கண்டு களிப்பெய்தி, நாள்தோறும் காதவழி யளவு நடந்து, ஆங்காங்குத் தங்கி இளைப்பாறி, வழிக்கொள்வாராயினர்.

அங்ஙனம் வழிக்கொள்கையில் ஒரு நாள், காவிரி யடுத்த, பூவிரிபொழி லுடுத்த திருவரங்கத்தைச் சேர்ந்தனர்; ஆங்கு, பட்டினப் பாக்கத்தினின்றும் நீங்கி வந்த சாரணர் சிலாதலத்தின்மே லிருந்து அறவுரை கூறினர். அவரைக் கண்டு கவுந்தியோடு கண்ணகியும் கோவலனும் சென்று, அவரடிகளில் விழுந்து வணங்கினர்.

அவர்கள் கவுந்திக்குப் பல அறவுரை கூறினர். பின்னர், கவுந்தியடிகள் முதலியோர் ஆங்குநின்றும் நீங்கி,காவிரியைக் கடந்து உறையூரை யடைந்து, அதன்புறத்தே தங்கியிருந்தனர். மறுநாட் காலையில் மதுரை நோக்கிப் புறப்படுகையில், ஆங்கு வந்த மாங்காட்டு மறையவனால் மதுரைக்குச் செல்லும் வழி முதலியவற்றை அறிந்தனர். பின்னர், அம்மூவரும், அவன் கூறிய நெறியே செல்வாராயினர்.

இஃது இவ்வாறாக, கோவலனைப் பிரிந்து தன் இல்லத்தில் தனித்திருந்த மாதவி, 'மாலை வாரா ராயினுங் காலை வருகுவர்' என்று துணிந்தவாறு, கோவலன் அங்கு வாராமையின், பிரிவாற்றாமையால் பெரிதும் வாடி வருந்தினள். அவளது நகைமுகம் ஒளியிழந்தது; நறுங்குழல் மலர் துறந்தது; திருநுதல் திலகந் தவிர்ந்தது ; கரு நெடுங் கண் துயில் மறந்தது. இவ்வாறு அவள் பெரிதும் வருந்தி இடும்பையுற்றுக் கிடக்கையில், கோசிகன் என்னும் அந்தணச் சிறுவன் ஆங்குஎய்தினன். அவன், மாதவியின் வறிய நிலையை நோக்கி மாழ்கினன். அப்பொழுது மாதவி அவனை நோக்கி, 'அந்தணீர், தாம் அன்புகூர்ந்து, என் தலைவனை யாண்டேனுங் கண்டு, அவர்பால் இதனைக்கொடுத்து, அவரை அழைத்து வருவிரேல்,யான் இவ்விடர்க் கடலினின்றும் கரையேறுதல் கூடும்' என்று

கூறி, ஒரு முடங்கல் வரைந்து இலச்சினையிட்டு, அவன் கையிற் கொடுத்தாள். அச் சிறுவன் அதனைக் கைக்கொண்டு, கோவலனைத் தேடி, வழியிடை நாடி, அவன் சென்ற நெறி யறிந்து சென்றான். சென்றவன், ஒருநாட் காலையில் ஒரு நீர்நிலையின்கண் நின்ற கோவலனைக் கண்டு, அவனது உடலின் வேறுபாட்டால் ஐயுற்று நின்றான். பின்னர், அவன் கோவலன் தானோ என்னும் உண்மையை அறிதல்வேண்டி, ஆண்டு, வெயிலின் வெம்மையால் பூவுதிர்ந்து பொலிவழிந்திருந்த மாதவி யென்னும் மலர்க்கொடியை நோக்கி, 'பூங்கொடியே, கோவலனை யிழந்து பொலிவழிந்த மாதவியைப்போல, நீயும் பொலிவழிந்தனையே, என்னை?' என்று வினாவினான். அவ்வுரைகேட்ட கோவலன், அந்தணனை நோக்கி, 'ஐய, நீவிர் கூறியது யாது?' என்றான். அவ்வளவில், 'அவன் கோவலனே' என்று துணிந்த அந்தணன், அவனை நோக்கி, 'அண்ணலே, தமது பிரிவினால் நம் இருமுது குரவரும், அருமணி யிழந்த அரவமே போன்று, உய்யும் நெறி யறியாது, வெய்துயிர்த்தனர். சுற்றத்தவரும் உயிரிழந்த உடலேபோலச் செயலற்றனர். ஏவலர் பலவிடத்தும் நும்மைத் தேடிச் சென்றனர். இவற்றை வசந்தமாலையினால் அறிந்து, மாதவி மேல்நிலையின் இழிந்து இடைநிலையில் விழுந்து, அருந்துயர் உழந்தனள். அதனைக் கேட்டு யான் ஆங்குச் சென்றேன்.

அவள் இம் முடங்கலை வரைந்து, தம்மிடஞ் சேர்க்குமாறு என்னை வேண்டிக்கொண்டாள். அதனால், யானும் தம்மைத்தேடி, பற்பல இடங்களை நாடி, அரிதின் இவண் எய்தினேன். தமது சோதிவாடிய முகமும், பூதியாடிய உடலும் கண்டு ஐயுற்று, உண்மையறிய வேண்டி, இவ்வாறு கொடியை நோக்கிக் கூறினேன். மாதவி தந்த முடங்கல் இது காணும்' என்று அவ்வோலையை எடுத்துக் கோவலன் கையிற் கொடுத்தான். கோவலன் அதனை வாங்கி, அதன் பொறிமணத்தால், அது மாதவி அனுப்பியதே யெனத் துணிந்து, அதனைப் பிரித்துப் படிப்பானாயினான். அதில்,

'அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி'

என வரைந்திருந்த வாசகத்தை வாசித்து, மாதவியின் மனநிலையைத் தேர்ந்து, அவள்மாட்டுத் தவறில்லை என்பதை யோர்ந்து, குற்றந் தனதே எனச் சோர்ந்து, சிறிது நேரம் ஒன்றுந் தோன்றாது நின்றான். பின்னர், அவ் வோலையின் உட்பொருள், தன் தந்தைக்குத் தான் தெரிவித்தற்கும் அமைந்திருப்பதையறிந்து, அந்தணனை நோக்கி, 'ஐய, இவ்வோலையின்பொருளை எனது

விண்ணப்பமாக என் தந்தைக்கு அறிவித்து, அவரது இடுக்கண் தவிர்ப்பீராக' என்று அவனை வேண்டி விடுத்தான். கோவலன் இவ்வாறு அந்தணனை அனுப்பிவிட்டு, கண்ணகியும் கவுந்தியும் இருந்த இடத்தைச் சார்ந்தான். பின்னர், மதுரையின் அணிமையையும் காவலனது காவலையும் அறிந்து, வெயில் வெம்மையால் பகலில் தங்கியிருந்து, இரவில் வழி நடந்து சென்று,

'கரைநின் றுதிர்த்த கவிரிதழ்ச் செவ்வாய்
அருவி முல்லை அணிநகை யாட்டி
விலங்குநிமிர்ந் தொழுகிய கருங்கயல் நெடுங்கண்
விரைமலர் நீங்கா அவிரறற் கூந்தல்
உலகுபுரந் தூட்டும் உயர்பே ரொழுக்கத்துப்
புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடி
வையை யென்னும் பொய்யாக் குலக்கொடி'

யின் வடபால் நண்ணினர். ஆங்கு ஒரு மரப்புணை யேறித் தென்கரை சேர்ந்தனர்; சேர்ந்து,

'புள்ளணி கழனியும் பொழிலும் பொருந்தி
வெள்ளநீர்ப் பண்ணையும் விரிநீ ரேரியும்
காய்க்குலைத் தெங்கும் வாழையும் கமுகும்
வேய்த்திரட் பந்தரும் விளங்கிய இருக்கை'

அடைந்து, ஆண்டுத் தங்கியிருந்தனர். பின்னர், பொழுது புலர்ந்ததும், கோவலன் தன் மனைவியைக் கவுந்தியடிகள் காப்பாக நிறுத்திவிட்டு, மதுரைநகருட் சென்று, அதன் வளங்களை யெல்லாங் கண்டு திரும்பினான்.

திரும்பினவன் மதுரையின் வளத்தைக் கூறிக்கொண்டிருக்கையில், மாடலன் என்னும் மறையவன் ஆங்கு வந்து சேர்ந்தான். அவனைக் கண்டதும், கோவலன் எழுந்து, அவன்றன் சேவடி வணங்கினன். மாடலன், கோவலனது வள்ளன்மையைச் சிறக்கக் கூறி, 'நல்வினையே செய்துவந்த நினக்கு இத்தகைய துன்பம் நேர்ந்தது முன்வினைப் பயனே யாகும்' என்று நொந்து கூறினன். அப்பொழுது கோவலன், தான் இரவிற் கண்ட தீக்கனவைத் தெரிவித்தான்; அதனைக் கேட்ட மாடலனும் கவுந்தியும், 'அறத்துறையாளர் வாழ்ந்திருக்கும் இச் சேரியில் நீவிர் தங்கியிருத்தல் தகாது; நகருட்புக்கு வதிதல் நன்று' என நவின்றனர். அவ்வளவில், மாதரி என்னும் ஆய்ச்சி ஆண்டு எய்தினள். அவளது முதுமையையும் இயல்பினையும் கண்டறிந்த கவுந்தி, அவள்பால் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்து, கோவலனது குலச் சிறப்பினைக் கூறி, அவ் விருவரையும் காக்குமாறு வேண்டினர். அவ்வாறே அவள், கோவலனையும் கண்ணகியையும் உடன்கொண்டு மனையுட்புக்கு, உணவிற்கு வேண்டுவன கொடுத்து உபசரித்தாள்.

பின்னர்க் கோவலன், தன் மனைவியை நோக்கி, தான் அவளுக் கிழைத்த தீமையையும் அவள் தன்பால் வைத்த அன்பினையும் கூறி, பெரிதும் கவன்றான். கவன்றவன்,

'பொன்னே கொடியே புனைபூங் கோதாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே பொற்பின் செல்வி
சீறடிச் சிலம்பி னொன்றுகொண் டியான்போய்,
விற்று வருவேன். அதுகாறும் நீ வருந்தா திரு'

என்று கூறித் தேற்றி, அவளைத் தழுவி முத்தமிட்டு வெளிப்பட்டான். வெளிப்பட்டுச் செல்பவன், வழியில் பலர் சூழ முன்வரும் பொற்கொல்லனைக் கண்டு, 'இவன் பாண்டியனால் மதிப்புப் பெற்றவன்' எனக்கொண்டு, அவன்பால் தனது சிலம்பினைக் காட்டி, 'இதனை விலையிடுதியோ?' என்று வினவினான். பொற்கொல்லன் அச் சிலம்பின் நேர்மையைக் கண்டு மகிழ்ந்து, அவனைத் தன் குடிலில் இருக்கவுரைத்து, தான் அதனை அரசனுக்குக் காட்டி வருவதாகச் சென்றான். அவன் கோப்பெருந் தேவியின் பொற்சிலம்பை முன்னர்க் கரந்துகொண்டவனாதலின், அக்களவினைக் கோவலன்மேல் ஏற்ற எண்ணி, அரசன்முன் சென்று வணங்கி, தான் எண்ணியவாறே கூறினான். அதனைக்கேட்ட அரசன் ஆராயானாய், தன் காவலரை நோக்கி, 'கோவலனைக் கொன்று, சிலம்பினைக்கொணர்க' எனக்கட்டளையிட்டான். அவ்வாறே காவலரும் பொற்கொல்லனோடு சென்று, கோவலனைவாளால்வெட்டிவீழ்த்தினர்

தன் சிலம்பை விற்கச்சென்ற கோவலன், நெடுநேரமாகியும் வாராமையின் மனங்கவன்று-

கொண்டிருந்த கண்ணகி, பொற்கொல்லனால் நேர்ந்த தீச்செய்தியை யறிந்து, அதனைப் பொறாது புலம்பிக் கீழே விழுந்தாள்; பின்னர், ஒருவாறு தெளிந்து, பலவாறு ஆற்றிக்கொண்டு மறுகிற் சென்று, தன் கணவன் கொலையுண்டு கிடக்கும் இடத்தைக் குறுகினாள். ஆங்கு விழுந்து கிடக்கும் தன் கணவனது மார்பினைத் தழுவிக் கண்ணீர் உகுத்தாள். அப்பொழுது கோவலன் உயிர்த்து எழுந்து, 'கண்மணி, வருந்தாதை' என்று கூறிவிட்டுத் துறக்கம் அடைந்தான். கண்ணகி, அக் கொடுஞ் செயலை அரசன்முன் கூற நினைந்து, அங்குநின்றும் விரைந்து போந்து, அரசன் கோயிலை யணுகினாள்.

ஆங்கு, வாயிற் காவலனை நோக்கித் தன் வரவினை அரசனுக்கு அறிவிக்குமாறு அறைந்தாள். அவனும் சென்று அரசனுக்கு உரைக்க, அரசன் அவளை உள்ளே வரவிடுமாறு பணித்தான். உடனே கண்ணகி உட்சென்று, அரசன்முன் நிற்ப, 'நீ யார்? வந்தது என்?' என, கண்ணகி, 'யான், நின்னால் கொடுங் கொலையுண்ட கோவலன் மனைவி, என்பெயர் கண்ணகி' என்றாள். அரசன், 'கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று; அது செங்கோல் வேந்தர் திறனே' என்றான். உடனே கண்ணகி, 'அச்சிலம்பு என்னுடையதே; அதனுள் மாணிக்கக் கற்கள் உண்டு. அதனைக் காண்' என்றாள்.

அரசன், 'கோத்தேவியின் சிலம்பில் முத்துக்கள் உண்டு' என்று கூறி, சிலம்பைக் கொணர்வித்தான். உடனே கண்ணகி அதனை யுடைத்தாள். உடைத்தலும், மணிகள் தெறித்து விழுந்தன. அவற்றைக் கண்டு,

'தாழ்ந்த குடையன் தளர்ந்தசெங் கோலன்
பொன்செய் கொல்லன் றன்சொற் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதற் பிழைத்தது கெடுகவென் னாயுள்'

என்று மன்னவன் மயங்கி மண்ணில் விழுந்தனன். உடனே, கோத்தேவி கண்ணகியைக் குறையிரந்து வேண்டினள். கண்ணகி சினந் தணியாளாய்,

'ஒட்டேன் அரசோ டொழிப்பேன் மதுரையும்'

என்று முனிந்துகூறி வெளிப்பட்டாள். அவ்வளவில் கோப்பெருந் தேவியும் குலைந்து விழுந்து, தன் கணவனுடன் வானுலகஞ் சென்றாள்.

கோயிலினின்றும் நீங்கிய கண்ணகி, மதுரையை எரியுண்ணுமாறு வாய்மொழிந்தாள். பின்னர், மதுரைத்தெய்வத்தால் தன் பழம்பிறப்புணர்ந்து, நகரினீங்கி, வையைக்கரையே சென்று, குமரவேட்குன்றை யடைந்து, ஆங்கு வேங்கை மரத்தின்கீழ்ப் பதினான்கு நாட்கள் தங்கியிருந்து, தன் கணவனோடு வானுலகை யடைந்தனள்.

மாடலன், கோவலன் வெட்டுண்டதை யறிந்து வருந்தி, தன் ஊர்க்குச் சென்று, ஆங்கு அச்செய்தியை யறிவித்தான். அதனை யறிந்த கோவலன்தந்தை கொடுந்துய ரெய்தி, தன் பொருள்களை யெல்லாம் தானம் செய்து, பிறவித் துன்பம் அற முயன்று, துறந்தோர்முன் புக்கு, துறவறம் பூண்டான். அவன்மனைவி, மகன்துயர் பொறாளாய் வருந்தி, உயிர் நீத்தாள். கண்ணகியின் தாதையும் ஆசீவகர்க்குப் புண்ணியதானம் புரிந்து, துறவறம் பூண்டான். கண்ணகியின்தாய் மண்ணுலகத்தை நீத்து, விண்ணுலகத்தை அடைந்தாள். இவற்றை யெல்லாம் அறிந்த மாதவி, தன்தாய் சித்திராபதியை நோக்கி, 'மணிமேகலையைக் கணிகையர் கோலங் காணாதி' என்று கூறிவிட்டு, கோதைத்தாமம் குழலொடு களைந்து, போதித்தானம் புரிந்து, துறவறம் பூண்டாள். பின்னர், மாதவி, தன் மகள் மணிமேகலையையும் இளவயதிலேயே அறநெறிப்படுத்தினாள்.

கோவலன்தாய் முதலியோரது செயலைக் கேட்டறிந்த மாடலன், தன்னால் அவ்வாறு நிகழ்ந்ததற்கு இரங்கி, அத்தீவினை தீர எண்ணிக் கங்கையாடச் சென்றான்.

பின்னர், இந்திரவிழாக் காலத்தில் மாதவியும் மணிமேகலையும் விழாவிற்கு வாராமையின், ஊரார் பலவாறுபழித்துரைத்தனர். அதனாலும்,

தன்மகளது செய்கையில் விருப்பின்மையானும் வருத்தமுற்ற சித்திராபதி, வயந்தமாலையை நோக்கி, தன் மகளிடம் ஊரார் அலர் கூறுதலைத் தெரிவித்து, அவளையும் அவள்மகளையும் விழவிற்கு அழைத்து வருமாறு கூறியனுப்பினாள். வயந்தமாலை, மாதவிபால் சென்று, அவளை நோக்கி, 'அன்னாய், நாடக மகளிர்க்கு ஆவனவெல்லாம் கற்றுத் துறைபோகிய பொற்றொடி, நீ நற்றவம் புரிவது நாணுடைத்தாகும்; ஊரலர் கூறுதல் உளங்கொள வேண்டாவோ' என்று நயனுற நவின்றாள். அவற்றைக் கேட்ட மாதவி,

"“காதல னுற்ற கடுந்துயர் கேட்டுப்
போதல் செய்யா வுயிரொடு நின்றே
பொற்கொடி மூதூர்ப் பொருளுரை யிழந்து
நற்றொடி நங்காய் நாணுத் துறந்தேன்
காதல ரிறப்பிற் கனையெரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்தகத் தடங்கா
தின்னுயி ரீவர் இயா ராயின்
நன்னீர்ப் பொய்கையின் நளியெரி புகுவர்
நளியெரி புகாஅ ராயின் அன்பரோ
டுடனுறை வாழ்க்கைக்கு நோற்றுடம் படுவர்
பத்தினிப் பெண்டிர்.”

ஆயின், கண்ணகியோ அத்தகைய ளல்லள்; கணவனிறந்த கடுந்துயர் பொறாது, காவலன்பேரூர்க் கனையெரி யூட்டிய மாபெரும் பத்தினி. அவள்மகளாகிய மணிமேகலை, அருந்தவம்

ஆற்றற்கு உரியளே யன்றித் தீத்தொழில் செய்யும் திறத்தினள் அல்லள். அன்றியும் யானோ, அறவண அடிகளின் அடியிணைகளை யடைந்து, காதலன் உற்ற கடுந்துயர் கூறி-னேன். அவர்,

"பிறந்தோ ருறுவது பெருகிய துன்பம்
பிறவா ருறுவது பெரும்பே ரின்பம்
பற்றின் வருவது முன்னது பின்னது
அற்றோ ருறுவ தறி" கென் றருளி
ஐவகைச் சீலத் தமைதியுங் காட்டி,

"இவையே உய்யும் நெறி" என்று உரைத்தருள் புரிந்தனர். ஆதலின், யானும் மணிமேகலையும் இவ் வறநெறியினின்றும் புறநெறியில் வரு-கிலேம். இதனைச் சித்திராபதிக்குச் செப்புக' என்று அனுப்பினள். அவளும் மீண்டுசென்று அதனைச் சித்திராபதிக்குச் செப்பினள். பின்-னர், மாதவி, அவ் வறநெறியிலே நிலைநின்று பிறப்பற நோற்றுத் துறக்கமுற்றனள்.

மாதவி கணிகையர் குலத்தில் தோன்றிய காரிகையே யாயினும், குலமகளேபோல், தன் கணவன் இறந்ததும் துறவறம் மேற்கொண்டு அறநெறியில் ஒழுகினளாதலின், அவள் குல-மகளிரினும் சிறந்தவளே யாவள். 'ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று' என்பது உண்மை-யுரையே யன்றோ?

4. பண்டைத்தமிழர் வாணிகம்

நந்தம் தமிழ நாட்டிற்குப் பண்டைக் காலத்தில் தமிழகம் என்னும் பெயர் வழங்கி வந்தது. தமிழகம் நெடுங்காலத்திற்கு முன்னரே சிறந்த நாகரிகம் படைத்து, உயர் நிலையில் ஒளிர்வுற்றிருந்தது. அக்காலத்துத் தமிழ்மக்கள் கல்வி, கைத்தொழில், வாணிகம், அரசியல், இல்வாழ்க்கை முதலிய பல துறைகளிலும் மேம்பாடு எய்தியிருந்தனர் என்பது ஒருதலை. இண்டு, அவர்களது வாணிகச் சிறப்பினைச் சிறிது கூறுவோம் :

ஏறக்குறைய இரண்டாயிரம் யாண்டுகளுக்கு முன்னரே தமிழ்மக்கள் பிறநாட்டவரோடு வாணிகம் நடத்தி வந்தனர். கிரீஸ், ரோம் முதலிய ஐரோப்பிய நாட்டினர், அக்காலத்தில் நம் நாட்டின் விளைபொருள்களையறிந்து விரும்பிவந்து, அவற்றைக் கொள்வாராயினர். வாணிகத்தின்பொருட்டு நமது நாட்டினின்று ரோம்தேசத்திற்குத் தூதுசென்ற செய்தி, வரலாற்று நூல்களான் அறியப்படுகின்றது. கி. பி. முதல்நூற்றாண்டில் வாழ்ந்தவராகிய ப்ளினி என்னும் யவன ஆசிரியர் எழுதியுள்ள வரலாறுகளால், நம் நாட்டு வாணிகச் செய்திகள் சில அறியவருகின்றன. அவையாவன : ஐரோப்பாவினின்று நமது நாட்டிற்குக் கப்பல்கள் வரும் வழியும், நமது நாட்டி-

னின்று ஐரோப்பாவிற்குக் கொண்டுசெல்லும் பலவகைப் பொருள்களின் விலையும், நமது நாட்டிலுள்ள முக்கியமான துறைமுகங்களின் நிலையும் பிறவுமாம்.

அக் காலத்தை யடுத்து எழுதப்பட்ட பெரிப்ளூஸ் என்னும் நூலிலும், மேலைக்கடற்கரையிலுள்ள முசிறி என்னும் துறைமுகப் பட்டணத்தில், ஐரோப்பிய நாட்டினின்று மரக்கலங்கள் வந்து தங்கியிருக்கும் என்றும், ஆண்டுக் கலங்கள் தங்குதற்கு ஏற்ற அமைதியுண்டு என்றும், இயம் தகரம் கண்ணாடி மது முதலிய பொருள்களை விற்றுவிட்டு, மிளகு யானைமருப்பு வயிரம் பவழம் வெற்றிலை பட்டாடை முதலியவற்றை இங்குநின்றும் கொண்டு செல்வர் என்றும் எழுதப்பட்டுள்ளன. இவையேயல்லாமல், நெய் தோகை மயிர் முதலிய பொருள்களையும், குரங்கு கடுவாய் யானை முதலிய விலங்குகளையும், மயில் கிளி முதலிய பறவைகளையும் இங்கிருந்து கொண்டுபோயினர் எனவும் அறியவருகின்றது.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த யவன ஆசிரியராகிய தாலமி என்பவரும் நம் நாட்டு வாணிகத்தைக் குறித்துத் தம் நூலில் எழுதியுள்ளார். சிறந்த துறையாகிய முசிறியையும், கருவூர் கன்னியாகுமரி முதலிய ஊர்களையும், பெரியாறு தாமிரவருணி முதலிய யாறுகளையும் பற்றிய செய்திகள் அவர் நூலிற்

காண்கின்றன. அன்றியும், முசிறியில் ரோம் தேசத்தவர்களின் ஆலயம் ஒன்று அமைந்திருந்தது என்னுஞ் செய்தியும் அறியப்படுகின்றது. இது நிற்க.

தமிழ்நாட்டில், வேலூர் மதுரை முதலிய இடங்களில் வெட்டியெடுக்கப்பட்டுள்ள நாணயங்களாலும் வாணிகச்செய்தி வலியுறுகின்றது. அவை, கி. பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த 'க்ளாடியஸ்' என்னும் அரசன் முதலியோர் காலத்தவை என்று அறியப்படுதலின், அக்காலத்திலேயே ரோம் தேயத்தோடு நம் நாட்டவர் வாணிகஞ் செய்துவந்தனர் என்பது திண்ணம். இவையேயன்றி, பிறநாட்டு வாணிகத்தைக் குறித்துப் பண்டைத் தமிழ் நூல்களிலும் சில செய்திகள் கூறப்பட்டுள்ளன. அவற்றை இனி நோக்குவோம்:

பண்டைத் தமிழ்நூல்களுள் ஒன்றாகிய அகநானூற்றில், 'சேரர்களுக்கு உரிய முசிறி என்னுந் துறைமுகப் பட்டணத்தில், யவனருடைய கப்பல்கள் பொன்னைக் கொண்டுவந்து கொடுத்து, மிளகு வாங்கிக்கொண்டு மீளும்' என்று கூறப்பட்டுளது. அன்றியும், அக்கப்பல்கள் முசிறியை யடுத்துப் பாயும் பேராற்றில் வந்து தங்கும் என்பதும் குறிக்கப் பட்டுளது. புறநானூறு என்னும் தொகைநூலில், 'முசிறித் துறைக்கண், கப்பலில் வந்த பொன்னை மிளகின் விலைக்குப் பெற்று, அதனைத்

தோணியில் வைத்துக் கரைக்குக் கொண்டுவருவர்' எனக் கூறப்பட்டுளது. அக்காலத்தில், மேல்நாடுகளிலிருந்து சிறந்த தேன்வகைகள் நம் நாட்டிற்கு வருதல் உண்டு. அரசர்கள் அவற்றை விரும்பிப் பெற்று அருந்தி இன்புறுவர். மேற்கூறியவாற்றால், முசிறித்துறை, கப்பல்வந்து தங்குதற்கு ஏற்ற வசதியுடையதாயிருந்தது என்பது புலனாகும். இவ்வுண்மை, 'சேரவேந்தருடைய முசிறிப்பட்டணத்தில், எகிப்து தேசத்துக் கப்பல்களும் பிறவும் வந்து தங்குகின்றன; அது, மிக்க வளமுள்ள நகரமாய் இலகுகின்றது' என்று பெரிப்ளூஸ் என்னும் நூலிற் கூறப்பட்டுள்ளதனாலும் வலியுறும்.

பண்டைத் தமிழ்நூல்களில் யவனருடைய பெயர் பலவிடங்களில் காண்கின்றது. அவற்றில் அப்பெயர், கிரீஸ் தேசத்தவரையும், ரோம் தேசத்தவரையும் குறிப்பதாகும். அரேபியா தேசத்தவரைக் குறிக்கும் இடனும் உண்டு. இதனை ஆராய்கையில், யவனர் என்னும் பெயர், முதன்முதலில் கிரேக்கரைக் குறித்து வழங்கியது எனவும், பின்னர் அஃது, ரோமர் முதலியோரைக் குறிக்கலாயிற்று எனவும் தோன்றுகின்றது. முதற்கண் வரும் புறநாட்டவர்க்கு வழங்கும் பெயர், பின்னர் வரும் புறநாட்டவர்க்கும் வழங்குதல் உண்டு. மலையாளிகள், புறநாட்டவராகிய முஸ்லீம்களை வழங்கிய 'ஸாயப்பு' என்னும் பெயரையே

ஐரோப்பியருக்கும் வழங்குதல் இன்றைக்கு அறியத்தக்கதாகும். இவ்வாறே தமிழரும் முஸ்லிம்களுக்கு வழங்கிய 'ஸாஹேபர்' என்னுஞ் சொல்லை ஆங்கிலேயருக்கு வழங்குதல் இவ்வழக்கினை வலியுறுத்தும்.

பண்டைக் காலத்தில், மேலைக்கடல் சேரவேந்தருக்கு உரிமையுடையதாயிருந்தது. அக்கடலில், அவருடைய கலங்களே செல்லலாகும்; அவரது ஆணையின்றிப் பிறர்கலங்கள் ஆங்குச் செல்லுதல் கூடாது. சேரர், பெருங் கடலில் கருங்கலங்களைச் செலுத்துதலில் தேர்ந்தவராய்த் திகழ்ந்திருந்தனர்.

நம் நாட்டில் துறைமுக நகரங்கள் பலவற்றிலும் பல்வேறு நாட்டினர் தங்கியிருப்பர். சோழருக்குரிய புகார் நகரத்தைக் கூறுமிடத்து இளங்கோவடிகள்,

'பயனற அறியா யவன ரிருக்கையும்
கலந்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்
ஓசுநர் செறிந்த ஊன்மலி யிருக்கையும்'

உள்ளன என்று உரைத்திருப்பது அறியத்தக்கது. அந்நகரில், உயர்ந்தோங்கிய கலங்கரை விளக்கம் (Light House) இலங்கியிருந்தது. சாவகநாட்டினருக்கும் நம் நாட்டினருக்கும் வாணிகம் நடந்து வந்த செய்தி, 'மணிமேகலை' என்னுங் காப்பியத்தாலும் நன்கு அறியப்படும். கடாரத்திலிருந்து இரும்பும், ஈழத்திலிருந்து செம்பும்

யவனத்தி லிருந்து பொற் பணிகளும் இந்தத் தேயத்திற்கு வந்தன என்று 'பெருங்கதை' என்னும் பழங்காப்பியம் பகரும். சேய்நாட்டினின்று பெரிய மரக்கலங்கள், கடும்பரிகளைக் கொண்டு ஒருங்குகூடிவந்து, பாண்டியநாட்டில் பகர்ந்து செல்லும் என்பது மதுரைக்காஞ்சியால் அறியவருகின்றது. இனி, புகார் நகரத்தின் துறைநிலையைக் குறித்துப் பண்டை நூலிற் கூறியிருப்பனவற்றை ஈண்டு நோக்குவோம்:

புகார்த் துறைக்கண், ஈழத்தினின்று வந்த உணவுப் பொருள்களும், கடாரத்தினின்று வந்த விளைபொருள்களும், கங்கை யாற்றினின்று வந்த மணியும் பொன்னும் களிறும், இமயமலையினின்று வந்த மணியும் பொன்னும், பொதியில்மலையினின்று வந்த ஆரமும் அகிலும், தென்கடலிற் பிறந்த தரளமும், கீழ்க்கடலிற் பிறந்த பவளமும், மேல்மலையில் விளைந்த கறியும், கலங்களில் வந்த சிறந்த புரவிகளும், கருப்பூரம் முதலிய சிறப்புடைப் பொருள்களும், பிறவும் எந்நாளும் ஒழிவின்றி இலங்கும். ஆங்கு, நீரில் வந்த பொருள்களை நிலத்திற் பரப்புவர்; நிலத்தில் வந்த பொருள்களைப் புலிப்பொறி பொறித்து, கலத்தில் ஏற்றுவர்; பொதிகளைப் போராக அடுக்குவர். துறையாளர் பொருள்களை நிறுத்து வரிவிதிப்பர். காவலர், கடற்கரையில்நொடியளவும்மடிவின்றி ஆங்காங்கே பொருள்களை நோக்கிக்கொண்டு

சூழ்ந்து திரிவர். ஆதலின், அப்பொருள்களைக் களவுகோடற்குப் பிறர் உளம் நடுங்குவர்.

அத்துறையின் சார்பில், பல்வேறுதேயத்தினின்றும் வந்து தங்கியிருக்கும் பல்வேறு மொழியாளரும் தம்முட் கலந்து மகிழ்ந்து இன்புறுவர். ஆதலின், அந்நகர், வாணிகத் தொழிலிற் சாலச் சிறந்து விளங்கிற்று என்பது யாவர்க்கும் உடன்பாடேயாகும். அக்காலத்திலேயே தமிழ்மக்கள் கருங்கடலிற் பெருங் கலங்களைச் செலுத்துதலில் பயிற்சி மிக்கிருந்தனர் என்பது சிறப்புடையதேயாம். இதுநிற்க, இனி, உள்நாட்டு வாணிகத்தை ஒரு சிறிது நோக்குதும்:

பண்டைக்காலத்தில் நந்தம் தமிழ்நாட்டில் பலவகைத் தொழில்களும் நிகழ்ந்து வந்தன. பட்டினாலும் பருத்தியினாலும் எலிமயிர் முதலிய மயிரினாலும் பலவகை ஆடைகள் நெய்தனர்; கிழியாலும் கிடையாலும் தொழில் பல பெருக்கினர்; ஐவகைத் தொழிலாளரும் தத்தம் வினைத்திறத்தில் மேம்பாடுற்றிருந்தனர். ஆதலின், பலவகைப் பொருள்களை மறுகிடைப் பகருவர். அக் காலத்தில், மதுரை நகரில் நிகழ்ந்த வாணிகத்தைக் குறித்துக் கூறியிருப்பவற்றை ஈண்டுச் சிறிது கூறுவோம்:

அந்நகரில் ஒரு பால், பல வகையான பண்டிகளும் கவசங்களும் கிடுகுகளும் குத்துக்கோல்களும் ஈர்வாள் முதலியவும் விற்கப்-

படும்; ஒருபால் செம்பு வெண்கலம் முதலியவற்றால் சமைத்தனவும், யானையின் மருப்பினால் இழைத்தனவும், கயிற்றினால் முடித்தனவும் பரப்பி வைத்திருப்பர். ஒரு சார், வயிரம் மரகதம் மாணிக்கம் புருடராகம் வயிடூரியம் நீலம் கோமேதகம் முத்து பவளம் என்னும் நவமணிக் கடைகளும், சாதரூபம் கிளிச்சிறை ஆடகம் சாம்பூநதம் என்னும் நால்வகைப் பொற்கடைகளும் பொலிவுறும்.

ஒருசார், பட்டினாலும் பருத்தியினாலும் எலிமயிராலும் செய்யப்பட்ட பலவகை அறுவைகளும், ஒருசார், நெல் புல் வரகு தினை சாமை இறுங்கு தோரை வெதிர்நெல் என்னும் எண்வகைத் தானியமும், எள் கொள் உழுந்து பயறு துவரை கடலை அவரை மொச்சை என்னும் எண்வகைத் தவசமும் என்றும் விலையாகும். வேறு பல் பொருள்களும் விற்கப்படும்.

மேற்கூறியவற்றால், நம் நாட்டின் இருவகைப்பட்ட வாணிகத்தின் பெருஞ்சிறப்பும் இனிது விளங்கும்.

பண்டைத் தமிழ்மக்கள் வாணிகத்தில் தேர்ந்திருந்தனராதலின், அவர்கள் எண்ணும் எழுத்தும் நன்கு பயின்றிருத்தல் வேண்டும் என்பது தானே போதரும். ஆயிரம் வரைக்கும் உள்ள எண்ணின் பெயர்களும், வெள்ளம் ஆம்பல் என்னும் பேரெண்களும், ஒன்றற்குக்

கீழ்ப்பட்ட சிற்றெண்களும், ஆழாக்கு உழக்கு உரி கலம் முதலிய அளவுப்பெயர்களும், மஞ்சாடி, கழஞ்சு, தொடி முதலிய நிறைப் பெயர்களும், பிறவும் தனித் தமிழ்ப் பெயர்களாகக் காணுதலே, பண்டைத் தமிழ்மக்களின் கணித நூற் புலமையைத் தெளிவுறக் காட்டும். இற்றைக்கு இரண்டாயிரம் யாண்டிற்கு முற்பட்ட தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில், நிறைப் பெயர், அளவுப் பெயர், எண்ணுப் பெயர்களைக் கூறியிருப்பதே பண்டைத் தமிழ் மக்களின் எண்ணுப் பயிற்சிக்கு இயைபுடைச் சான்றாகும். அன்றியும்,

'எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு'

என்னும் முதுமறை, பழைய தமிழ் மக்கள் எண்ணிலும் எழுத்திலும் கண்ணிய ஊற்றத்தைத் தெள்ளிதின் தெரிவிக்கும். அக் காலத்தில் வாணிகர், 'கொள்வதூஉம் மிகைகொள்ளாது கொடுப்பதூஉம் குறைகொடாது' வாணிகம் நடத்தி வந்தனர் என்பதை உளங்கொள்வோர்க்கு, அவரது வாணிக முறைமை தானே நன்கு விளங்கும்.

5. சோழர் வரலாறு

வடக்கில் வேங்கட மலையும், தெற்கில் குமரியாறும், கிழக்கிலும் மேற்கிலும் குண குட கடல்களும் எல்லையாக வுள்ள நிலப்பரப்பு, 'தமிழகம்' எனப்படும். தமிழகத்தைப் பண்டுதொட்டு ஆட்சிபுரிந்து நடாத்திவந்தோர் சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூன்று அரச பரம்பரையினராவர். தமிழகத்தில் குடபுலம் சேரர் ஆட்சிக்கும், குணபுலம் சோழர் ஆட்சிக்கும், தென்புலம் பாண்டியர் ஆட்சிக்கும் உட்பட்டிருந்தன. இம் மூவேந்தருடைய நாடுகளின் அமைப்பை நோக்கின், சங்கப்புலவர் ஒருவர், சிவபெருமானது நெற்றிக் கண்ணை ஒரு பாண்டியனுக்கு உவமை கூறியது பெரிதும் பொருத்தம் எனத் தோன்றும்.

பாரத காலத்திலும், இராமாயண காலத்திலும் தமிழ் மூவேந்தர் நாடுகள் சிறப்புற்றிருந்தமைக்கு, வடமொழியிலுள்ள பாரத இராமாயணங்களேயன்றி, பழைய தமிழ் நூல்களும் சான்று பகர்கின்றன. அக் காலங்களின்முன் தமிழ் வேந்தர் ஆட்சி எப்பொழுது தொடங்கியது என்பது இன்னும் அறியக்கூடவில்லை. அதனாற்றான், தமிழும் வடமொழியும் நன்குணர்ந்த பெரும்புலவராகிய பரிமேலழகர், திருக்குறளுரையிலே, 'பழங்குடி' என்பதற்குச் 'சேர சோழ பாண்டியர் என்றாற்

போலப் படைப்புக்காலந்தொடங்கி மேம்பட்டு வருங்குடி' என்று உரைவிரிக்கலாயினர் என அறிக.

இனி, இங்ஙனம் பழமை வாய்ந்த மூவேந்தருள்ளே, சோழர் சூரிய குலத்தினர் எனப்படுவர். இவர்கட்குப் பொதுவாக வழங்கும் குடிப் பெயர்கள்—சென்னி, வளவன், கிள்ளி, செம்பியன், சோழன் என்பனவாம். இப் பெயர்கள் இம் மரபினரில் ஒவ்வொருவர்க்கு இயற்பெயராக இருந்து, பின்னர், குடிப் பெயராயின என்று கருதுதற்கும் இடன் உண்டு. இவற்றுள், வளவன் என்பது வளமிக்க நாடுடைமைபற்றி வந்த பெயராகும். காவிரியாறு, என்றும் நீர் வற்றாது சென்று வளஞ் செய்தலின், இந் நாட்டினையே நீர்நாடு என்று வியந்து கூறுவர் சான்றோர்.

கலிங்கத்துப் பரணியும், விக்கிரமன் முதலிய சோழ மன்னர்கள்மீது பாடப்பெற்ற உலாக்களும் சோழரின் பூர்வோத்தரங்களைக் குறிப்பிடுகின்றன. சங்க இலக்கியங்களாலும், பிறவற்றாலும் அறியப்படுகின்ற வேறு சில சோழ மன்னரும் உளர். இவர்கள் எல்லோரையும் சரித காலத்திற்கு அப்பாற்பட்டவர் எனவும், சரித காலத்தினர் எனவும் இரு பகுதியினராகப் பிரிக்கலாம்.

சரித்திரத்திற்கு எட்டாத வேந்தருள்ளே, ஓர் ஆன்கன்றின் பொருட்டுத் தன் மகனைத்

தேர்க்காலில் வைத்து ஊர்ந்து முறைசெய்த மனுச்சோழன் என்பவன் சோழருடைய செங்கோன்மைக்கும், புறவு ஒன்றின்பொருட்டுத் தன் உடம்பின் தசைகளை அறிந்திட்டுத் தானும் துலையேறிய சிபி என்னும் வேந்தன் அவர்களது இசைக்கும், வானகத்தில் அசைந்துகொண்டிருந்த பகைவருடைய மூன்று அரண்களையும் எறிந்து அழித்த தூங்கெயிலெறிந்த தொடித் தோட் செம்பியன் அன்னாரது வீரத்திற்கும் எடுத்துக்காட்டாகப் பண்டைப் புலவர்களாற் கூறப்படுகின்றனர். இவ் வேந்தர்கள் இம் மூன்று பண்புகளையும் மிக மதித்துள்ளவர்கள் என்பதற்கு—வீரமுரசு, நியாய முரசு, தியாக முரசு என்னும் அம் மூன்று முரசுகளைத் தம் அரண்மனை வாயிலில் மாறாது முழங்கச்செய்து போந்தமையே சான்றாகும்.

சரித காலத்தவருள்—கரிகாலன், கிள்ளிவளவன், நலங்கிள்ளி, பெருங்கிள்ளி, கோப்பெருஞ் சோழர், கோச்செங்கட் சோழர் முதலாயினோர் பழமையுடையோ ராவர். இவர்களுள் கரிகாலனும், கோச்செங்கட் சோழரும் சங்கச் செய்யுட்களிலன்றிப், பரணி, உலாக்களிலும் குறிப்பிடப் படுகின்றனர். ஏனையோர், சங்க இலக்கியங்களால்மாத்திரம் அறியப்படுகின்றனர். இவர்களுள் ஒருவரைக் குறித்தும் கல்வெட்டு, செப்பேடு முதலிய ஆதரவுகள் கிடைத்தில. இன்னோர் வரலாறுகளை நன்னர்

அறிய முடியாவிடினும், பொய் கூறு மாண்புடைய சங்கப் புலவர் செய்யுட்களால் இவர்கள் புரிந்த சில செய்திகளும், இவர்கள் காட்டிய வீரம், நீதி முதலியனவும் வெளிப்படுகின்றன.

இவருள்ளே கரிகாலன் வரலாறு சற்று விரிவுடையதும், பெருமை மிக்கதும் ஆகும். உருவப் பஃறேர் இளஞ்சேட் சென்னியின் மைந்தனாகிய இம் மன்னன் மனைவி, நாங்கூர்வேளின் மகளாவள். இவன் புதல்வி ஆதிமந்தி என்னும் மாதரசி. இவன், தந்தையை இழந்து சிறுவனா யிருந்தபொழுது அரசுரிமைபற்றி இராச்சியத்திற் குழப்பம் உண்டாயிற்று; அதனால், இவன் கருவூரை யடைந்து, காலம்பார்த்து மறைந்திருந்தான்; பின், கழுமலம் என்னும் ஊரிலிருந்த பட்டத்து யானையாற் கொண்டுவரப்பெற்று, முடிசூடி அரசனாயினான். அப்பொழுது பகையரசர் பலர் திரண்டு, இவனைச் சிறைப்படுத்தினர்; இவன் சிறையினைக் கடந்து வெளியேறுதற்குத் தக்க சமயம் பார்த்துக்கொண் டிருக்கும்பொழுது, வன்கணாளராகிய அப் பகைவர் சிறைக்கோட்டத்தில் தீயிட்டனர்; நஞ்சனைய வஞ்சகர் புரிந்த கொடுஞ் செயலை அறிந்தான் வேந்தன்; அஞ்சாது தீயினை மிதித்தேறி மதிலைக் கடந்து, எதிர்ந்த பகைவரை யெல்லாம் கொன்று, தாழிலாட்டி, மீட்டும் அரியணை யேறுவானாயினன். இவன் சிறையைக் கடந்து வெளியேறும் பொழுது,

தீயாற் கால் கரிந்தமையின், இவனது வீரத்தை வியந்து, கரிகாலன் எனப் பெயர்கூறி, அதனை அனைவரும் வழங்குவாராயினர். 'மூன்று உலகத்தையும் அளப்பதற்கு நீட்டிய இவனது கால் நெருப்புற்றமையால், இவ் வுலகத்தினைமட்டும் அளந்தது' எனப் புலவர் ஒருவர் அருமையாக இதனைப் பாராட்டினர்.

கரிகாலன், சேர பாண்டியர்களையும், குறுநில மன்னர் பலரையும் வென்று, தமிழகம் முழுவதையும் தன்னடிப் படுத்ததன்றி, அடுத்த நாடுகளிலுள்ள அருவாளர், வடவர் முதலாயினோரையும் ஒடுக்கி, போர்வேட்கையால் வடதிசை நோக்கிப் புறப்பட்டு, இமயமலைகாறுஞ் சென்று, ஆங்கு வந்தெதிர்த்த ஆரியவரசர்களை வென்று, திறை பெற்று மீண்டான் என அறியப்படுதலின், அக் காலத்தே, இவன், இடும் எடுப்பும் அற்ற பெருவீரனாக விளங்கினனாதல் வேண்டும். இவன் காலத்தே, உறையூரும், காவிரிப்பூம் பட்டினமும் சோணாட்டின் தலை நகரங்களாக விளங்கின.

இம் மன்னர்பெருமான் புரிந்த பன்னருஞ் செயல்களுள், காடு கெடுத்து நாடாக்கியும், காவிரிக்குக் கரை கட்டுவித்தும், கிளை யாறுகளும் குளம் முதலாயினவும் வெட்டுவித்தும், உழுதொழில் புரியும் வேளாண்மாந்தரைப் பலவிடங்களிலுமிருந்து குடியேற்றியும், விளைவு பெருகுமாறு நாட்டை வளம் படுத்திய-

தும்; காவிரிப்பூம் பட்டினம், காஞ்சி என்னும் நகரங்களை நாகரிக முறையில் எழில்பெற நிருமித்ததும்; புகார்நகரின் கடற்கரைக்கண் பண்டசாலைகளும், ஆயத்துறைகளும் முதலாயின அமைத்தும், வேறு நாடுகளி னின்றும் வாணிகப்பொருட்டால் வந்த யவனர் முதலாயினோர் வதிதற்கேற்ற இருக்கைகள் நல்கியும், அவர்களோடு தமிழவாணிகர் இனிது கலந்துறையுமாறு புரிந்தும், பல தேயங்களுடனும் ஏற்றுமதி இறக்குமதி வாணிகம் நடைபெறுதற்கு ஏற்றனவெல்லாஞ் செய்து நாட்டின் செல்வத்தைப் பெருக்கியதும்; நல்லிசைப் புலவ ராயினோர்க்குப் பன்னூறாயிரம் பொன் பரிந்தளித்தும், பிறவாறும் தமிழை வளர்த்ததும் போல்வன மிகவும் பாராட்டற்குரியனவாகும்.

இவ்வேந்தன் கி. பி. முதல் நூற்றாண்டில் விளங்கியவன். இவனுக்கு இரண்டு நூற்றாண்டுகளின்பின் சோழநாடு பல்லவரது ஆட்சிக்கு உட்பட்டது. அக்காலத்து, வலிகுன்றி நிலை குலைந்து, சோழர்களிற் சிலர், பல்லவர்க்குத் திறை செலுத்தும் சீர்மைய ராயினர். சிலர், மதுரை கருவூர் முதலிய இடங்களை யடைந்து, பல்லவரைவெல்லும்சூழ்ச்சியை மேற்கொண்டு, காலங் கருதியிருந்தனர்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் இடையில் விசயாலயன் என்னுஞ் சோழ மன்னன், பல்ல

வரை வென்று, தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு,சோணாட்டினை ஆளத்தொடங்கினான். அற்றைநாள்தொட்டுப் பதின்மூன்றும் நூற்றாண்டுகாறும், ஏறக் குறைய, இருபதின்மர் சோழர் அருந்திறலும் பெரும்புகழும் வாய்ந்த பேரரசராய்த் திகழ்ந்தனர். இன்னோர் வரலாறுகளை, இவர்கள் காலத்திற் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையுங் கொண்டு ஆராய்ந்து, சரித்திர ஆசிரியர்கள் ஒருவாறு ஒழுங்குபடுத்தியுள்ளார்கள். இவர்களில்—ஆதித்தன், பராந்தகன், கண்டராதித்தன், இராசராசன், இராசேந்திரன், குலோத்துங்கன் என்னும் பெயர்களில் ஒவ்வொன்று தரித்த அரசர் இருவர் மூவர் உளர். அரிஞ்சயன், மதுராந்தகன், விக்கிரமன் முதலிய பெயர்கள் ஒவ்வொருவரைக் குறிப்பனவாம். இவர்கள் காலத்தே சோழ இராசதானிகளாய் விளங்கியவை தஞ்சையும், கங்கைகொண்ட சோழபுரமும் ஆகும்.

முற்காலச் சோழரில் கரிகால் வளவன் போன்று, இக்காலச் சோழருள்ளே சென்ற சென்ற திசைதோறும் வென்றிமாலை புனைந்து, நானிலம் அடிப்படுத்து, நாகரிக ஆட்சி புரிந்தவன் இராசராசன் - I எனப் பெயர் சிறந்தானவான். இவனது வெற்றி முதலியவற்றைக் குறிப்பனவாக இவனுக்கு வழங்கும் சிறந்த பெயர்கள் பலவாம். சிவபாதசேகரன் என்னும்

சிறப்புப்பெயர், இவனது சிவபக்தியை வியந்து, தில்லையம்பலத்தில் அளிக்கப்பெற்றது என்பர்.

வெங்கைநாடு, கங்கபாடி, தடிகைபாடி, நுளம்பாடி, குடமலைநாடு, கொல்லம், கலிங்கம், ஈழமண்டலம், இரட்டபாடி, முந்நீர்ப்பழந்தீவு என்பனவெல்லாம் இராசராசனால் வென்று அடிப்படுத்தப் பெற்றன என்பது அவனது 'மெய்க்கீர்த்தி' யால் நன்கு விளங்கும். 'பாண்டி-நாடான இராசராச மண்டலம்', 'தொண்டை மண்டலமான செயங்கொண்ட சோழமண்டலம்' என்னும் சாசனப்பகுதிகளால், பாண்டிநாடு, தொண்டை நாடுகளும் இவன் ஆட்சிக்கு உட்பட்டவை என்பது போதரும்.

இவ்வரசன் புரிந்த அருஞ்செயல்களுள், இவன் ஆட்சிக்குட்பட்ட நிலங்களெல்லாவற்றையும் இம்மியும் விடாது அளந்து எல்லைக்கல் நடுவித்து வரி விதித்ததும்; பல இடங்களில், 'கண்ணாறு' எனப்படும் கால்வாய்கள் வெட்டுவித்து நீர்ப்பாசனத்தை மிகுவித்ததும்; ஊர்தோறும் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்ற தகுதிவாய்ந்த உறுப்பினர்களையுடைய சபைகளை அமைத்து நியாய விசாரணை உள்ளிட்ட கிராமகாரியங்கள் அனைத்தையும் அவர்களே வகிக்குமாறு செய்ததும்; தஞ்சையில் இராசராசேச்சரம் என்னும் புகழ்பெற்ற பெரிய கோயிலைக் கட்டுவித்து அதற்கு வேண்டும் நிபந்தனைகளெல்லாம் ஏற்படுத்தியதும்;

சிதம்பராலயத்திற் சேமிக்கப்பெற்றிருந்த தேவார ஏடுகளை அருமுயற்சியுடன் வெளிப்படுத்தி, நம்பியாண்டார் நம்பி என்னும் பெரியாரைக்கொண்டு திருமுறை வகுப்பித்ததும்; பெரிய கோயிலில் இறைவன் திருமுன் நாள்தோறும் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்தற்காக இசைத்தமிழ் வல்லார் நாற்பத்தெண்மரையும், உடுக்கையும் கொட்டிமத்தளமும் வாசிப்பார் இருவரையும் நியமித்து, அவர்கள் நாளொன்றுக்கு முக்குறுணி நெல் பெறுமாறு நிபந்தனம் அமைத்ததும் பெரிதும் போற்றற்குரியனவாகும்.

இவன்காலத்து விளங்கிய கிராம சபைகளால், குடியாட்சி முறையை வளர்ப்பதில் இவனுக்கிருந்த ஆர்வம் புலனாகின்றது. இவன் எடுப்பித்த இராசராசேச்சரத்தில் உள்ள 'தக்கிண மேரு' எனப்படும் பெரிய கோபுரம், பழமை வாய்ந்த சிற்பக்கலையின் ஞாபகச்சின்னமாகவும், இவனது கீர்த்தித்தம்பமாகவும் விளங்குவது என்னலாம்.

இராசராசன் அரசாண்ட காலம் கி. பி. 985 முதல் 1013 முடியவுள்ள இருபத்தொன்பது யாண்டுகளாகும். அதன்பின்னர், இவன் மைந்தனும், கங்கைக்கரையிலுள்ள நாடுகளையும், கடாரம் முதலியவற்றையும் வென்று கைக்கொண்ட பெருவீரனும் ஆகிய இராசேந்திரன் - I அரசனாயினான்.

சோழ மன்னர்கள்—களிறு, தேர், புரவி, காலாள் என்னும் நால்வகைப் படைகளும், வீரமுரசு, நீதிமுரசு, இகைமுரசு என்னும் மூன்று முரசுகளும், மற்றும் செங்கோலரசர்க்குரிய கொடி, குடை, தார், முடி முதலியனவும் உடையவராயிருந்தனர். தமிழகத்தில் முடியுடை வேந்தர் எனப்படுவார் மூவேந்தரே யாவர். சோழரது கொடி புலியும், தார் ஆத்தியும் ஆகும்; இலச்சினையும் புலியே. கரிகாலன் காலத்தில் அரசியல் நடாத்துதற்குத் துணையாக அமைச்சர் குழு, புரோகிதர் குழு, தானைத்தலைவர் குழு, தூதுவர் குழு, ஒற்றர் குழு என்னும் ஐம்பெருங் குழுக்கள் இருந்தன; கரணத்தியலவர், அரசனது ஆணையை நிறைவேற்றும் கருமவிதிகள், பண்டாரம் வகிப்போராகிய கனகச்சுற்றம், வாயிற் காவலர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்போரும் குழுமியிருந்தனர்; நட்பாளர், அறிவர், மடைத்தொழிலாளர், மருத்துவக் கலைஞர், நிமித்திகப் புலவர் என்போரும் அரசர்க்கு உறுதிச் சுற்றமாக விளங்கினர். குடிகளின் வழக்குக்களைக் கேட்டு, சிறிதும் முறைபிறழாது தீர்ப்பளிக்கும் அறங்கூறவையங்கள் (நீதிமன்றங்கள்) இருந்தன.

தானைத் தலைவர்க்கு ஏனாதி என்னும் பட்டமும், அமைச்சர் கணக்கர் வேளாளர் முதலாயினோர்க்குக் காவிதி என்னும் பட்டமும்,

வணிகர்க்கு எட்டி என்னும் பட்டமும், அவற்றிற்கு அடையாளமாகப் பொன் மலர்களும் அரசனால் அளிக்கப்பெற்றன.

அரசன் பிறந்தநாள், ஒவ்வோராண்டிலும் சிறப்பாகக் கொண்டாடப் பெறும்; அப்பொழுது மன்னவன் மங்கலவண்ண மாகிய வெள்ளணி யணிந்து, செருச்செய்தல், சிறை செய்தல், கொலை செய்தல் முதலிய செற்றச் செயல்கள் செய்யாதொழிந்து, சிறைவிடுதல், இறைதவிர்தல், புலவர் முதலிய தக்கார்க்கு வேண்டுவன தருதல், இரவலர்க்கீதல் முதலிய அறச்செயல்கள் செய்யாநிற்பன். இங்ஙனமே முடிபுனைந்த நாள்தொடங்கி, ஒவ்வோராண்டிலும் முடிசூட்டுநாளும் கொண்டாடப்பெறும்.

இங்கே கூறியவெல்லாம் இராசராசன் ஆட்சிக்கும் பொருந்தும்; மற்றும், அவன்காலத்தே பத்திரங்களைப் பதிவு செய்யத்தக்க ஆவணக்களரி முதலாயினவும் சிறக்க அமைந்திருந்தன. அரசன் இன்றியமையாத வினைகளை உடன்கூட்டத்து அதிகாரிகளோடு ஆலோசனை செய்து இயற்றுவன். இராசராசனுக்கு அளவற்ற பொருள்வலியும், படைவலியும் இருந்தமையால், அவன் மேற்கொண்டவினையெல்லாம், குன்றேறி யானைப்போர் கண்டாற்போல், இனிதின் முடிவனவாயின.

6. பொய்யாமொழிப் புலவர்

'தொண்டை நன்னாடு சான்றோ ருடைத்து' என்ற முன்னோர் மொழியின்படி, தமிழகத்திற் சீர்த்தி பெற்ற பெரியோர் பலரும் தோன்றியநாடு தொண்டைமண்டலமே யாகும். தமிழ்நாட்டின் வடபகுதியிற் பெரும்பான்மை இம் மண்டலத்தைச் சார்ந்ததே. இத் தொண்டைநாட்டில் அவதரித்த அடியார்களும், சமயாசாரியர்களும், புலவர் பெருமக்களும் எண்ணிறந்தவ ராவர். அவ்வையார், முதலாழ்வார்கள், சேக்கிழார், இராமாநுஜர் போன்ற பெரியோர்களைப் படைத்து உதவியது இந்நாடென்றால், இதன் பெருமையை விரித்து விளங்கக் கூறவும் வேண்டுமோ! இத்தன்மை வாய்ந்த சான்றோர்களுள் ஒருவரே நாம் கூறப் புகுந்த புலவர் என்பது, இவர் பெயராலும், நூல்களாலும், கர்ண பரம்பரையாலும் அறியக் கிடக்கும். இவர்தம் வரலாற்றைத் தொகுத்துச் சுருக்கமாக இங்கே கூறுகின்றோம்:

பொய்யாமொழியார் என்பதற்கு, என்றும் மாறாத வாக்குடையவர் என்பது பொருள். இதனால், இவருடைய சத்தியவசனம்பற்றி, இவர்க்கு இப்பெயர் வழங்கலாயிற்று என்பது விளங்கும். இப்புலவர் வாழ்ந்துவந்த இடம், தொண்டை மண்டலத்தின் உட்பிரிவுகளுள் ஒன்றான செங்காட்டுக் கோட்டத்தில் துறையூர்

என்னும் பதியாம். சிறு பிராயத்திலே இவர் தெய்வானுக்கிரகம்பெற்ற கவியாக விளங்கினர். வயிரபுரம் என்னும் ஊரில், இவர் சிறுவயதில் வயலொன்றைக் காவல் புரிந்துவந்தபோது, காளிங்கன் என்பவனது குதிரை பயிரைமேய, அதைத்தடுக்க வேறுவகை காணாது, அங்குள்ள காளிகாதேவியை நோக்கி,

*'வாய்த்த வயிரபுர மாகாளி யம்மையே
ஆய்த்த வருகா ரணிவயலிற்—காய்த்த
கதிரைமா ளத்தின்ற காளிங்க னேறுங்
குதிரைமா ளக்கொண்டு போ'

என்று பாட, அக்குதிரை உடனே இறந்து விழுந்ததென்று கூறுவர். பொய்யாமொழியார், கலைமகளின் அருள்பெற்றுப் பின்பு புலவர்சிகாமணியாய் வாழ்ந்திருந்தனர். அவ்வாறு நாட்டிற் பெரும்புலவராய் விளங்கிய காலத்தே, சங்கமிருந்து தமிழாராய்ச்சி செய்த மதுரைமாநகரில், பாண்டியன் அனுமதிபெற்று, பழைய சங்கத்தை மறுமுறை கூட்டித் தமிழைவளர்க்க அவர் எண்ணினர்; எண்ணி, மதுரையைநோக்கிப் புறப்பட்டு, இடையில் திருச்சிராப்பள்ளியை அடைந்து, அங்கே மலைமேல் கோயில்கொண்டுள்ள சிவபிரானை வணங்கி, அவரருள் பெற்றனர். பின்பு சிலநாட்களில் அவ்வூரை நீங்கிப் புறப்பட்டு, இடையிலிருந்த பாலைவனத்-

* இக்கதையையே பிற்காலத்தார் கம்பர்க்கு ஏற்றிக் கூறுவதுண்டு; ஆனால், பழையவழக்கு அவ்வாறில்லை.

தைக் கடந்து சென்றபோது, புலவர் மிகவும் இளைப்புற்று வருந்தினர். அப்போது, முருகக் கடவுள், ஒரு வேடுவ வுருக்கொண்டு, அவர் எதிரே வந்து, 'நீர் யாவிர்?' என்று கேட்டார். பொய்யா மொழியார், 'யான் ஒரு புலவன்' என்று கூறவே, 'ஆயின், என்மீது ஒரு கவி பாடும்' என்று முருகவேடன் வேண்ட, அதற்கு இசைந்து, 'நன்று, உன் பெயர் யாது?' என்று புலவர் உசாவினர். 'முட்டை' என்று, ஏதோ தமது வாய்க்கு வந்ததொன்றைத் தம் பெயராக அவ் வேட முருகர் கூறினார்; அது கேட்டதும் பொய்யாமொழியார்,

'பொன்போலுங் கள்ளிப் பொறிபறக்கும் கானலிலே
என்பேதை செல்லற் கிசைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங்
கானவேன் முட்டைக்குங் காடு'

என்று அவ்வேடன் பெயரை அமைத்துப் பாடினர். அதுகேட்ட அக்கடவுள் உள்ளம் மகிழ்ந்தனராயினும், கொடிய பாலைவனத்தைப் 'பொன்போலும்' என்று தொடங்கியதனால் விருப்பில்லாதவர் போலக் கூறி, அப் புலவர் பாடிய அவ் வகப்பொருள்துறையிலேயே,

'விழுந்ததுளி யந்தரத்தே வேமென்றும் வீழ்ந்தால்
எழுந்த சுடர்சுடுமென் றேங்கிச்—செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்தே பெய்வளையும் போயினளே
பொய்யா மொழிப்பகைஞர் போல்'

என்று, பொய்யா மொழியாரின் பெயர்வரும்படி

தாம் ஒரு வெண்பாப் பாடி, தம் உண்மையுருவத்தைப் புலவர்க்கு வெளிப்படுத்தி, அவர் இளைப்பை மாற்றியதோடு, தம் வேலாயுதத்தினால் அப் புலவர் நாவில் எழுதி, அனுக்கிரகித்துச் சென்றனர். இதையே அருணகிரிநாதரும்,

'முற்றத்திரி வெற்றிக் குருபர
முற்பட்ட முரட்டுப் புலவனை
முட்டைப்பெயர் செப்பிக் கவிபெறு
பெருமாளே'

என்று தம் திருப்புகழொன்றிற் பாடலாயினர். இவ்வாறு பாலைவனத்தைக் கடந்து, இடையிலுள்ள க்ஷேத்திரங்கள் பலவற்றைத் தரிசித்துக்கொண்டு, திருக்கானப்பேர் என்ற காளையார் கோயிலைப் புலவர் அடைந்தார்.

பின்பு, பொய்யாமொழியார் திருக்கானப்பேரைவிட்டு நீங்கி, அக்காலத்தில் பாண்டியன் மந்திரியும், புலவர்களை ஆதரித்து வந்தவனுமான மாறனாட்டுத் தஞ்சைவாணன் என்ற தலைவனிடம் சென்று, அவனாற் பெரிதும் உபசரிக்கப்பெற்றார்; அந்நாளில், 'தஞ்சைவாணன் கோவை' என்ற பிரபந்தம் ஒன்று, அவன்மேற் புலவராற் பாடப்பட்டது. இக் கோவை சிறந்த தமிழ் நூல்களுள் ஒன்றாகும். இப் பிரபந்தம் பெற்ற தஞ்சைவாணன், அப் புலவர்க்கு வேண்டிய வரிசைகளை யளித்துச் சிறப்பித்தனன்.

அக்காலத்தே, புலவர், மதுரைச் சங்கத்தைப் பாண்டியன் உதவிகொண்டு கூட்ட எண்ணியுள்ள தம் கருத்தை அவ் வாணனுக்கு எடுத்துரைத்து, அவனுதவியால் மதுரை நகரையடைந்து, அரசனைக்காணவேண்டி அரமனை செல்ல, அரசன் சுவாமிதரிசனஞ்செய்தற்காகத் திருவாலவாய்க் கோயிலுக்குப் போயிருப்பதை யறிந்து, நேரே அக்கோயிலை அடைந்தனர். அங்கே, பாண்டியன் சிவபெருமான் திருமுன் தண்டனிட்டு வணங்கி நின்ற நிலைமையைக் கண்டு, பாதி வசையும் பாதி நசையுமாக,

'குழற்கா லரவிந்தங் கூம்பக்
குமுதம் பொதியவிழ்ப்ப
நிழற்கால் மதியமன் றேறுநின்
றிருக்குலம் நீயவன்றன்
அழற்கா லொளிர்சடை மீதே
யிருந்தமவ் வந்தியவன் னைக்
கழற்கால் வணங்குதி யோவணங்
காமுடிக் கைதவனே'

என்ற பாடலைக் கூறலாயினர். 'சிவபிரானது திருமுடியை இருப்பிடமாகக் கொண்டு விளங்குஞ் சந்திரனது வமிசத்தில் நீ பிறந்தவனாயிருந்தும், அப்பெருமானது பாதங்களை வணங்குதல் என்ன பொருத்தம்?' என்பது இப்பாடலின் கருத்து. இதனைக் கேட்ட அரசன், தரிசனம் முடிந்ததும் புலவர்பக்கம் திரும்பி, அவர் ஊர் பெயர் முதலியவற்றை விசாரித்து அறிந்து,

கோயிலைப் பிரதட்சிணஞ் செய்துகொண்டே, புலவர் தம்மிடம் வந்த நோக்கத்தை உசாவுவானாயினன். பொய்யாமொழியாரும் மதுரையிற் பழைய சங்கத்தைக் கூட்டித் தமிழாராய்ச்சி செய்விக்க வேண்டும் என்பது தம் பேரவா என்பதும், அதற்கு அரசன் உதவவேண்டும் என்பதுவே தம் கருத்து என்பதும் வெளிப்படக் கூறினார். அதுகேட்ட அரசன், 'தெய்வப் புலமை வாய்ந்த அச்சங்கத்தைக் கூட்டச் சிற்றறிவினரான நம்மால் ஆவதோ!' என்று சிறிது இகழ்ச்சிக்குறிப்புத் தோன்றச் சொல்லும்போது, சங்கத்தார் சந்நிதி நெருங்கியது; அவ்வளவில் அரசன் புலவரை நோக்கி, 'இச்சங்கத்தாரது திருவுருவங்களெல்லாம் சிரக்கம்பஞ் செய்யும்படி ஒருபாடலை நீர் இயற்றவல்லீரேல், இறந்த சங்கத்தை நீவிர் எழுப்பக் கூடியவரே யாவீர்' என்று புன்முறுவலுடன் கூற, புலவரும், 'அங்ஙனமே' என்று, சங்கத்தாரை நோக்கி,

'உங்களிலே யானொருவ னொப்பேனோ வொவ்வேனோ
திங்கட் குலனறியச் செப்புங்கள் — சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழென் பன்னூலு மேற்குமோ
ஏடவிழ்தார் ஏழெழுவீர் இன்று'

என்று பாடினார். அப்போது அத் தெய்வப் புலவர்களின் திருவுருவங்க ளெல்லாம் தத்தம் சிரங்களை அசைத்து மகிழ்ந்தன. அதுகண்டு பாண்டியன் அதிசயமடைந்து, மற்றும் புல-

வரைச் சோதித்தறிய எண்ணி, புலவருடன் சம்பாஷித்துக்கொண்டே போய், பொற்ருமரைக்கரையை யடைந்து, 'புலவீர், இப் பொய்கையில் முன்பு இருந்ததாகச் சொல்லப்படும் சங்கப்பலகை மேலே தோன்றி மிதக்கும்படிசெய்து, உமது தெய்வப் புலமையைக் காட்டுவீரேல், எண்ணிய காரியத்தை இனிது நிறைவேற்றுவேன்' என்று கூறினன். நந்தம் புலவர்பெருமான் அதற்கு இயைந்து, 'தமிழைப் போற்றும் அரசர்கள் இக்காலத்தில் இல்லையேயன்றிப் புலவர் சிகாமணிகள் உலகத்தில் உளர் என்னும் உண்மையைப் பாண்டியன் நன்கறியும்படி, 'சங்கப்பலகையே, நீ எழுந்து மிதப்பாயாக' என்ற கருத்துப்பட,

'பூவேந்தர் முன்போற் புரப்பா ரிலையன்றிப்
பாவேந்த ருண்டென்னும் பான்மைதான்—மாவேந்த
மாறன் அறிய மதுரா புரித்தமிழோர் [ன்
வீறணையே சற்றே மித'

எனப் பாடியதும், பொற்ருமரையுள் இருந்த சங்கப்பலகை மிதந்தெழுந்து, பின் தாழ்ந்தது என்பர். பாண்டியன், புலவர் பெருமானது தெய்வத்தன்மையை அறிந்து, வியப்பும் உவப்பும் அடைந்து, அவரிடம் தான் இழைத்தபிழைகளைப் பொறுக்குமாறு பெரிதும் வேண்டி, 'பொய்யாமொழியார் என்ற திருநாமம் உமக்கே தகும். நீர் ஒரு தெய்வப் புலவர்' என்று புகழ்ந்து கூறினன். அப்போது, புலவர்,

'அறமுரைத் தானும் புலவன்முப் பாலின்
திறமுரைத் தானும் புலவன்—குறுமுனி
தானும் புலவன் தரணி பொறுக்குமோ
யானும் புலவன் எனின்'

என்று பாடி, 'தலைச்சங்கமிருந்த சிவபிரானும், திருவள்ளுவரும், அகத்தியனாரும் போன்ற தெய்வப்புலவர் வரிசையில் யானுஞ் சேர்ந்தவன் என்று, அரசே, நீ கூறுவதைத் தரணி பொறுக்காது' என்று தம்மைத் தாழக் கூறி, தம் பெருமையைக் காட்டினார். இவ்வாறு பழைய தமிழ்ச்சங்கத்தைப் புதுப்பிக்க விரும்பி, பாண்டியனிடம் முயன்றுவந்த புலவர்பெருமானது எண்ணம் நிறைவேறி, சில நாள்வரைக் கைகூடி வந்ததென்றே சொல்லலாம். இப்புலவர் அரும்பாடுபட்டு மதுரைநகரில் நாட்டிய சங்கம், இவர்காலத்திலே அரசியல் மாறுபாட்டாலோ, பிறகாரணத்தினாலோ கலைந்துவிட்டதென்று தோன்றுகின்றது. அதனால், பொய்யாமொழியார் தம் முழுவாணாளையும் மதுரைமாநகரிற் கழித்தனரில்லை. இவர், தம் ஜீவிய காலத்தின் பிற்பகுதியில், பாண்டிய நாட்டைவிட்டுச் சோணாட்டை அடைந்தனர். அந்நாட்டில், அரசூரைத் தலைநகராகக் கொண்ட நாட்டின் அதிபனும், தமிழருமை யறிந்த வள்ளலாய்விளங்கியவனுமான சீநக்கன் என்ற தலைவன் இவர்க்குப் பெருநட்பாளன் ஆயினன். இவனை முதன்முதற் காணச் சென்றபோது, புலவர் பசியால்

வாட்டம் அடைந்திருந்தனர். அஃதறிந்த சீநக்கன், முதலில் அவர் பசிதீர்த்து, பின் அவருடன் அளவளாவக் கருதி, அப் புலவர்க்குப் பிரியமாயிருந்த புளியஞ்சோற்றை அளித்து உபசரித்தனன்; புலவர் அதனைஉண்டுபசியாறி, அச்சோற்றின் சுவைக்குப் பெரிதும் மகிழ்ந்து,

'அளிகொ ளுந்தொடை யன்ன ரசைக்குமன்
மூளிகொள் சீநக்க னின்றுவந் திட்டசீர்ப்
புளியஞ் சோறுமென் புத்தியிற் செந்தமிழ்
தெளியும் போதெலாந் தித்தியா நிற்குமே'

என, 'செந்தமிழ்ச் சுவை தெளியும்போதெல்லாம் சீநக்கன் அளித்த புளியஞ்சோற்றின் சுவை அதற்கேற்ற உவமானமாக ஞாபகத்துக்கு வருகின்றது' என்ற கருத்துக்கொண்ட பாடலை அவன் முன்பு கூறினர். இதனையே சோழமண்டல சதக ஆசிரியரும்,

'பொய்யா மொழியார் பசிதீரப்
புளியஞ் சோறு புகழ்ந்தளித்த
செய்யா ரரசூர்ச் சீநக்கன்
செய்த தெவருஞ் செய்தாரோ'

என்று பாடினர். பொய்யாமொழியாருடன் பழகப் பழக, அவரது அருமை பெருமைகள் தன்னை மிக்க வியப்படையச் செய்துவந்தமையால், சீநக்கன், அப் புலவரை ஒரு கணத்தும் விட்டுப் பிரிய ஆற்றாதவனாய், தன் ஆருயிர்த்துணைவராக அவரை மதித்து, வேற்றுமையின்றிக் கலந்து களித்து வந்தான். இச்-

சீநக்கனைச் சோழனது மந்திரிகளுள் ஒருவன் என்பர். இத்தலைவன்மூலம் சோழனைப் பார்க்க விரும்பிச் சென்று, தஞ்சையில் அரசாண்டு வந்த அவ்வரசனைக் கண்டு,

'திறையின் முறைகொணர்ந்து தெவ்வேந்த ரெல்லாம்
இறையு முறைகழிக்க வெண்ணார்—அறைகழற்காற்
போர்வேந்தர் போர்மாளப் போய்வா ளுறைகழித்த
தேர்வேந்தன் தஞ்சைத் தெரு'

என்று, தாம் அவன் நகரிற்கண்ட சிறப்பைப் புகழ்ந்து கூறினர். இப்பாடலைக் கேட்டும், மற்றும் புலவர் அருமை பெருமைகளை அறிந்தும் அவர்க்குச் சோழன் பெரிய வரிசைகளை அளித்துதவ, அவற்றுடன் அரசூர் சென்று, அங்கே சீநக்கனோடு முன்போலக் கலந்து வாழ்ந்துவந்தனர். இப்புலவரைச் சிறப்பித்த சோழன் இராஜேந்திரன் என்ற பெயர்கொண்டவன் என்பர், சோழமண்டல சதக ஆசிரியர்.

இவ்வாறு அரசூரில் சீநக்கவள்ளலுடன் விளங்கி வரும் நாளில், அடுத்த கண்டியூரிலிருந்த வண்ணாத்தி யொருத்தி, புலவர்க்குப் பெருமகிழ்ச்சி தரும்படி, அவராடைகளை மாசு நீக்கித் தூய்மைசெய்து கொடுத்து உபசரித்து வந்ததற்கு உவந்து, அவள்மீது ஒரு செய்யுளைப் பாடிப் புகழ்ந்தனர். பின்னர் ஒருகால் குலோத்துங்கச் சாவகன் என்னும்புலையன் புலவர்க்குப் பெருங்கோபமுண்டாகக் கொடுமையொன்றை இழைக்க,அவனுடல் வெடிக்கும்படி

பாடினார் என்று தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது.

இவ் வகையாகப் புலவர் சீநக்கனுடன் பெருநட்புப் பூண்டு வாழ்ந்துவரும் நாளில், ஒருநாள் இரவில் அவ்வள்ளல் சயனிக்குங் கட்டிலில் அவனும் பொய்யாமொழியாரும் அமர்ந்திருந்து நெடு நேரம் அளவளாவிக்கொண் டிருந்தனர். அப்போது நாழிகையானதால் புலவர் சீநக்கனைப் போசனத்துக்குப் போகுமாறு செய்து, அயர்ச்சி மிகுதியால் அக் கட்டிலிற்றானே ஒரு புறமாக நித்திரை போயினர். சீநக்கன் போசனம் முடித்துக்கொண்டு, நிலாமணிமேடையிற் சென்று சிறிது உலாவி மீண்டனன். அவன், புலவரைச் சிறிது விழிக்கும்படி மெல்லத் தட்டி யெழுப்ப, அவர் சிறுக விழித்தனர். அப்போது அப்பெருந்தகை, 'புலவீர், சிறிது விலகிக்கொள்வீராக; ஒரு புறம் நானும் படுப்பேன்' என்றான். புலவர் நித்திரை மயக்கந் தெளிந்து, 'இங்கேபடுத்துறங்கினோமே!' என்று, சரேலென விலகி நின்று, திப்பிரமைகொண்டவ ராயினார். சீநகக்கன் புன்முறுவல் பூத்து, 'புலவரேறே, அஞ்சாதீர், குற்றம் ஒன்றும் நிகழ்ந்திலது' என்றனன்.

இவ்வாறு ஓர் உயிர் இருடற்கு என்னும்படி, அவ்விருவரும் நெடுநாள் வாழ்ந்து வருங் காலத்தில், அவ்விருவரது உணர்ச்சி யொத்த பேரன்பைச் சோதிப்பவன்போல, யமனை-

வன் சீநக்கனது ஆருயிர்க்கு இறுதி தேடுவா-னாயினன். அப்பெருந்தகை, சில நாட்களில், தன்பால் உழுவலன்புடைய புலவர் பெருமானை விட்டு, வானுலகை யடைந்தனன். இவ்வாறு வேற்றுமையின்றி அபிமானித்துத் தம் ஆருயிர் நண்பனா யிருந்த வள்ளல், தம்மை விட்டுப் பிரிந்ததற்குச் சிறிதும் ஆற்றாதவராய், தம் வெற்றுடலைக்கொண்டு இவ்வுலகில் வாழ இசையாது, சீநக்கனுக்கென்று மூட்டப்பட்ட பேரெரியில் அவனுடன் வீழ்ந்து, உயிர் துறப்பதே கருமம் என்று புலவர் துணிந்தனர். முடிவில் அவ்வள்ளலின் உடல் பேரெரியில் வைக்கப்பட்டபோது, பொய்யாமொழிப் புலவர் அதனைப் பொறுக்காதவராய், அவனை நோக்கி, 'என் ஆருயிர் அரசே, அன்று கட்டிலில் யான் அறியாது உறங்கியபோது, என்னை நோக்கி, "சிறிது நகர்க, ஒருபுறம் யானும் படுப்பேன்" என்றாயே. அத் தகைய நீ, இன்று இந்த இம எரியில் யானும் நின்னுடன் ஒரு புறம் படுக்கச் சிறிது இடங் கொடுத்து விலகுவாயாக; யானும் நின்னுடன் வருகின்றேன்' என்னுங் கருத்தில்,

'அன்றுநீ செல்லக் கிடவென்றாய் ஆருயிர்விட்
டின்றுநீ வானுலகம் எய்தினாய் — நன்றுநன்று
வானக்க பூண்மடவார் மாரனே தென்னாரூர்ச்
சீநக்கா செல்லக் கிட.'

என்ற அரியதோர் பாடலைக் கூறி, அவனுடன் தீப்பாய்ந்து உயிர் நீத்தனர். இவ்வரிய பெரிய

செயலைக் கண்டும் கேட்டும் நாடு முழுவதும் வியப்பும் இரக்கமும் அடைந்தது.

இவ்வளவே பொய்யா மொழிப் புலவர் வரலாறாக இப்போது தெரிய வந்துள்ளவை. இச் செய்திகளால், இவர் தெய்வப் புலமை வாய்ந்த பெரியாரில் ஒருவர் என்பதும், சிவ-பிரானாலும் முருகவேளாலும் ஆட்கொள்ளப் பெற்ற அடியவர் என்பதும், தமிழ் மொழியை வளர்த்தற் பொருட்டு அரும்பாடு பட்டவர் என்பதும், தம் நட்பினரின்பொருட்டு உயிரை-யும் நீத்த பேரன்புடையவர் என்பதும், மற்றும் இவரது உத்தமகுண விசேடங்களும் நன்கு விளங்கக் கூடியன. சங்கநாளில் விளங்கிய கடையெழு வள்ளல்களில் ஒருவனும், தம் நட்பினனுமாகிய வேள்பாரியின் பொருட்டு உயிர்விடுத்த கபிலர் என்னும் புலவர் பெரு-மானைப்போல, பிற்காலத்தே உடனுயிர் நீங்கும் நட்பு முறையைக் கைக்கொண்ட பெரும் புலவர் இப் பொய்யாமொழிப் புலவர் ஒருவரே யாவர். 'பகைத்தாரிற் றீர்தலிற் றீப்புகுதல் நன்று' என்னும் முதுமொழியின்படி, இவ் விருவரும் உத்தமசில ராவர். இப் புலவர்பெருமானைப் போன்ற பெரியோர் வரலாறுகளை நந்தம் தமிழகம் என்றும் மறவாது போற்றுவதாக.

7. ஆர்க்கிமிடீஸ் (Archimedes)

மாந்தரது அறிவுவளர்ச்சிக்கு இன்றியமையாது வேண்டப்படுவது, கலைகளின் உணர்ச்சியே யாகும். நம் நாட்டில், அறிஞர், கலைகளை அறுபத்து நான்கு வகைகளாகப் பிரித்துக் கூறுவர். கலைகள் பலவற்றுள்ளும் சிறந்ததும், ஏனைய கலைகளுக்கெல்லாம் தாயகமா யிருப்பதும் கணிதமே யாகும். கணிதம், ஒருவனுக்கு அறிவைப் பெரிதும் கூர்மை யாக்குவது; அரிய செய்திகளை ஆராய்ந்து, உண்மைகாண உதவுவது. அதனால், கணிதம் கண்ணிற்கு ஒப்பாகும் என்று ஆன்றோர் அறிந்து கூறுவாராயினர்.

கடக்க முடியாத ஆறுகளை எளிதிற் கடப்பதற்குத் துணையாகும் பாலங்களை அமைக்க உதவியது எது? பார்ப்பதற்குப் பயங்கரமாகவுள்ள கடல்களைக் கவலையற்றுக் கடப்பதற்கு உதவுங் கப்பலை அமைத்துத் தந்தது எது? காண்பவர் மனத்தைக் கவரத்தக்க கோபுரங்களும், மாளிகைகளும், பெருங் கட்டடங்களும் அமைக்கத் துணையாவது எது? ஆகாயத்திற் காணப்படும் எண்ணிறந்த விண்மீன்களின் நிலைகளையும், சூரியனைச் சுற்றிவரும் கோள்களின் இயக்கங்களையும் இத்தன்மைய என்று காட்டுவது எது? நோய்க்கு மருந்து தரும் வைத்தியன், நோயாளன் நிலைக்குத் தக்க மருந்தைச் சேர்த்துக் கொடுக்க இயலுவது எது?

இவைபோல்வனவற்றிற்கெல்லாம் இயைபுந்த துணையாவது கணிதமே யன்றோ! உற்று நோக்கின், உலகில் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளிலும் கணிதத்தின் தத்துவமே அமைந்திருக்கக் காணலாம்.

அளவிறந்த அறிவை வளர்க்கும் கணிதத்தின் இயல்பினை எவரே எடுத்து முற்றும் இயம்பவல்லார்! இவ்வுலகின்கண் தோன்றிய அறிஞர் அனைவரும் கணிதத்தில் வல்லவராகவே விளங்கினர். அவர்களுள் ஒருவராய், கணிதத்தின் உதவியால் கணக்கற்ற அரிய செயல்களை ஆற்றிய ஆர்க்கிமிடீஸ் என்பவரது வரலாற்றை இங்குக் காண்போம் :

கிறிஸ்துநாதரின் அவதாரத்திற்குச் சில நூற்றாண்டுகளுக்குமுன் சைரக்யூஸ் (Syracuse) நாடு, செல்வமும் சிறப்பும் ஒருங்கே பெற்று, உலகத்திற்கு ஓர் அணிகலன் என விளங்கிநின்றது. அந் நாட்டை ஆண்டு வந்த அரசருள் பலர், சிறப்புறச் செங்கோல் செலுத்தி வந்தனர். அம் மன்னர்களுள் மிகச் சிறந்தவன் ஹெயிரோ (Hiero) என்பவன் ஆவன். அவன், பேரறிஞன் ; கல்வி வளர்ச்சிக்காகப் பெரிதும் உதவியதே யன்றி, பல சிறந்த பள்ளிக்கூடங்களையும், கட்டடங்களையும் கட்டினன் ; தன் நாட்டினர் உலகமெங்கும் வாணிபம் செய்தற்கு ஏற்ற முறைகளைத் தேடினன். மற்றும், தன் நாட்டு மக்களின் முன்னேற்றத்தையும்

நன்மையையும் கருதி, சிறந்த பல நீதிகளை நெறிமுறையில் இயற்றிக் கையாண்டுவந்தான். இத்தகைய அரசன் காலத்தில், ஸைராக்யூஸ்-நாடு உச்சநிலையை அடைந்திருந்தது என்பது ஒரு வியப்பாகுமோ!

ஸைராக்யூஸ் நாடு இங்ஙனம் விளங்க, அதற்கு அமைந்த ஓர் உயிரென ஆர்க்கிமிடீஸ் என்னும் பேரறிஞர் தோன்றினார். இவர், கி. மு. 287-ஆம் ஆண்டில் பிறந்தவர். இவர் எங்குப் பிறந்தவர்? எக்குலத்தினர்? என்பவைகளை எவரும் அறிந்து கூறினாரில்லை. ஆயினும், இவர் ஹையிரோ மன்னனுக்கு உறவினரும் சிறந்த அன்பருமாவர் என்பது, வழி வழியாகச் சொல்லப்படுஞ் செய்தியாகும். இவர்காலத்தில் இயூக்லிட் (Euclid)என்னும் பேரறிஞர் வாழ்ந்துவந்தனர்.

மற்றும், அலெக்ஸாந்திரியா (Alexandria)விலுள்ள சிறந்த கல்விமன்றம் உலகிலுள்ள பேரறிவாளரால் போற்றப்பட்டுச் சிறப்புடன் விளங்கிவந்தது. இவர், அங்கு ஒரு மாணவனாக இருந்திருத்தல் கூடும். அங்கிருந்த க்ஷேத்திர-கணித சாஸ்திரிகள் பலருக்குப் பற்பல கடிதங்கள் எழுதியிருப்பதனால், இக்கொள்கை உறுதிப்படும்: இவர் க்ஷேத்திர கணிதத்தில் மிக வல்லுநராக இருந்தனர் என்பதும் பெறப்படும். இவர், எகிப்து நாட்டிற்குச் சென்று, நைல்நதியின் தீரத்தில் உள்ள குடியானவர்கள்

சாகுபடி செய்வதற்கு ஏற்ற உதவி புரிந்தனர் என்பது, அந்நாட்டினர் வழங்கும் 'ஸ்பைரல் பம்பு' (Spiral Pump), அல்லது 'ஆர்க்கிமிடீஸ் ஸ்குரு' (Water Screw) என்பதனால் விளங்கும்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும், ஆர்க்கிமிடீஸ் ஆராய்ந்தறிந்த இயற்கை விதிகளையே அடிப்படையாகக் கொண்டு நடத்துகின்றோம். ஆர்க்கிமிடீஸ் சில செய்திகளைக் கண்டறிவதற்கு முன், அவை, பெரியோர்களும் கண்டு, பிரமிக்கக் கூடியவையாக இருந்தன. அவைகளை அவர் கண்டறிந்த பின்னர், சிறுவருக்கும் அவை எளிதில் விளங்குபவை ஆயின.

உற்று நோக்கினால், ஆர்க்கிமிடீஸ், இவ்வுலகத்துக்கே பேருதவி புரிந்த பெருங்கொடையாளி என்பது நன்கு புலனாகும். போர்க்களத்தில் அமர்புரியும் போர்வீரன் ஒவ்வொருவனும், தன் களத்தைக் காக்கும்பொருட்டு மாற்றார் படையின்மேல் வெடிகுண்டு எறியும்பொழுதெல்லாம் ஆர்க்கிமிடீஸ் செய்த உதவி, அவன் முன்வந்து நிற்கின்றது. நைல் நதியினின்றும் நீரை மேலுக்கு இழுத்து இறைத்து வயல்களுக்குப் பாய்ச்சிப் பெரும்பயன் உண்டாகச்செய்து, அவ்விளைபொருள்களை வீட்டிற்குக் கொண்டுபோகும் உழவர்கள் ஆர்க்கிமிடீஸுக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். ஆர்க்கிமிடீஸ் ஆராய்ந்து தந்த அறிவின் கொடையால்தான், முடிவில்லா

மறையோடு கூடிய அச்சினால் மோட்டார் வண்டிகள் ஓடுகின்றன; கலங்கள் கடலில் விரைந்து செல்கின்றன. வேறு வேறு தொழில் செய்யும் எந்திரங்களும் தொழில்புரிகின்றன. நீரில்மூழ்கிச் செல்லும் 'ஸப்மரைன்' (Submarine) கப்பல்களும் யுத்தக் கப்பல்களும், அச்சமின்றிச் செல்வதற்கு அடிப்படையாக இருப்பன ஆர்க்கிமிடீஸ் கண்டறிந்த அரிய முறைகளே யாகும்.

கிரீஸ் தேசத்தில் வாழ்ந்து வந்த அறிஞர் பலர், இயற்கையின் இயல்புகளை நுணுகி ஆராய்ந்து, பல அரியசெய்திகளை உலகத்துக்கு உதவினர்; ஆயினும், அவருள், ஆர்க்கிமிடீஸைப் போல, கணித வாயிலாக நிச்சயித்தறியக் கூடிய விஷயம் ஏதும் கண்டறிந்தார் இல்லையாம். இவர் கணித ஆராய்ச்சியால் விண்ணிற்கும் மண்ணிற்கும் உள்ள தூரத்தைப் பாகையாகக் கொண்ட ஓர் உருண்டை, எவ்வளவு எடை மணல் கொள்ளும் என்பதைக் கண்டறிந்தனர். பல நாட்டினரும் ஆர்க்கிமிடீஸ் கண்டறிந்த முதல்விதிகளைத் துணையாகக் கொண்டே கணிதக்கலையை வளர்த்து வருகின்றனர்.

எகிப்து தேசத்தில் பற்பல தானியங்கள், பருத்தி, கரும்பு முதலியவற்றைப் பயிரிடும் குடியானவரும், நிலத்தில் புதைந்துகிடக்கும் நிலக்கரி முதலியவைகளை வெட்டியெடுக்கும் சுரங்க வேலைக்காரரும், போர்க்கப்பல், வாணிகக்

கப்பல் இவைகளைக் கட்டுங் கப்பற் றொழிலாளரும், உடுக்களின் கனம் அளவு தூரம் முதலியவைகளை ஆராய்ந்து கூறும் வானசாஸ்திரிகளும் ஆர்க்கிமிடீஸ் உபகரித்த நன்றியை நினைந்து, தலை தாழ்த்தக் கடமைப்பட் டுள்ளார்கள்.

சைரக்யூஸ்நாடு தன் பொலிவெல்லாம் இழந்து, பெருங் காடாய்க் கிடந்த காலத்தில், இத்தாலியா தேசத்துப் புலவராகிய சிசிரோ (Cicero) என்பவர் ஆர்க்கிமிடீஸ் என்பவரது உடல் அடக்கம் செய்யப்பட்ட கல்லறையைக் கண்டார். அங்கு ஆர்க்கிமிடீஸ் புகழைக் கூறும் ஒரு செய்யுளும், ஒரு சிலிண்டரும் (Cylinder), ஒரு ஸ்பியரும் (Spear) பொறித்திருக்கக்கண்டு, வியப்புக்கொண்டு, செயலற்று நின்றார்.

அழிந்து சிதறுண்டு கிடக்கும் கல்லறை மேடையைக் கண்டு அப்பெரியார் திகைத்து நின்றதற்குக் காரணம், அஃது அழியாப் புகழை நிலைநாட்டிய ஆர்க்கிமிடீஸ் கல்லறை யென்று கண்டதேயாகும். அவர் உடல், மண்ணோடு மண்ணாகி, புழுதியோடு புழுதியாகிப் பல நூற்றாண்டுகளாகியும் அவரைப்பற்றிய உணர்ச்சியும், அவர் புதிது புதிதாக ஆராய்ந்து கண்டறிந்த ஆராய்ச்சியின் பயனும் நம்மைவிட்டு அகலாமல் நிலைபெற்று வருகின்றன.

ஆர்க்கிமிடீஸுக்கு 24-ஆம் வயது நடக்கும்பொழுது, ஹெயிரோ என்பவர் ரோமரோடு

ஒருசமாதான உடன்படிக்கை செய்துகொண்டார். அதனால், அவர்களுக்குள் நிகழ்ந்த போர் ஒருவாறு அடங்கிற்று. அடங்கவே, ஸைரக்யூஸ் நாட்டினர் மிக்க இன்பத்துடன் தம் வாழ்நாட்களை நடத்திவந்தனர்.

அப்போது ஆர்க்கிமிடீஸ் என்பவருக்கு ஒரு புத்துணர்ச்சி உண்டாயிற்று. அக் காலத்திற்றான் ஆர்க்கிமிடீஸ், சிலிண்டர், ஸ்பியர் முதலியவைகளைப் பற்றிய விஷயங்களை முதன்முதலாகக் கண்டுபிடித்தார். இவர் ஆராய்ச்சிகளெல்லாம், உலகிலுள்ள பேரறிஞர் அனைவரையும் பெரிதும் வியக்கச் செய்தன.

ஹைரோவுக்கு ஆர்க்கிமிடீஸி னிடத்தில் அளவு கடந்த அன்பு உண்டு. ஆயினும், அவரது ஆராய்ச்சியின் பயன் என்னவென்று அவனுக்கு விளங்கவில்லை. பல முறையும் அம் மன்னன், பொருள்களைப்பற்றிய ஆராய்ச்சியையும் விட்டுவிட்டு, உலகத்திற்கு அநுகூலமான சிலவற்றைச் செய்துகொடுக்குமாறு வற்புறுத்தி வந்தான். ஆர்க்கிமிடீஸ் அவனது எண்ணத்தைக் கண்டு நகையாடினர்.

அக்காலத்தில் செல்வமாந்தர் தம் வாழ்க்கையை ராஜபோகமாக நடத்திவந்தனர்; அத்தகைய சிறந்த வாழ்க்கைக்கு அனுகுணமாகப் பல பொருள்களைப் படைத்துக் கொண்டனர். அவைகளெல்லாம் ஆர்க்கிமிடீஸ் கண்டறிந்த

விதிகளை அடிப்படையாகக் கொண்டவையே. அவ்வாறு அவர்கள் செய்வது, ஆர்க்கிமிடீஸுக்குச் சிறிதும் விருப்பமில்லை. அது விஷயமாக அப் பேரறிஞர், மன்னனுடன் பல முறை வாதாடியதுண்டு; மன்னன் மனமோ மாறுபடவில்லை.

இந் நிலையில் அவ்வரசன் சிறிது சினங்கொண்டு, 'பொருள்நூலின் அறிவினால் மக்கட்கு உண்டாகும் பயன்தான் யாது?' என்று வினவினன். ஆர்க்கிமிடீஸ், 'நான் நிற்பதற்கு இவ்வுலகமல்லாது வேறொரு கோளத்தில் ஒரு சிறிது இடம் கிடைத்தால், இவ்வுலக உருண்டையைத் தூக்கி அப்பால் வைத்துவிடக் கூடும்' என்று கூறினார்; அது கேட்ட அரசன் நகைத்து, இவ் வுலகத்திலும் பன்மடங்கு சிறிதாயுள்ள ஒன்றைப் புரட்டிக் காட்டும்படி கூறினன். உடனே, ஆர்க்கிமிடீஸ் பெரிய கப்பல்களுள் ஒன்றைக் கடலினின்றும் கரையின்மேல் பல மக்களைக்கொண்டு இழுக்கச் செய்தார்; ஒரு பெரிய வடம் கொண்டுவந்து, அவ்வடத்தின் ஒரு நுனியில் கப்பலைப் பிணித்தார்; மற்றொரு நுனியை ஒரு ராட்டினத்தின்மேல் இட்டு, தம் ஒற்றைக்கையால் பிடித்து இழுத்தார். உடனே கப்பலும் கடலில் செல்வதைப் போல, மணலிலும் அசைந்து சென்றது. க்ஷேத்திர கணிதத்தினால் பெறக் கூடிய சாதாரண சக்திகளுள் இஃது ஒன்றன்றோ!

இத்தகைய செயலைக் கண்ட மன்னனுக்கு உண்டான வியப்புக்கு ஓர் எல்லையும் உண்டோ! உடனே மன்னவன் ஆர்க்கிமிடீஸைப் பார்த்து, உலக முன்னேற்றத்திற்கு வேண்டியவைகளைச் செய்வதோடு, தன் நகரப் பாதுகாப்பிற்கு வேண்டியவைகளையும் அமைத்துத் தரும்படி கேட்டான். அவ்வாறே அற்புதம் வாய்ந்த யந்திரங்கள் பலவற்றை ஆர்க்கிமிடீஸ் செய்து கொடுத்தனர்.

ஆர்க்கிமிடீஸ், தம்கலைஞானத்தை வளர்ப்பதில் சிறிதும் சோர்வு கொள்ளாமல், நாளுக்கு நாள் அதில் கண்ணுங் கருத்துமாக அழுந்தி உழைத்து வந்தார். ஆனால், அவர் கொள்ளும் அளவுகடந்த முயற்சியை, அவர் அன்பர்கள் விரும்பவில்லை. சில சமயங்களில் ஆர்க்கிமிடீஸ் கூட்டத்தை விரும்பாது, தனித்திருக்க விழைவார். நுணுக்கமான ஆராய்ச்சியில் ஈடுபட்ட பல நாட்களில் ஆர்க்கிமிடீஸ் உண்ணுதலையும் நீராடுதலையும் மறந்துவிடுவதுண்டு. அந்தச் சமயங்களில், அவர்தம் அன்பர்கள் அவரைத் தூக்கிச் சென்று நீராட்டுவர்; சிறிது சிறிதாக உணவை ஊட்டி அருந்தச் செய்வர். சிற்சில சமயங்களில் ஆர்க்கிமிடீஸ் தைலம் தேய்த்துக்கொண்டிருக்கும்பொழுதே, ஆழ்ந்த ஆலோசனையில் அழுந்தி, மணலைத் தொட்டு, தம் உடம்பெல்லாம் கோடுகள் வரைந்து, கணக்குப் போடுவார்.

ஹைரோ மன்னன், அக் காலத்தில் ஒரு பொன்முடி செய்ய எண்ணி, அம் முடிக்கு வேண்டிய பொன்னைத் தட்டான் ஒருவனிடம் கொடுத்தான்; அவனும் செய்து முடித்தான். அதனைப் பார்த்தவுடன், அரசன் உள்ளத்தில் ஓர் ஐயம் உண்டாயிற்று. அஃதாவது: பொற்கொல்லன் சிறிதளவு பொன்னைக் கவர்ந்துகொண்டு, அந்நிறையுள்ள வெள்ளியை அதில் கலந்திருப்பான் என்பதாம். அதனை எவ்வாறு கண்டுபிடிப்பது என்று அரசனுக்குப் புலனாகவில்லை; ஒரு நாள் அவன் இச் செய்தியை ஆர்க்கிமிடீஸிடத்திற் கூறினான்; அவர் அதைப் பற்றி ஆழ்ந்து சிந்தித்து வந்தார். ஒரு நாள் அவர், வழக்கப்படியே நீராடச் சென்றவர், தொட்டியில் நிறைய நீர் இருக்கக் கண்டு, தம் காலைப் பையவைத்து, அதில் இறங்கினார். தொட்டியினின்றும் நீர் வழியலாயிற்று. நமக்கு இந் நிகழ்ச்சியில் ஏதும் வியப்புத் தோன்றவில்லை; இது நாம் எப்போதும் காணும் காட்சியே. ஆனால், ஆர்க்கிமிடீஸ் ஆனந்த பரவசராய், குதித்து எழுந்து, 'நான் கண்டுபிடித்துவிட்டேன்! நான் கண்டுபிடித்துவிட்டேன்!!' என்று கூறிக்கொண்டே, தெருவில் ஓடினார். அதைக் கண்டோர் அனைவரும் பெருவியப்புக்கொண்டனர். ஒரு கனபதார்த்தத்தைத் திரவ பதார்த்தத்தில் அமிழ்த்தினால், அப் பதார்த்தத்தின் பரிமாணத்தின் அளவிற்குத் திரவபதார்த்-

தம் வெளியேறும். அதிலிருந்து ஆர்க்கிமிடீஸ் அறிந்தது யாதெனில், ஒரே எடையுள்ள தங்கமும், வெள்ளியும் வெவ்வேறு அளவாக நீரை அகற்றும் என்பதாம். ஆகவே, தங்கத்துடன் வெள்ளி கலந்திருப்பின், அக்கலவைப்பொருள் அகற்றும் நீர் அதே எடைகொண்ட சுயதங்கம் அகற்றும் நீரளவினும் வேறுபடும் என்பதாம். இந்த உண்மையைக் கண்டுபிடித்தவுடன், கொல்லன் களவும் வெளிப்பட்டது.

இங்ஙனம் வேடிக்கையான முறையில் கண்டுபிடிக்கப்பட்ட விதியானது, இப்போது ‘ஸ்பெஸிபிக் கிராவிடி’ (Specific Gravity) என்று ஆங்கிலத்தில் வழங்கி வருகின்றது. இந்த விதியைக்கொண்டே, திரவபதார்த்தத்தில் மிதக்கும் பொருள்களைப் பற்றிய விதியை விளக்கியுள்ளனர். அது யாதெனில், ஒவ்வொரு பொருளும் தன் பரிமாணத்தின் பாதியெடை யுள்ள திரவபதார்த்தத்தைவிட எடையில் குறைந்திருக்குமாயின், அந்தத் திரவபதார்த்தத்தில் அப்பொருள் மிதக்கும் என்பதாம். இவ்விதியைக் கொண்டே இக் காலத்தில் எஃகினாலும், மரத்தினாலும், மிகப் பெரிய கப்பல்களைச் சமைக்கின்றார்கள்.

ஆர்க்கிமிடீஸ் தமது கணித ஆற்றலைக் கொண்டே பகைஞர்களை எதிர்த்து, அவரைப் புறங்காட்டி ஓடச்செய்து, சின்னபின்னமாக்கிச் சீரழித்தனர். அக் காலத்தவ ரெல்-

லாரும், கணித சாஸ்திரியோடு பகை கொண்டால் அடையக் கூடிய அல்லல்கள் இவையென அறியுமாறு விளக்கினார்.

ரோமர்கள் விடாமுயற்சி கொண்டவர்களாய், மூன்று வருடங்கள் முற்றுகையிட்டு இறுதியாகச் சூழ்ச்சிகள் பலசெய்து, நகரத்துக்குள் நுழைந்துவிட்டனர். அவர்கள், நாடெங்கும் சுற்றிச் சூறையாடலாயினர். அதுபோது, ஆர்க்கிமிடீஸ் தமது இல்லத்தில் சில சித்திரங்களை வரைந்து, ஆழ்ந்து ஆராய்ந்துகொண்டிருந்தார். அப்போது ரோம்தேசத்துப் போர்வீரன் ஒருவன், கதவை உடைத்துக்கொண்டு, உள்ளே நுழைந்தான். அவனைக் கண்டவுடன் ஆர்க்கிமிடீஸ் தாம் வரைந்திருந்த சித்திரங்களைச் சுட்டிக்காட்டி, 'இவைகளை மிதியாதே' என்றார். அதே தருணத்தில் அக் கல்லாக் கனிமகன் அவரைத் தன் வாளால் வெட்டி வீழ்த்தினான்.

மார்சலார், 'ஆர்க்கிமிடீஸை எக்காரணத்தாலும் கொல்லக் கூடாது' என்று தன் வீரர்களுக்குக் கட்டளையிட்டிருந்தான். அவரை வெட்டி வீழ்த்திய வீரனும் ஆர்க்கிமிடீஸை அறியான். யாரோ சாமானிய மனிதன் என்றே அவன் எண்ணி, வெட்டி வீழ்த்தினான்.

ஆர்க்கிமிடீஸ் ஒப்புயர்வற்றவராக விளங்கினர்; தம் ஆயுளைக் கல்விக்கே அர்ப்பணம் செய்தனர்; கற்றதன் பயனைத் தமக்கே பயன்-

படுத்திப் பொருளீட்டி, மாடமாளிகைகள் கட்டி வாழ்ந்தாரல்லர்; படிப்பை நாடெங்கும் பரவச்செய்ய வேண்டும் என்னும் பரந்த நோக்கமே உடையவராய், தாம் ஆராய்ந்தறிந்த கல்வியின் பயனால் தம் நாட்டைப் பகைஞர்கையினின்றும் காப்பாற்ற முற்பட்டனர். கடைநாளில், கல்வியிலே கருத்தைச் செலுத்தி வந்து, கணித ஆராய்ச்சி செய்யும்போதே உயிர் துறந்தனர். மார்சலார், ஆர்க்கிமிடீஸ் வெட்டுண்டதைக் கேள்விப்பட்டு, மனம் மாழ்கி, கண்ணீர் விட்டழுது, அவர் அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி, அவரது சமாதியின்மேல் முப்பது சிலிண்டரும் ஒரு ஸ்பியரும் அமைத்தனன்.

ஆர்க்கிமிடீஸ் ஆற்றிய பெரும் ஆராய்ச்சிகளில் மிகச் சிலவே இப்பொழுது நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவர் க்ஷேத்திர கணிதத்தின் உதவியைக் கொண்டு செய்த பொறிகளைப் பற்றியும், வேறு கருவிகளைப் பற்றியும் இப்பொழுது நாம் ஒன்றும் அறிவதற்கில்லை. அவைகளைப் பற்றி அங்குமிங்குமாகச் சில விஷயங்களே கேள்விப்படுகிறோம். இத்தகைய பெருஞ் சிறப்பு வாய்ந்த இவர், பேரறிஞர்களுள் ஒருவர் என்பதில் ஐயம் உண்டோ?

குறிப்புரை

1. கடவுள் வாழ்த்து

உரு - அழகு, உருவம். ஊன் - மாமிசம், உடல்; கருவியாகு பெயர். கரு - மூலப்பொருள். மணி ஆடு பாவாய் - கண்மணிக்குள் அசைந்தாடுகின்ற கருமணி போன்றவனே. காவாய்- காத்தருள்வாய். அரு - அருவம், உருவமற்றது. ஆவடு தண் துறை - திருவாவடுதுறை; இது, தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள திருப்பதி. அமரர் ஏறு - தேவர்களுக்குத் தலைவன். (1)

ஏறு-எருது. பெம்மான், பெருமான் என்பதன் மரூஉ. எம்மான் - எம் தலைவன். பன்னாள் - பல நாள். பயில்வித்தான்-பழக்கினான். சித்து-அறிவு. திருமுதுகுன்று-விருத்தாசலம்; இது, தென்னார்க்காடு ஜில்லாவிலுள்ள திருப்பதி. (2)

இவ்விரண்டு பாசுரங்களும் திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்தவை.

திசை நான் முகன்-நான்கு திக்குக்களை நோக்கிய நான்கு முகங்களையுடையவன்; பிரமன். மூவர் - பிரமன், விஷ்ணு, சிவன் என்பவர். முன்னிய - முற்பட்ட. விருத்தனை-பழமையானவனை. கண் நுதல் - நுதலிற் கண்ணை யுடையவன்; சிவன். அருத்தன் - பாதி யுடலை யுடையவன்; திருமால்; திருமால்,சிவபெருமானைத் தமது திருமேனியில் ஒரு பகுதியில் கொண்டுள்ளார் என்பது அறிக. பரி - குதிரை, குதிரையாக வந்த கேசி என்னும் அசுரன்; பரி கீறியது, கிருஷ்ணாவதாரத்தில். அப்பில் - தண்ணீரில். ஆர் அழல் - மிக்க நெருப்பு. கண்ணமங்கை - திருக்கண்ணமங்கை; இது சோழ நாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. பொழில் - சோலை. (3)

இது, திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது.

வான் - மேகம். பைங்கூழ் - பயிர். மைத்து - கறுத்து. விட்டாவிடினும் - அழிக்கா விட்டாலும். விற்றுவக்கோடு - மலைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. சித்தம் - மனம். (4)

இது, குலசேகராழ்வார் அருளிச்செய்தது.

மடப் பிடி - இளைய பெண்யானை. மான் பிணை - பெண் மான். கூர் இருள் - மிக்க இருள், அஞ்ஞானம். (5)

இது, குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்தது.

அதலசேடன் - கீழுலகத்தின் கீழேயுள்ள ஆதிசேடன். அகிலம் - பூமியில். அபினகாளி - அபின்னமாகிய காளி, சிவபெருமானின் வேறாகாத காளி. வாதாடு - போர் செய்கின்ற. விடையில் ஏறுவார் - சிவபெருமான். மதுர வாணி - மதுரமான சொல்லையுடையவள்; சரசுவதி. வனச மாமியார் - தாமரையிலிருக்கும் இலக்குமியாகிய மாமியார்; வனசம் - தண்ணீரில் பிறப்பது. மாமனார் - திருமால். கதை - கதாயுதம். கருதலார் - தன்னை மதியாதவர்; பகைவர். காலி - பசு, விராடன் பசுக்கள். கனக வேத கோடு - பொன்மயமானதும் வேத ஒலியுடையதுமான சங்கு; கண்ணபிரான் விசயன்தேரில் நின்று கோடு ஊதியது பாரதயுத்தத்தில். உததி - சமுத்திரம். உலகம் மூடு - உலகத்தைத் தன்னுள் அடக்கிய. சீபாதம் - திருவடி; உலகத்தை அடிக்குள் அடக்கியது திரிவிக்கிரம அவதாரத்தில். உவணன் - கருடன்; சுபர்ண என்னும் வடசொல்லின் திரிபு. தாமம் - ஒளி. (6)

கோடாத - தவறுதலில்லாத. வேதன் - பிரமன். வேதனுக்கியான் என்பதில், இ - குற்றியலிகரம். குன்று - கிரவுஞ்சகிரி. தாள் தாளன் - முயற்சியைத் தரும் தாளையுடையவன்; இனி, தாளாளன் என்பது தாடாளன் எனத் திரிந்தது எனவுமாம். தணிகை - திருத்தணிகை. தண்டை - சதங்கை. (7)

இவ்விரண்டு செய்யுட்களும் அருணகிரிநாதர் அருளிச்செய்தவை.

விடுகின்றன - அழிகின்றன. வெகுண்டிடில் - கோபித்தால். அஞ்சலே-பயப்படாதே. நாடுகின்றவர்-விரும்புகின்றவர்.

மார்க்கண்டேயர் சிவபெருமானால் இறப்பு ஒழிந்து முத்தியடைந்தது அறிக. (8)

இஃது, இராமலிங்க சுவாமிகள் அருளிச்செய்தது.

தீட்டுவோன் - எழுதுபவன். நிவவு - வார்க்கட்டு; முறுக்காணி. சராசரம் (சரம் அசரம்) - அசையும் பொருளும் அசையாப் பொருளும்.

இது, மாயூரம் வேதநாயகம் பிள்ளை இயற்றியது. (9)

II - அறவுரை :

புறநானூறு : இஃது எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

உயிர்த்து - உயிராகவுடையது. மலர்தலை - விரிந்த இடத்தையுடைய. அரசன் முறைசெய்யாவிடின் உயிர்களுக்கு ஆதரவாகிய உணவும் நீரும் பயனுகா என்பது கருத்து. தானை , படை. (1)

இது, மோசி கீரனார் பாடியது.

நாளன்று - நல்லநாள் அல்லாததாக, தீயநாளில். போகி - போய். புள் - புள்நிமித்தம்; சகுனம். தட்ப - தடுக்க. பதன் - காலம். புக்கு - உட்புகுந்து. திறன் - கூறுபாடு; சொல்லத் தக்க முறை. வறிது - ஒன்றும் பெறாது. நெறிகொள - ஒழுங்குபட. பாடு ஆன்று-ஓசை நிறைந்து; அகன்று என்பது அன்று என மருவிற்று. பீடு கெழு - பெருமை பொருந்திய. மலையன் - மலையமானை, காரியை. பாடியோர் - பாடிய புலவர். (2)

ஒருதிசை - ஓரிடத்தில். உள்ளி - நினைத்து. நால் திசை - நான்கு திசைகளினின்றும். பரிசில் மாக்கள் - பரிசில்பெறும்

பார்கள். வரிசை - முறைமை, தகுதி. மா வண் தோன்றல்- மிக்க வன்மையையுடைய தலைவனே. நற்கு - நன்கு. பொது நோக்கு - அனைவரையும் ஒப்ப நோக்குதல். மதி, முன்னிலை யசை. (3)

புலவர்களின் தகுதியறிந்து, அவர்களுக்குப் பரிசில் நல்குதல் வேண்டும் என்பது கருத்து.

இவை, பலையமான் திருமுடிக்காரியைக் கபிலர் பாடியன.

புறங்கருதல் - பாதுகாத்தல். சான்றோன் - அறிவால் மிக்கவன். நன்னடை - நன்னிலை, பகுதி. ஒளிறு. பிரகாசிக்கின்ற. சமம் - போர். முருக்கி - கெடுத்து. எறிந்து - வெட்டி., கொன்று. (4)

இது, பொன்முடியார் பாடியது.

திரிகடுகம் :

திரிகடுகம் என்னும் இந் நூல், பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று. திரிகடுகம் - காரமுள்ள மூன்று பொருள்கள்; அவை - சுக்கு, மிளகு, திப்பிலி என்பன. இம்மூன்று பொருள்களாலாகிய மருந்து உடலுக்கு நன்மை தருவதுபோல, மும்மூன்று பொருள்களையுடைய ஒவ்வொரு செய்யுளும் மக்கட்கு நன்மை பயத்தலின், திரிகடுகம் எனப் பெயர் பெற்றது. இந் நூலாசிரியர் நல்லாதனர்.

கணக்காயர் - உபாத்தியாயர். பிணக்கு - மாறுபாடு. அவைக்களன் - சபையிடம். பாத்து - பகுந்து கொடுத்து. பயத்தல் - தருதல். (1)

தழீஇ - தழுவி. வீழ் - வீழ்து. கடைமணி - பூண்; வேற்றண்டில் எஃகு செருகுமிடத்துக் கட்டப்படுவது. திண்ணியான் - உறுதியுள்ளவன். பற்று விடல் - பற்று விடலாகாது. (2)

ஊறிய - ஊறிக்கிடந்த; மிகுந்த. கைப்பதனை - கசப்பான பொருளை. கட்டி - வெல்லக்கட்டி. (3)

அணிகலம் - ஆபரணம். காமுற்ற - விரும்பப்படுகின்ற. நண்ணும் - அடைகின்ற. குறியுடையார் - ஆராயும் இயல்பினையுடையார். (4)

கொண்டன - மேற்கொண்ட ஒழுக்கங்கள்; வினையாலணையும் பெயர். ஒரீஇ - நீக்கி. (5)

தாளாளன் - முயற்சியுடையவன். படா - படாமல். வேளாளன் - உபகாரஞ் செய்பவன். விருந்து - விருந்தாளி; (விருந்து-புதுமை) பண்பாகு பெயர். கோளாளன் - கொள்ளுதற்கு உரியவன். கேள் - உறவு. (6)

நான்மணிக் கடிகை:

இதுவுங் கீழ்க்கணக்கினுள் ஒன்று. நான் மணிக்கடிகை - நான்கு இரத்தினத் துண்டு. இந் நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படும் நான்கு பொருள்களும் நான்கு இரத்தினங்களுக்கு ஒப்பாகும். அதனால், இந்நூல் இப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் விளம்பி நாகனார்.

எள்ளற்க - இகழாதிருக்க. என் பெறினும் - எப்படிப்பட்ட பொருளைப் பெறுவதாயினும். கொள்ளார் கை - கொள்ளத்தகாதவரது கை. மேலதா - (மேலது ஆக) மேலாயிருக்க. உள் சுடினும் - மனம் வெதும்பினும். சீறற்க - கோபியாதிருக்க. சிற்றில் பிறந்தார் - எளிய குடியிற் பிறந்தவர். (1)

கன்றாமை - பயிலாமை. கடிய - கொடுஞ் செயல்கள். கொல்லா - கெடுக்காமல். வெகுளி - கோபம். அடல்-அழித்தல். வினை - தொழில். (2)

இன்னாமை - துன்பம். இரவு - யாசகம். மன்னுதல் - நிலைநிற்றல். இசை நடுக - புகழை நிலைநிறுத்துக. விடல்-விடுக. (3)

வாள் நுதல் - ஒளியுள்ள நெற்றியையுடையவள், மனைவி; அன்மொழித் தொகை. இன்மை - இல்லாதிருத்தல். நட்டோர் - சிநேகிதர்; நள் - பகுதி. (4)

திருவின் - பொருளைக் காட்டிலும். திறல் - வலிமை. வாய்த்த - அமைதியான பொருள்கள். எற்றானும் - எனைத்தானும். இன்மையின் - வறுமையைக் காட்டிலும். இன்னாது - துன்பந்தருவது. இல் - இல்லை. வன்மையின் - வலிமையினும். வன்பாட்டது - வலிமையையுடையது. (5)

கண்ணின் - கண்ணைப்பார்க்கிலும். துன்னிய - நெருங்கிய. ஒண்மைய ஆய் - ஒளியுடையனவாகி. ஒளி - சிறப்பு. சான்ற - அமைந்த. (6)

சிறுபஞ்ச மூலம்:

இதுவும் பதினெண் கீழ்க்கணக்கைச் சேர்ந்தது. பஞ்ச மூலம் - ஐந்து வேர்; அவையாவன - கண்டங்கத்திரி வேர், சிறுமல்லி வேர், பெருமல்லி வேர், சிறுவழுதுணை வேர், நெருஞ்சி வேர் என்பன. இவற்றால் செய்த மருந்து பல நோய்களையும் தீர்க்கும். 'பேசுபன்னோய் தீர்க்கும், அரிய சிறுபஞ்ச மூலம்' என்பது காண்க. இந் நூலில் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்பட்டுள்ள ஐவைந்து பொருள்கள் மக்களின் அறியாமையைப் போக்கி அறிவை வளர்க்குமாதலின், இப்பெயர் பெற்றது. இதன் ஆசிரியர், காரியாசான்.

போகம் - இன்பம். புறமொழி - புறங்கூற்று. உய்த்து - செலுத்தி, சேர்த்து. உய்யான் - வாழ்ந்திரான். (1)

பிழைத்தல் - தமக்குப் பிறர்செய்த பிழைகளை. இழைத்த - செய்த. பகை - பகையுடையவர். பல்பொருளார் - பலபொருள்களையுடையவர். நகை கெட - சிரித்தல் கெட; சிரியாதிருக்கும்படி. பல் பொருளார் நகை கெட வாழ்வதும், நல்லார் நகை கெட வாழ்வதும் எனக் கூட்டுக. (2)

வழங்கு - வழங்குதல். வெருவாமை - அஞ்சாதபடி. விழைந்து - விரும்பி. ஓம்பி - பேணி. திரு - செல்வம். தெய்வதை - தேவதை; கடவுள். தேற்ற - உறுதியாக. வழிபாடு தொண்டு. (3)

வார் சான்ற - நீட்சி மிக்க. கூந்தல் - கூந்தலை யுடைய வளை; ஆகுபெயர். தாவா - கெடுதலில்லாத. கோ - அரசன். ஓவாது - ஒழியாது. (4)

பொச்சாப்பு - மறதி. முற்றாமை - (அறிவு) நிறையாமை. முரண் - மாறுபாடு. தெற்ற - தெளிவாக. தொழில் மகன் - வேலைக்காரன். உழுமகன் - பயிர்செய்வோன். (5)

மூத்தாலும் - வயது முதிர்ந்தாலும். மூவார் - அறிவில் முதிர்ந்தவராகார். தேற்றாதார் - தெளியாதார். நன்று அறியாரும், நூல்தேற்றாதாரும் மூத்தாலும் மூவார் எனக் கூட்டுக. பாத்தில் - பாத்தியில். நாறுக - தோன்றுக. (6)

ஏலாதி :

இது பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று; இதனைச் செய்தவர் கணிமேதாவியார். ஏலாதி என்பது ஏலம் முதலிய ஆறுவகைப் பொருள்களா லாகியதொரு கலவைப் பொருள்.

அது, மணமுடையதாய், மாந்தர்க்கு உடல்நலத்தைத் தருவது. இந்நூலின் ஒவ்வொரு செய்யுளிலும் கூறப்படும் அவ்வாறு பொருள்களும் மாந்தர்க்கு அறியாமையை நீக்கி அறிவை ஆக்குமாதலின், இப்பெயர் பெற்றது.

சிதை - கெடுதியைத் தரும் சொற்கள். செற்றம் - பகை யுண்டாக்கும் சொல். சிறு இல்லான் - சிறுதல் இல்லாதவன். இயல்பு - தன் இயல்பு, தன் நற்குண நற்செயல். இனம் - இழிவு, குறை. நசைவார் - தன்னை விரும்புபவர். கொவ்வை - கோவைக் கனி. நாடுவார் - விரும்புவார். (1)

துப்பு இல்லார் - உணவு இல்லாதவர், வறிஞர். இடு - வலிமை. இனையர் - இவரைப்போன்றவராகிய. பண் ஆளும் - பண்ணை ஒத்த. மன்னன் ஆம் - அரசன் ஆவான். (2)

கயல் இயல் - கயல்போன்ற. உண்கண் - மைதீட்டிய கண். அயல - புறம்பானவை. அயலவர் நூல் - பிறர் கூறும் நூல்.

பொய் சொல்லாதவன் முதலிய அறுவருக்கும் வேறு அறநூல் வேண்டா என்றபடி. (3)

பால் - பக்கம்; ஆதரவு. சால - மிக. ஆழப்படும் ஊன் - நிறைய உண்ணும் உணவு. இமையவர்-தேவர். வீழப்படுவா - விரும்பப்படுவார். (4)

எள்ளாமை - பிறர் நிந்தியாமை. படர் - நோய்; துன்பம். பழிப்பின் நடை - பழிப்பினையுடைய ஒழுக்கம்; தீயொழுக்கம். தீர்தல் - விட்டு விடுதல். காணின் - உண்டாகப்பெற்றால். விண்டவர் - சொன்னவர். வேண்டாவிடும் - (அவனுக்கு) வேண்டாததாகும். (5)

கற்றது - படித்த பொருளை. மதியார் - எண்ணமலும். அன்னணம் - அவ்வண்ணம். ஓராமல் - நினையாமலும்; அஃதாவது, சுற்றத்தவரைச் சுற்றத்தார் அல்லர் என்று நினையாமல்; சுற்றத்தார் ஆகவே நினைத்து என்பதாம். உறையுள் - இருப்பிடம். உடுக்கை - ஆடை. இனி, உற்றாரை அன்னணம் ஓராமல் என்பதற்கு உற்றவர்களையும் கற்றது உணரார் என நினையாமலும் எனவுமாம். (6)

திருக்குறள் :

திருக்குறள் - அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என மூன்று பகுதிகளை யுடையது. இதனைச் செய்தவர் திருவள்ளுவநாயனர்.

செயற்கு அரிய - செய்வதற்கு அரியனவாகிய யோகம் முதலியவை. செய்கலாதார் -செய்யுந்திறமில்லாதவர். (1)

தொழாஅள் - வணங்காமல். தொழுநன் - கணவனை. (2)

என்பும் - எலும்பினாலும்; தம் உடம்பினாலும். (3)

இனிய - இனிய சொற்கள். உளவாக - இருப்பவும். இன்னாத - தீயசொற்களை. கவர்ந்தற்று - விரும்பியுண்டதனை ஒக்கும். (4)

நன்றி - பிறர்செய்த நன்மை. நன்றல்லது - தீமை (5)

நடு இகந்து - நடுநிற்றலை ஒழிதலால். ஆம் - உண்டாகக் கூடிய. ஆக்கம் - செல்வம். (6)

யாகாவார் ஆயினும் - காக்கவேண்டிய எல்லாவற்றையும் காக்கமாட்டாராயினும்; யாவும் என முற்றும்மை தொக்கது. சோகாப்பர் - துன்புறுவர். சொல்லிழுக்குப்பட்டு - சொற்குற்றத்திற் பட்டு. (7)

ஒல்லா - பொருந்தமாட்டா. தீய - சொற்களை. வழுக்கியும் - மறந்தும். (8)

ஒறுத்தார்க்கு - (தமக்குத் தீங்கு செய்தவர்களைத்) தண்டித்தவர்க்கு. பொன்றும் துணையும் - (உலகம்) அழியும் வரைக்கும். (9)

கொடுப்பது - (ஒருவன் ஒருவனுக்குக்) கொடுக்கும் பொருளில். அழுக்கறுப்பான் - பொறாமை செய்பவனது. உடுப்பது, உண்பது என்பன ஆகுபெயர்கள். (10)

துன்னியார் - நெருங்கினவர்; சுற்றத்தார். தூற்றும் மரபினர் - பலரும் அறியச் சொல்லும் தன்மை யுடையவர். என்னை கொல் - யாது தான் செய்யார். ஏதிலார்மாட்டு - அயலாரிடத்து. (11)

நீர் நிறைந்தற்று - நீரால் நிறைந்தது போலும். உலகு - உலக நடையை. அவாம் - விரும்பிச் செய்கின்ற; அவாவும் என்பதன் உகரங் கெட்டது. திரு - செல்வம் (12)

நாள - நாளும்படி. நன்னாயம் - நல்ல விருப்பான செயல்களை. செய்துவிடல் - செய்து விடுக. (13)

நெருநல் - நேற்று. பெருமை - (நிலையாமையின்) மிகுதியை. (14)

என் உடையரேனும் - எல்லாவற்றையும் உடையவராயினும் (15)

நிலத்து இயல்பால் - தான் சேர்ந்த நிலத்தின் தன்மையினால். திரிந்து - தன் தன்மை வேறுபட்டு. அற்று ஆகும் - அந்த நிலத்தின் தன்மையது ஆகும். (16)

வான் நோக்கி - மழையை எதிர்நோக்கி. கோல் - செங்கோல். அரசனது செங்கோல் இல்லாதவிடத்து மக்களுக்கு வானிறுலும் பயனில்லை என்பதாம். (17)

முயற்று இன்மை - முயற்சி யில்லாமை. இன்மை - வறுமை. புகுத்திவிடும் - அடைவித்துவிடும். (18)

உடுக்கை - ஆடை. கைபோல - கைசென்று உதவுதல் போல. ஆங்கே - அப்பொழுதே. இடுக்கண் - துன்பத்தை. களைவது - நீக்குவது. (19)

யாக்கைக்கு - உடம்பிற்கு. அருந்தியது - முன் உண்ட உணவு. அற்றது - ஜீரணமானதை. போற்றி - நன்றாக அறிந்து. உணின் - (அதன் பிறகு) உண்டால். (20)

நன்று அறிவாரின். தமக்கு நன்மைதரும் அறம் முதலியவற்றை அறிபவரைக் காட்டிலும். கயவர் - (அவற்றை அறியாத) கீழ்மக்கள். திரு உடையார் - நன்மையுடையாராவர். அவலம் - கவலை. இது குறிப்பால் இகழ்ந்தவாறு. (21)

தொழுது - பிறரைத் தொழுது. (22)

III. தனிப்பாடல்

முக்காலுக்கு - மூன்று கால்களோடுகூடி நடத்தற்கு; ஊன்றுகோலின் துணையால் நடத்தல்பற்றி முக்கால் என்றார். முன் நரையில் - முன்னர் வரும் நரையில். அக் காலரை - அந்தக் காலன் முதலியோரை. கால் - காற்று; உயிர். இருமாமுன் - இருமுதற்குமுன். மாகாணி - சுடுகாடு. கச்சி - காஞ்சிப்புரத்தில். ஒரு மாவின் கீழரை - ஒரு மாமரத்தின் கீழே இருப்பவரை; ஏகாம்ரநாதரை; ஏக ஆம்ரம் - ஒருமாமரம்.

இச் செய்யுளில் - முக்கால், அரை, கால், அரைக்கால், இருமா, மாகாணி, ஒருமா, கீழரை என்னும் எண்ணுப் பெயர்கள் வந்துள்ளன காண்க. (1)

பண்புளார் - நல்ல குணம் உள்ளவர். பறவை - பட்சி, ஓ; கொடு என்பதாம். ஓர் இலக்கம்-ஓர் எண், (ஐந்து) அஞ்சு; பயப்படு என்பதாம், நாற்காலி - நான்குகாலை யுடையது; விலங்கு; விலகு என்பதாம். திண்புவி - உறுதியான பூமி. ஆவம்-பாம்பு; பணி. வாகனம் - எருது; விடை. நன்னிலம் - நல்ல நிலம்; செய். ஆவம் வாகனம் நிலம் என்பவை, பணி விடை செய் எனப் பொருள்படும். (2)

கம்பம் - கட்டுத்தறி. கடம் - கதப்பு, களிற்றன் - யானைமுகத்தை யுடையவனாகிய. தில்லை - சிதம்பரம். உம்பர் - தேவர். கண்ணிராறுனன் - கண் இர் ஆறு ஆனன், கண்ணிர் அறுனன். பம்பு சுடர் கண்ணன் - பரவிய நெருப்புக்கண்ணையுடைய சிவன். மால் - திருமால். பயம் - பால், அச்சம். அயன் - பிரமன். அவம் - வீண். அன்னமிறங்காமல்-அன்னத்தினின்று இறங்காமல், சோறு இறங்காமல். (3)

நின் ஆட்டுக்கு - உன்னுடைய ஆடலுக்கு. நாட்டம் - நாடுதல். புலி - வியாக்ரபாத முனிவர். (4)

இந் நான்கும் காளமேகப் புலவர் செய்தவை.

தலாம் - விளங்குகின்றதும். மாலை - மாலைசூடப் பெற்றதுமாகிய. பலா, பூவாமற் காய்ப்பது; மா, பூத்துக் காய்ப்பது; பாதிரி, பூத்தும் பயன்தாராதது. (5)

மேதக்க - மேன்மையான. பூழியர்கோன்-பாண்டியன்.

இவை இரண்டு செய்யுட்களும் அவ்வையார் பாடியவை.

கரைபொரு - கரையில் மோதுகின்ற. குடதிசை - மேல் திசை. என் நாட்டு - எல்லையாக நிலைநாட்டப் படுகின்ற. பெண்ணை - பெண்ணையாறு. (7)

கன்னி - கன்னியாகுமரி. ஆர - பொருந்த. (8)

வான் கீழ் - சிறப்புடைய கீழ்த்திசையில். குடக்கு- மேற்கு. (9)

ஆர்க்கும் - ஒலிக்கின்ற. உவரி - கடல். பிணாகி - பெண்ணையாறு. (10)

இவை நான்கு பாட்டுக்களும் கம்பர் இயற்றியவை என வழங்கும்.

IV. சிறுநூல்

திருவேங்கடமாலை :

இது நூறு செய்யுட்களை யுடையது. இந் நூலில், 51 முதல் 100 வரை யுள்ள செய்யுட்கள் சிலேடைப் பொருள் அமைந்தவை. இந் நூலை அருளிச் செய்தவர், திவ்யகவி பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். இவருக்கு, அழகிய மணவாள தாசர் என்னும் பெயரும் உண்டு.

கதிர் - ஒளியுள்ள. பரல் - பருக்கைக்கல். சாந்து - சந்தனமரம். (1)

நாலு திசை முகமும் - நான்கு திசைகளை நோக்கிய நான்கு முகமும்; நான்கு திசையிடத்தவர்களும். கமலம் மேல் உறலால்-(பிரமன்) கமலத்தின்மேல் இருத்தலால்; (மலை) தன் மேல் கமலத்தைப் பொருந்துதலால். சால் - பானையில். மண்

மயக்கம் - மண்மயமாயிருக்கிற தன்னிலை. தெற்றுவித்தான் - தெற்றுக்கொட்டையால். அரியன் - குரு. உள் மயக்கம் - மனத்தில் உள்ள மயக்கம். (2)

இலகு - விளங்குகின்ற. முண்டகம் - தாமரைப்பூ. தர - வெளியிட; திருமாலின் உந்திக்கமலமே உலகத்தை வெளிவிடும் என்பது இங்கு அறிக. இன்று - படைத்து. கந்தரம் - கழுத்து; தொண்டை. (3)

வரி உழுவை - கோடுகளையுடைய புலி. மேடத்தை - (ஆகாயத்தில் உள்ள) மேஷராசியை; மேஷராசி ஆட்டின் வடிவமுள்ளது. உறுக்கும் - கோபிக்கும். கம்ப வன மா - கம்பத்தில் கட்டுதற்குரிய வனமான யானை; குவலயாபீடம். செம் பவளம் - சிவந்த பவளம் போன்ற வாய். ஆ என்றன் - ஆ என்று திறந்தான். (4)

மண் மூலம் - மண்ணில் உள்ள கிழங்கு. மந்தி - பெண் குரங்கு. கடுவன் - ஆண் குரங்கு. விண் மூலம் - ஆகாயத்திலிருக்கும் மூலநட்சத்திரம். மூலம் - முதலாகிய. வேதத்து இருக்கு உடையார் - இருக்கு வேதத்தில் இருப்பவர். வெய்யோன் - சூரியன். சீதம் - குளிர்ச்சி. குழை - குண்டலம்.

வெய்யோன், ஒளிக்கு உவமை. (5)

கருவைப் பதிற்றுப்பத் தந்தாதி:

கரிவலம் வந்த நல்லூர் என்பது கருவை என மருஉ மொழி யாயிற்று. பத்து இற்று பத்து என்பது பதிற்றுப் பத்து என நின்றது; இற்று - சாரியை. அந்தம் ஆதி - அந்தாதி; ஒரு பாட்டின் இறுதி, அடுத்த பாட்டின் முதலில் வருவது. இதனை இயற்றியவர் அதிவீரராம பாண்டியர்.

அனந்தம் - எல்லையில்லாத. ஆரா - தெவிட்டாத. (1)

கன்னல் - கரும்பு. (2)

குரவன் - ஆசாரியன். (3)

விண்ட - சொன்ன. பண்டை வசம் - முன்னிருந்த நிலை. நறவம் - தேன். (4)

நம்பன் - விரும்பத்தக்கவன் ; சிவபெருமான். (5)

V. கதைச் செய்யுள்

நளவெண்பா :

நள வெண்பா, நளசரித்திரத்தைக் கூறும் வெண்பாவினு லாகிய நூல். வெண்பா, கருவியாகு பெயராய் நூலை யுணர்த்திற்று. இந்நூல் மூன்று காண்டங்களை யுடையது. இதனை இயற்றியவர், புகழேந்திப் புலவர் ; இவர் வெண்பாப் பாடுதலில் மிகச் சிறந்தவர்.

ஆதம் - மாமரம். வார் - நீண்ட. பொழில் - சோலை. பனி - குளிர்ச்சி. போதும் - போவோம். (1)

வீற்றிருந்து - கவலையின்றி யிருந்து. கொடியான் - புட் கரன்.

கழுவாநின்று - கழுவி. (3)

வேலை - கடல். ஞாலம் - பூமி. நடு - நடு நிலைமை. சீலம் - ஒழுக்கம். திறம்பா - மாறாத. (4)

பூமகள் - இலக்குமி. புல்லினான் - அடைந்தவன். கோ - அரசன். (5)

சந்தம் - அழகினையுடைய. கழல் - பாதம். வடம் - யானை யின் கழுத்திலிடுங் கயிறு. கலுழ்ந்து - அழுது. (6)

சுரம் - பாலைநிலம், போக்கு - போதல். ஏதம் - குற்றம். தாமம் - மாலை. (7)

குதலை - திருத்தமுறாத சொல். கோக் காதலன் - தலையன்பினை உடையவன். மழை பொழியா - மழைபோல நீரைச் சொரிந்து. (8)

கைதவம் - வஞ்சனை. கறை - களங்கம். மை - குற்றம். (9)

என் - என்ன. அடிசில் - உணவு. அளையும் - பிசையும். செய்ய - சிவந்த. (10)

கலையின் துறை - கலையின் வகைகள். கிங்கிணி - சிலம்பு. (11)

எழில் - அழகு. கோலம் - அழகிய. காதலர் - மக்கள். ஏதிலர் - பகைவர். (12)

இந்து - சந்திரன் போன்ற. எதிர் - நேராக. எந்தம்மை - எங்களை. (13)

கோமைந்தன் - அரசகுமாரன். கோதை - பெண். (14)

வாவி - குளம். கள்ளி - சதுரக்கள்ளி முதலியன. வேகத்த - விஷ வேகத்தையுடைய. சுரம் - பாலை நிலம். (15)

மூரி - வலிய, பெரிய. துயில - தூங்க. போதராய் - வருவாய். புலர்ந்து - வாடி. (16)

கொதுகு - கொசுகு. சில் பாடல் - சிறுமையான ஒலி. கேட்டவா - கேட்டவாறு என்பதன் தொகுத்தல் விகாரம். தோட்டவார் கோதை (தோடு அ ஆர் கோதை) - இதழ்களை யுடைய அழகு பொருந்திய மலர் மாலை. (17)

தாமம் - மாலை. அணை - மெத்தை. படைக்கண் - வேல் போன்ற கண். (18)

நீத்து - விட்டு. போவான் - போவதற்கு. குறித்து - கருதி. எய்தியது - அமைந்ததாகிய. (19)

முதலோடு - அடியோடு, முழுதும். (20)

அடுபால் - காய்ச்சியபால். தோயல் - உறைந்தது; தயிர். வேலான் - நளன். (21)

நோக்காதலி - சிறந்தபாகள், அரசகுமாரி. குறிக்கொண் மின் - கருத்தோடு காப்பிராக. ஏதிலான் - அயலான். (22)

நெக்கு-மனம் நெகிழ்ந்து. கட்டுரைத்துக்கான் - உண்மை சொல்வாயாக. காந்தாரம் - ஒருபண். விட்டு உரைக்கும் - உரத்துப் பாடுகின்ற. (23)

திரு - இலக்குமி போன்றவள், தமயந்தி. கிடத்துவான்- நிலைநிறுத்துவான். வட்டை - வழி. (24)

மூளும் - மிகுகின்ற. கனல் - தீ, வேட்கைத்தீ. வேகின்றான்-வேகின்றவனாகிய நளன். பனிக்குருகு - குளிர்ச்சியுள்ள குருகு; நீரில் வாழ்கின்ற குருகு. தண் படா - குளிர்ச்சி நீங்காத. தனிப் பேடை - தனித்திருக்கும் பெண்பறவையை. பார்த்து - எதிர்பார்த்து, நினைத்து. கண்படா - தூங்காத. (25)

நாதம் - ஓசை. ஆழிவாய்-கடலில். அலவ-நண்டே. (26)

பானல் - கருங்குவளை. கானல் - கடற்கரைச்சோலை. கழி - உப்பங்கழி. மின் இமைக்கும் - ஒளி விடுகின்ற. பூணாள் - ஆபரணத்தையுடைய தமயந்தி. வீங்கு இருள் வாய்- மிக்க இருளில். நினைக்கும் - நினைப்பாள். (27)

நாவாய் - கப்பல், நாவையுடைய வாயால் என மற்றொரு பொருளுந் தோன்றும். தீவாய் - தீயினிடத்தில். ஆர்கலி - கடல், அன்மொழித் தொகை. இரவு - இரவில். (28)

முன்னீர் - கடல், முதலிலுண்டான நீர். இனி, முந்நீர் என்று பாடங்கொண்டு மூன்று நீரை யுடையது எனப் பொருள் கூறலாம். மடவார் - பெண்கள். முறுவல் - சிரிப்பு, பற்கள். முறுவல் திரள் - பற்களின் கூட்டம். நல் நீர் - நல்ல நீர். பொன் நீர் - பொன்னின் தன்மையுடைய. முருகு - தேன். உடைக்கும் - வெளிவிடுகின்ற. மொய் - நெருங்கிய. தும்பி - வண்டு. அருகு - பக்கத்திற் சென்று. உடைக்கும்- மலர்த்துகின்ற. அரசு - நளன். (29)

அரிச்சந்திர புராணம் :

இதனை இயற்றியவர், இராமநாத புரத்தைச் சார்ந்த நல்லூரில் வாழ்ந்தவராகிய வீரகவிராசர். இந் நூல் கி. பி. 1524-ஆம் வருடத்தில் அரங்கேற்றப்பட்டது. இது பத்துக் காண்டங்களையுடையது.

உலவா - கெடாத. செறிந்து - மிகுந்து. இறையோன் - தலைவன், அரிச்சந்திரன். அவம் - வீண்; பயனின்மை. (1)

திறலோன் - சாமர்த்திய முள்ளவன். உரவோன் - அறிவுடையவன். விறல் - வலிமை. பங்கேருகம் - தாமரை; சேற்றில் வளர்வது. வதன - முகத்தையுடையவனே. பரிவு- அன்பு. (2)

நீராளவாவி - (நீர் ஆள் அ வாவி) நீரையுடைய அழகிய அந்தத் தடாகம்; இனி, நீர் ஆழ் வாவி என்பது நீராளவாவி என மருவிவந்ததாகக் கொண்டு பொருள்கூறுதலையும். நிறை மாதவன் - விசுவாமித்திரன். படி - பூமி. முடியில் - இறந்தால். காராளர் - வேளாளர். கடவு - செலுத்துகின்ற. மேல் - இனிமேல். அவமே - வீணாக. (3)

அறங்கள் நாலெட்டு - முப்பத்திரண்டு தருமங்கள். ஒன்று - ஒரு தருமமும். அற்பம் - சிறிதும். இறுக்கும் - கொடுக்கும். இறை - கப்பம். ஏற - அதிகப்பட. உகவேம்- விரும்பிக்கொள்ளமாட்டோம். (4)

மறைநீதி - வேதங்கள் சொல்லிய நீதிகள். அறைநீதி - தருமசாஸ்திரங்கள் சொல்லும் நீதிகளை. அணிவாயில்-அழகிய வாயிலில். வினை - தீவினை. இறை - தலைமைக் குணம் உடையவன்; தேவதாசன். தவத்தின்விளைவே - தவத்தின்பயனாக வந்தவனே. (5)

கனமும் - மேகமும். தருக்கள் குலமும் - பஞ்சதருக்களின் கூட்டமும். கரமும் - கையும். உரமும் - மார்பும். சிகை - குடுமி. இனமும் - இன்னமும். (6)

முன்னால் விளைந்த கனல்-முன்னர் உண்டான நெருப்பு; நெருப்பு ஆறு; காசிக்குச் செல்லும் வழியில் விசுவாமித்திரனால் உண்டாயது. மதலாய் - புதல்வனே. கான் - காடு. அடாது - பொருந்தாது. (7)

மறுகி - அழுது. உரியார் - உரிமையுள்ளவர்; உறவினர். விலைகொண்டோன் மனம் உருகான் என மாற்றுக. சால வன்கண்ணன் - மிகக் கொடியவன். மா பாவி - கொடும் பாவி. செறுவர் - கோபிப்பர். கருக்கி - சுட்டெரித்து. மதிதயனார் தனையை - மதிதயன் பெண்ணாகிய சந்திரமதி. (8)

கொண்டுபோகேல் - கொண்டுபோகாதே. மாடு - பக்கம். இடுபாடு - துன்பம். இடுகாடு - பிணம் புதைக்கும் இடம். (9)

அரவம் - சத்தம், கூச்சல். அமலை - ஓசை. நிணம் - கொழுப்பு. முடை - தியநாற்றம். நிவப்பு-உயர்ச்சி. கணங்கள் - பேய்க் கூட்டங்கள். துழனி - ஓசை. கனற்பொறி-தீப்பொறி. மலிவு - மிகுதி. சுணங்கு - நாய். பிணங்குதல் - போரிடுதல். குரைப்பு - ஓசை. தோகை - மயில் போன்ற சந்திரமதி. (10)

வெகுண்டு - கோபித்து. இறைவன் - அரிச்சந்திரன். கரவு - கள்ளத்தனம். அடைவு - முறைமை. கான்முளை - புதல்வன். (11)

தமர் - தம்மவர்; உறவினர். தெருள் - அறிவு. தேயா அருள் - அழியா அருள். தஞ்சம் - அடைக்கலம். (12)

அறச் சமர்த்தி - மிகவும் கெட்டிக்காரி. மங்கலநாண் - தாலி. ஏலாது - பொருந்தாது. இயம்ப - சொல்ல. பல்லம் - அம்பு. உயிர்நிலைவாயில்-உயிர்நிலையில். பைந்தொடியாள்-பசும் பொன்னாற் செய்த வளையல் அணிந்த சந்திரமதி. (13)

அலைவு - (மனம்) சலித்தல். தொலைவு இல் - நீங்குதல் இல்லாத; அருகிலுள்ள. (14)

அற்புக்கு ஆழி அன்னான் - அன்புக்குக் கடல் போன்றவன். பொறை - பொறுமை. நிறை - நிறைகுணம் (15)

மனங்கொளா - மனங்கொண்டு. தனையன் - புதல்வன். மாண்டதுதன்னை - மாண்டதை. உட்கொண்டு - உள்ளத்திற்கொண்டு. உள நினைவு - மனத்தின் எண்ணம். (16)

உரகம் - பாம்பு; மார்பினால் செல்வது. மின்னை - மின்னற்கொடிபோன்ற சந்திரமதியை. வெவ்வினை - தீவினையையுடைய. ஏந்தல் - அரசகுமாரன். (17)

தகர்ந்து-நிலைகுலைந்து. விலைப்பட்டாய் முதலியசொற்கள் எதுகை நோக்கி விலைபட்டாய் முதலியவையாக நின்றன. (18)

காதல் - அன்பு. மேயநாள் - பொருந்தியபொழுது. (19)

உனக்கும் சிறுவற்கும் தீமை செய்தது வாய்மைதான் என மாற்றுக. தூய்மையே - தூய்மையானதே; பரிசுத்தமானதே. மயங்கல் - மயங்காதை. (20)

தொழும்பன் - அடிமை. பணி - தொழில்; ஏவல். அவன் இலக - அவனுக்குக் கொடுக்க வேண்டியதை. இழந்தால் - (வாங்காமல்) விட்டுவிட்டால். தவறு எய்திடும் குற்றம் நேரிடும். போகை - போதல். பொருள் தருதற்குப் போகை நன்று என மாற்றுக. (21)

திருவிளையாடல்—மாமனாக வந்தது :

கன்னி - அழிவில்லாத; தடாதகைப் பிராட்டி என்னும் கன்னிகையால் ஆளப் பெற்ற. நான்மாடக்கூடல் என்பது மதுரைக்கு ஒரு பெயர். கடி நகர்-காவலுள்ள நகர். வணிக மாக்கள் தன்னில் - வணிகரில். நிதிக்கோன் - குபேரன். போால் மன்னினான் - பெயரினால் விளங்கினான். மடவரல் - பெண்; மனைவி. பொன்னின் நாள் முளரிச் சேக்கை - அழகிய அன்றலர்ந்த செந்தாமரையாகிய இருப்பிடத்தை யுடைய. (1)

பேறு - பெறுதல் ; செல்வம். மருகன் - உடன்பிறந்தவள் மகன். தகவுசால் - மேன்மைமிக்க. நல்க - கொடுக்க. புனைவன - அணியவேண்டிய ஆபரணங்களை. போற்றி - பேணி. (2)

தலைவா காதல் - நீங்காத அன்பு. தனையன் - மகன். பூசல்வினை - சண்டை. (3)

இருமை - இம்மை மறுமைப் பயன்கள். நாண் - வெட்கம். மேலைக்காயினும் - வரும்பிறப்பிலாயினும் (4)

தாழ்ப்ப - தாமதிக்க. பெற்ற - பெற்ற பொருள்கள். தாயமாக்கள் - பங்காளிகள். (5)

வெறுக்கை - பொன். ஏனை - மற்றை. சிறை - சிறகு. புள் - பட்சி. துணை - சார்பு. தம்மனோர் - தம்மைப் போன்றவர். களைகண் - ஆதரவு. சரணம் - கதி. (6)

வான் அகடு - வான்வயிறு. போழ்ந்த - பிளந்த. எந்தை - தந்தை. அய் - தாய். இனைய - இப்படிப்பட்டவற்றை ; கீழ் வருவனவற்றை. (7)

தகுதி - முறைமை. எம் முன் - எமது தமையன். இப் பால் - பிறகு. (8)

தேறும் - தெளியும். அருத்தி சால் - அன்பு நிறைந்த. பார் படிய - பூமியிற் பொருந்த. (9)

வல்லவர் - சிவபெருமான். சீறுகொள் - சினங்கொண்ட. மெய்யில் - உடலில். ஊறுகொள் - இடையூறு செய்கின்ற. வேதச்செல்வர் - அந்தணர். (10)

பலர்ந்தபின் - விடிந்தபிறகு. புரவலன் - அரசன். ஆணையாற்றால் - ஆணையின் வழியால். மன்றம் - சபை. மறித்தனை - தடுத்து; முற்றெச்சம். இருத்தி - இருப்பாய். அலம்தரும் - அமைதியுற்ற. சலம் - பொய், வஞ்சகம். போதி - போவாய்.

வேரி - வாசனை. கெட்டேன், வியப்பிடைச் சொல். என்னு - என்று. கார் கண்ணாள், கயல் உண் கண்ணாள் என

இமைக்க; கார் - கரிய நிறமான. கயல் - கயல் போன்ற. உண் - மையுண்ட. தெரிவை - (செட்டிப்) பெண். (12)

பங்குல் - இருள். வெள்ளி மன்றவன் - வெள்ளியம்பலத்தையுடையவன்; வெள்ளியம்பலம், மதுரையிலுள்ளது. வந்தனை - வழிபாடு. பொன் குன்றவன் - மேருமலையை வில்லாக வுடையவன். உரைத்த ஆற்றல் - சொன்னபடியே. கொடுமைசால் வழக்குப்பூட்டி வென்றவர் - பொய்வழக்கைத் தொடுத்து வென்றவர்; தாயத்தார். (13)

அட்டில்வாய் - அடுப்பில். அறத்த ஆறு - தருமமார்க்கத்தால். பட்டிமை வழக்கு - பொய் வழக்கு. போகொட்டேன்- போக ஒட்டேன்; அகரம், தொகுத்தல். அறத்தவிசு- நியாயசபை. ஒட்டிய - சேர்ந்த. (14)

இழுக்குரை - இழிவான சொற்கள். திருந்த - சீரான. (15)

ஏவல் ஆடவர் - வேலைசெய்வோர். அவைக்களம்-சபை. அறங்கொடிபாகர் - தருமவல்லியை இடப் பாகத்தி லுடைய சுந்தரேசர். வாணர் - வாழ்நர். (16)

குண்டலம் - காதணி. பத்தி - வரிசை. கவிழ்ப்ப - கீழ் நோக்கி வீச. அங்கதம் - வாகுவலயம்; தோளணி. வரை- மலை. ஆகம் - மார்பு. குரு - நல்ல நிறம். கண்டிகை - கழுத்தணி. கோட்ட - வளைக்க. (17)

முளரி - தாமரை, முள்ளையுடைய அரையையுடையது. மாறிட்டார் - பகைவர். போது - தாமரை மலர். நயந்தும் - விரும்பியும். உட்கிடை - உள்ளக் கருத்து. (18)

துரைகழல் - ஒலிக்கின்ற வீரக்கழல். கோது இல் - குற்றமில்லாத. உறுதியான-என்றும் அழியாத. ஒளித்ததே கொல்- ஒளித்ததோ; கொல், அசை. அறத்தவிசு - நீதிமன்றம். (19)

இனைவுறு - வருத்தம் மிக்க. விம்மிதம் - அச்சரியம். எய்தி - அடைந்து. வழக்கலா வழக்கு - பொய் வழக்கு. (20)

மாதுலர் - தாயுடன் பிறந்தவர். காது உலராத கோதை-பூந்தாது வாடாத கூந்தலையுடையவள்; இது, மாதர்க்கு இயல் பாகக் கூறப்படும் அடை. கழிஇ - கழுவி, கண்டமீது உலராத - கண்டத்தினின்றும் நீங்காத. ஆர்ப்பவர்போல் - ஒலிப்பவர்போல. அதுலரானீர் - வறியவரானீர். (21)

குடங்கையின் - உள்ளங்கையைக் காட்டியும் அகன்ற. கண்ணுறாள் - கண்ணையுடைய தங்கை. கடம் கண் நீர் ஆட்ட - விசாலமான கண்களினின்றும் வெளிப்பட்ட நீரால் ஆட்ட; அழுது என்றபடி. கட - நீண்ட. புல்லி - தழுவி. மடங்கல் ஏறு - ஆண்சிங்கம். கண்ணீர் நெடுங்கடல் வெள்ளம் எனவே அவரினும் இவன் மிக்கழுதான் என்பதாம். நேர்ந்து - நோக்கி. நைவான் - வருந்துவான். (22)

ஐம்படை - ஐம்படைத்தாலி; திருமாலின் ஐம்படை களைப்போலச் செய்த அணி. சிலம்பு - தண்டை. பொம்பு - மார்பு. மதாணி - பதக்கம். சுட்டி - நெற்றிச்சுட்டி. குழை - காதணி. என் பெறும் - என்ன பயன்படும். (23)

மாற்றி - அடைத்து. கைவந்து - தடவிக் கொடுத்து. இனையன்மின் - வருந்தாதிர்கள். வஞ்சவினைஞர் - வஞ்சகமான தொழில்புரியும் தாயாதிகள். (24)

நட்பிடை - நண்பர்களிடத்து. ஊன்மாறுட்டத்து - உணவில் மாறுபாடு செய்து. உட்பட - முற்றும். மிகப்பக் கூறி - அதிகமாகச் சொல்லி. இட்டப்பட்டதோ - தேடப்பட்ட பொருளோ. படுமோ - அழியுமோ (25)

புங்கவர் - மேலானவர். ஆர்த்தார் - ஆரவாரித்தார். (26)

ஆவலித்து - புலம்பி. கள்வர் - தம்மை மறைத்து வந்த சிவபெருமான். இண்டு, அரசனது செங்கோலைத் தராசுக் கோலாகவும், தருமத்தைத் தட்டாகவும், நீதிநாலைத் தராசுக்

கயிறாகவும், அவையோர் நாவைத் தூண்டிலாகவும் உருவகஞ் செய்தமை காண்க. மேவலர் - பகைவர். தூக்கி - ஆராய்ந்து. விதந்து சொன்னார் . மிகவும் எடுத்துச் சொன்னார். (27)

நரை முது புலி அன்னான் - நரைத்து முதிர்ந்த புலியை ஒத்தவராகிய சிவபெருமான். சான்றோர் - அவையத்தார். இருவர் - வாதி பிரதிவாதிகள். அநுவதித்து - சொன்னதையே திரும்பச் சொல்லி. தெரிவழி - ஆராயுமிடத்து. ஞாதி வழக்கு இழுக்கு எனமாற்றுக. இழுக்கு - குற்றமுடையது. வலியரின் - வழக்கின் வலிமையுடையவர்போல. (28)

தவல் அரும் - கெடுதல் அற்ற. நக்கு - சிரித்து. கவளம் - வாய் நிரம்பிய உணவு. மான் - விலங்கு; யானை. (29)

கிளைஞர் - உறவினர். அந்தமில் - எல்லையிறந்த. (30)

கனி வழி - தேன்வழிகின்ற. வேம்பன் - வேப்பமாலையையுடைய பாண்டியன். தேரின் - ஆராய்ந்தறிந்தால். (31)

நல்லையில் - விரைவில். எழு அனைய - கணையமரத்தை ஒத்த. வன்கால் - சுழல்காற்று. செல் எழு முகில்போல் - விரைந்து செல்ல எழுகின்ற மேகங்களைப்போல். சிதைந்தனர் - கலைந்து; முற்றெச்சம். (32)

அறன்நவில் - நீதியை எடுத்துச் சொல்லுகின்ற. நாய்கர்- வணிகராய் வந்த சிவபெருமான். (33)

இம்மென - விரைவாக. உவகை துங்க - மகிழ்ச்சி பெருக. கைம்மறி வணிகர் - கையிலே மானை ஏந்திய சிவ பெருமானாகிய வணிகர். (34)

குசேலோபாக்கியானம் :

குசேலனது சரித்திரத்தை விரித்துக் கூறுவது. உப ஆக்கியானம்-கிளைக்கதை. இது, பாகவதம் பத்தாங் கந்தத்திலுள்ள கதை. இந்நூல் மூன்று அத்தியாயம் உடையது. அவற்றுள்,

இரண்டாம் அத்தியாயத்திலுள்ள சில செய்யுட்கள் இண்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. இதனை இயற்றியவர், வல்லூர் தேவராசப்பிள்ளை. இவர், திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களிடம் கற்றவர்.

என் அனைக்கு - யாவரும் நினைக்கிற தாயாகிய இலக்குமிக்கு. திகிரி - சக்கரம். கன்னலை - (கள் நலை) தேறல் நலை தலையுடைய. (1)

நீத்தம் - வெள்ளம். மாதவன் - குசேலன். (2)

கழி - மிகுதி. பழி இல் - பழித்தல் இல்லாத. (3)

பெறல் அரும்பேறு - பெறுதற்கரிய நன்மை. (4)

ஆயின் - ஆராய்ந்தால். அறம் மறம் - தருமமும் பாவமும். பார்த்து - பிரித்துணர்ந்து. வயின் - சமயம் நேர்ந்தால். வியினும் - இறந்தாலும். மேதையோர் - அறிவுள்ளவர். (5)

உரைப்ப - சொல்லும்படி. நவிற்றிய - கூறிய. என்றும் - எந்நாளும். (6)

புந்தி - அறிவு. இருந்தவர்-பெரிய தவத்தையுடையவர். (7)

எண்மையில் - எளிமையில். இகழ்வு இல்லார் - இகழ்ச்சியில்லாத பெரியோர். (8)

படும் - உண்டாகின்ற. வீடுதல் - அழிதல். (9)

திரு - செல்வம். சித்திக்கும்படி - கைகூடும்படி. (10)

மனைக்கிழத்தி - மனைவி. நிரம்பு - நிரம்பிய. நீர்மையள் - குணமுள்ளவள். மன் - தலைவன், கணவன். உயிரா - உயிராக. வருவாய் - வரும்படி. உஞற்றுபவள் - செய்பவள். நீர்மையளே முதலியவற்றுள் வந்துள்ள ஏகாரம் வினா.

இங்கு, 'தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற, சொற்காத்துச் சோர்விலாள் பெண்' என்னுந் திருக்குறள் அறிக. (11)

இங்கல்-கெடுதல். உபநயனம்-பூணூற்கலியாணம். (12)

நள்ளார்கள் - (மனத்தால்) சேர்ந்திருத்தல் இல்லாதவர். அண்மை - அருகு. விள்ளார்கள் - (மனத்தால்) பிரியாதவர். சேய்மை-தூரம். உள் - நினைக்கத்தக்க. ஆதவன்-சூரியன். (13)

வன விருகம் - காட்டு விலங்கு, நையை - கெட. (14)

காமர் - அழகிய. ஆர்வம் - அன்பு. இருகு - மாறுபாடு. ஆரா உளத்து - சேராத மனத்தில். சிறப்ப - மிகுதியாக. (15)

கயவன் கல்வியருமை அறிந்தது :

இ.து, கா - நமச்சிவாய முதலியார் இயற்றியது.

திருநின்ற ஊர் - செங்கற்பட்டு ஜில்லாவில் ஓர் ஊர். கார் மிகும் - கருநிறம் மிக்க. மேதி - எருமைக்கடா. ஏர் மிகும் - அழகுமிக்க. இயம்பும் - சொல்லும். (1)

மை என - மையைப்போல. மெய்யன் - உடலையுடையவன். வாங்கி - அழ்ந்து. கறை - அழுக்கு. காம்பு - மூங்கில். (2)

பண்ணை - வயல். மேக்குற - நன்றாக. (3)

வெச்சு - வெப்பம். வெறியகூழ் - வெறுங்கூழ் (4)

தேசிகன் - உபாத்தியாயன். பழுத்த - வயது சென்ற. பான்மையோ - தகுதியோ. பகரும் - சொல்லும் (5)

கண்காணித்து - மேற்பார்வையிட்டு. திகழுற - விளங்க. சூது அல - வஞ்சகம் அல்ல. (6)

பொங்கி-மிக்க, கொதித்த. போயினன்-இறந்தான். (7)

ஆணி - எழுத்தாணி. முறி - ஓலை. களிக்க - மகிழ. (8)

ஐய-ஐயனே. உய்ய - பிழைக்க. செப்பும்-சொல்லும். (9)

தொகை - பொருள். வல்லவன் - கெட்டிக்காரன். (10)

இறும்பூது - அச்சரியம். குன்று என - குன்றைப்போல.

வெள்ளி - ரூபாய். மணி - தானியமணி. தலையெழுத்து - முதலில் எழுதிய எழுத்து. (12)

நரை முதிர் - நரைத்து முதிர்ந்த. பந்தி - பக்தி. (13)

அருங் கடா - அருமையான கடாக்கள். அதிட்டம் - அதிர்ஷ்டம். (14)

துளைத்திட - வருத்திட. வல்லவாய - வன்மையுடையன வாகிய. (15)

இயம்புக - சொல்லுக. ஒன்றிய - பொருந்திய. (16)

மன்னிய - நிலைபெற்ற. துன்னும் - நெருங்கிய. (17)

விலங்கு - மிருகம். புல்லர் - அற்பர். மெய்த் திறம் - உண்மைத் தன்மை. கைத்தலப் பொருள் - கையிலுள்ள பொருள். மயக்கம் - மயங்கச் செய்யும். (18)

கண் கெட்ட - கண் அவிந்த. மாழ்கி - மயங்கி. (19)

ஆன்றவர் - மேலோர். ஆய்ந்து - ஆராய்ந்து. அந்தம் இல் - முடிவில்லாத, அழகில்லாத. அதிசய உத்தி - அதிகப் படுத்திச் சொல்லுதல். (20)

மாண்பு உறு - சிறப்புமிக்க. பூண் பணி - அணியத்தக்க ஆபரணம். பொன்றிட - சாக. விளிந்தான் - இறந்தான். (21)

இதயம் - இருதயம்; மனம். நைந்து - கசிந்து. (22)

அவன்பால் ஆக்கி - அவனிடத்தில் விட்டு. மாசு இல் - குற்றம் இல்லாத. ஆசிகள் - வாழ்த்துக்கள். அறிவு நூல் - அறிவை வளர்க்கத்தக்க நூல். புகட்டினன் - கற்பித்தான். (23)

V. விடுச் செய்யுள்

சோலையைக் குறிக்கும் ஓரெழுத்துப் பெயர், கா என்பது. தொக்கு - சேர்ந்து. நிலத்தின் பேர், காணி. சென்னி-சோழன். சென்னிகுல நதி - காவிரி. (1)

ஆற்றின்பேர் - பாலாறு; ஈற்றின் எழுத்து ஒழியின் பாலா என நிற்கும். பாலா - (பால்ஆ-பாற்பசு. பாலா என்பதில் ஈற்றுயிர் போயின் பால் என நிற்கும். உண்பயன் - குடிக்கற்கான பால். அதன் ஈறு ஒழிந்தால், பா; பா - செய்யுள். (2)

தீமேல்படின் பூம்போர்வை என்செய்யும் எனக் கூட்டுக. நயமின் - நீதியிற் சிறந்தவன். எவன் - யாது. சிலம்பன் - மலையையுடையவன் - பூமேலாள்-திரு. பூம்போர்வை தீமேற்படின் வேவர். கொடுத்தாற் கொள்வது, கடன். ஆகவே திருவேங்கடன் என்றாயிற்று. (3)

நீத்து ஒழிந்த யாறு - நிலே. ஐந்து அடக்கி - தலை ஒன்று கால்கள் நான்கு ஆகிய ஐந்தையும் அடக்குவது; யாமை. வாயில்-கடை. பெண்யானை - பிடி. வாள் எறு - வாள் எறிந்ததனால் உண்டானது; புண். ஓசை - இயம். விளை நிலம்-செய். ஆகவே, நிலையாமை கடைப்பிடி, புண்ணியம் செய் என்றாகும். இனி, கூத்தன் என்பதைச் சிவன் எனக்கொண்டு, சிவபுண்ணியஞ் செய் என்பதுமாம். இவ் அல்லால் - இவை யல்லாமல். (4)

எழுது வரிக் கோலத்தார் - எழுதுகின்ற வரிகளினது அழகினையுடையவர். வரி - எழுத்துக்களின் வரிசை. கொழுதி மை ஆர் - திரட்சியாக மைபொருந்திய. கன் என்பது எட்டின் தொளையையும் குறிக்கும். கோடு-பனையோலையின் ஏடு, பூ. நாண் - வெட்கம், கயிறு. நலங்கிள்ளி - சோழ மன்னன். இப்பாட்டில் ஓலைச் சுவடிக்கும் மகளிர்க்கும் சிலேடை யமைந்தது. (5)

குறிப்புரை

வசனம்

அகற்றும் - வெளியேறச் செய்யும்.
அச்சதெலுங்கு-சுத்தெலுங்கு
அணே - ஆசனம்.
அந்தரம் - ஆகாயம்.
அந்திவண்ணன் - அந்தி நிறத்தையுடைய சிவன்.
அமலே - ஓசை.
அமளி - மெத்தை, படுக்கை.
அரசை - அரசூர்.
அரவம் - ஓசை.
அரவிந்தம் - தாமரை.
அரிஞ்சயன் - பகைவர்களை வென்றவன்.
அரிவை - பெண்.
அருகு ஆர் - சமீபத்திலுள்ள.
அருங் கலன்-அரிய ஆபரணம்.
அலத்தகம் - செம்பஞ்சுக் குழம்பு.
அலர் - பழிச்சொல்.
அவ மறைந்தொழுகும் - தீய நெறியில் மறைந்து நடக்கின்ற.
அவைக்கண் - சபையில்.
அழல் - தீ, அனல்.
அழுகுமெய்யாளர் - அழுகிய புண்ணமைந்த உடலேயுடைய தொழுநோயாளர்
அளி - வண்டுகள்.
அறத்துறையாளர் - துறவறத்தில் இருப்பவர்.
அறம் உரைத்தான் - சிவபெருமான்.
அறவே - முழுவதும்.
அறுவை - துணி, ஆடை.
அறை கழல்-ஒலிக்கின்ற வீரக் கழல்.
அன்னர் - அப்படிப்பட்டவர்.
ஆசீவகர் - ஜைன மதஸ்தர்.
ஆயத்துறை - சுங்கச் சாவடி.
ஆயம் - கூட்டம்.
ஆய்த்த - அழகிய; 'காய்த்த திணைப்புனத்தில் கால் வைத்துச் - சாய்த்து' எனவும் பாடம்.
ஆரம் - சந்தனம்.
ஆர்வம் - ஆசை.

ஆலை - கருப்பாலை.
இசைத்தமிழ் - சங்கீதத்தோடு கூடிய தமிழ்.
இடக்கை - ஒரு வாத்தியம்; இது தோற்கருவி.
இடுக்கண் - துன்பம்.
இயக்கம் - சலனம், அசைவு.
இயம் - வாத்தியம்.
இயலுவது - பொருந்துவது.
இயல்பு - குணம்.
இயைபு - சம்பந்தம்.
இருதலையும் - இரண்டிடமும்; முதலிலுள்ள செல்வமும் கடையிலுள்ள இன்பமும்.
இலகி - விளங்கி.
இலச்சினை - முத்திரை.
இறுங்கு - சோளம்.
இறுதி - முடிவு.
இறை - திர்வை.
இறையும் - சிறிதும்.
இன்ன - இப்படிப்பட்டவை; இப்படிப்பட்ட ஓசைகள்.
இன்னல் - துன்பம்.
இன்னிசை - இனிய பாடல்.
ஈடு - சமம்; ஒப்பு.
ஈட்டி - சம்பாதித்து.
ஈம எரி - சுடுகாட்டுத் தீ.
ஈர்வாள் - ரம்பம்.
ஈழம் - சிங்களம்.
உசாவினர் - வினவினர்.
உடுத்த - சூழ்ந்த.
உட்கோள் - மனக்கொள்கை.
உமணர் - உப்பு வாணிகர்.
உயிர்க்கடன் - உயிரைப் பலியாக நேர்ந்தகடன்.
உய்த்துணர்ந்து - நுட்பமாக ஆராய்ந்தறிந்து.
உரி - இருமுழக் கொண்டது.
உழுவல் அன்பு - நிறைந்த அன்பு.
எடுப்பு - உயர்வு.
எட்டி - ஒரு பட்டப் பெயர்; செட்டி என்பதன் சிதைவு.
எண்பேர் ஆயம் - பொக்கிஷங் காப்பவர், வாயில் காப்பாளர், கரணத்தியலவர் (கணக்கர்), கருமவிதிகள் (அரசனாணையை நடத்துபவர்), நகரமாந்தர், படைத்தலைவர், யானைவீரர், குதிரைவீரர் ஆகியவர்.
எய்துதல் - அடைதல்.
எல்லை - அளவு.
எழினி - திரை, திரைச்சீலை.
என்ப - என்று சொல்லுவர்.
எஃகு - நயமான இரும்பு.
ஏங்க - ஒலிசெய்ய.
ஏடு அவிழ் தார் - இதழ்கள் விரிந்த பூவினாலாகிய மாலை.
ஏதும் - சிறிதும்.
ஏவல்வினை - ஏவற்றொழில்.
ஏழ் ஏழுவீர் - நாற்பத்தொன் பதின்மரே.
ஏறு - இடபம்.

ஏற்பன - ஏற்குந் சொற்கள்.
ஏனாதி - படைத்தலைவருக்குக் கொடுக்கும் பட்டப்பெயர்.
ஐம்பெருங் குழு - அமைச்சர், புரோகிதர், சேனாதிபர், தூதுவர், ஒற்றர் என்னும் ஐவர் கூடிய கூட்டத்தார்.
ஐவகைத் தொழிலாளர்- கொல்லர், தச்சர், தட்டார், கன்னார், சிற்பிகள் ; இவர் கம்மாளர் எனப்படுவர்.
ஒப்பனை - அலங்காரம்.
ஒருமுக எழினி - மேல்நின்று நேராகக் கீழேவிடும் திரை.
ஒல்லும் - பொருந்தும், கூடும்.
ஒன்றி - கலந்து.
ஓதை - ஓசை.
ஓவியக்காரர்-சித்திரம் எழுதுவோர்.
கடல்கோள் - கடலாற்கொள்ளப்படுதல்.
கடாரம் - பர்மா.
கடிஞை - பிக்ஷாபாத்திரம்.
கடும் பரி - வேகமாகச் செல்லுங் குதிரை.
கணிகை - நாடகப் பெண்.
கணிதர் - சோதிடர்.
கண்ணிய-கருத்துக்கொண்ட
கரணத்தியலவர் - கணக்கர்.
கரந்து - களவு செய்து.
கருங்கலம் - பெரிய கப்பல்.
கரும்பொன் - இரும்பு.
கலங்கரைவிளக்கம்-கப்பலைக் கரைக்கு அழைக்கும் விளக்கு; தீபஸ்தம்பம்.
கலம் - கப்பல்.
கல்வி மன்றம் - கலாசாலை.
கழஞ்சு - இருபது மஞ்சாடி கொண்ட எடை.
களிமகன்-செருக்குள்ளவன்.
கள்விலைஞர் - கள் விற்போர்.
கறி - மிளகு.
கனை - மிக்க.
கானல் -வெயிலின் கொடுமை மிக்க இடம்.
கானவேல் - காட்டிலுள்ள வேலமரம்.
கிடை - கிடேச்சு, நெட்டி.
கிழி - துணி.
குடபுலம் - மேல்திசைநாடு.
குண குட கடல்-கிழக்கு மேற்கிலுள்ள கடல்கள்.
குணபுலம் - கீழ்த்திசை நாடு.
குதம்பை - காதணி.
குமரவேட் குன்று - முருகக் கடவுளின் மலை; திருச்செங்குன்றூர்.
குமரி - கன்னியாகுமரி.
குரல் முதல் ஏழும் - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும் ஏழு இசையும்.
குரவை - மகளிர் கைகோத்து ஆடுதல்.

குழல் - புல்லாங்குழல்.
குழற் கால் - தொளையுடைய காம்பு.
குறாணி - ஒரு மரக்கால்.
கூலமறுகு - தானியக்கடைத் தெரு.
கூலம் - தானியம்.
கூற்று - சொல்.
கேளிர் - உறவினர்.
கைதவன் - பாண்டியன்.
கொண்டல் - மேகம்.
கோதைத் தாமம் - தலையில் அணியும் பூமாலை.
கோள் - கிரகம்.
கோறல் - கொல்லுதல்.
சாம்பூநதம் - ஜம்பு நதியில் உண்டாகும் பொன்.
சாரணர்-ஊர்தோறும்சென்று உபதேசம் செய்பவர்.
சாலாது - போதாது.
சாறு - திருவிழா.
சான்று - சாட்சி.
சிக்கனம் - இறுக்கம்.
சிதைவு - அழிவு.
சித்தாந்தம் - முடிவான கொள்கை.
சித்திரை நாளில் - சித்திரை நட்சத்திரத்தில்.
சிரக்கம்பம் - தலையசைத்தல்.
சிலாதலம் - கல்.
சிவபாதசேகரன்-சிவனுடைய பாதங்களைத்தலைக்கு அலங்காரமாகச் சூடினவன்.
சீர்த்தி - பெரும்புகழ்.
சிறடி - சிறிய பாதம்.
சுண்ணம் - வாசனைப்பொடி.
சூதர் - கொடை முதலியவற்றைப் புகழ்வோர்.
சூறையாடல்-கொள்ளையிடுதல்
செப்பு - செம்பு.
செம்பியன் - சோழன்.
செம்பொன் - செம்பு.
செவ்வேள்-முருகக் கடவுள்.
செறு - போர்.
செறுச்செய்தல்-போர்செய்தல்
சேமித்து - சேர்த்து.
சேய்நாடு - தூர தேசம்.
சொற்போர் - சொற்சண்டை, வாதம்.
தஞ்சைவாணன் - பாண்டிநாட்டைச் சார்ந்த தஞ்சாக்கூரில் வாழ்ந்தவன்.
தண்டலை - சோலை.
தமரம் - ஓசை.
தரணி - பூமி.
தரளம் - முத்து.
தாயகம் - பிறப்பிடம்.
தார் - மாலை.
தாழைவேலி - தாழை வேலி சூழ்ந்த.
திங்கள் - மாதம்.
திருமுறை - ஏடு.

திருவாலவாய் - மதுரையிலுள்ள சிவபெருமான் கோயில்.
திரை - அலை.
திவாகரர் - பன்னிரு சூரியர்.
துகிர் - பவளம்.
துணங்கு - ஒருவகைக்கூத்து; இருகையையும் முடக்கிப் பழுப்புடையொத்தியாடல்
துணை - அளவு.
துய்த்தல் - அநுபவித்தல்.
துலை - தராசு.
துழனி - ஓசை.
துறக்கம் - சுவர்க்கலோகம்.
துன்னகாரர் - தையற்காரர்.
துன்னரும் - (துன்ன அரும்) அடைதற்கரிய.
தூங்கு எயில் - அசைகின்ற மதில்கள்.
தூசு - ஆடை.
தெய்வ உத்தி - சீதேவி என்னுந் தலைக்கோலம்.
தெவ்வேந்தர் - பகையரசர்.
தெள்ளிதின் - விளக்கமாக.
தேம்பிழி - இனிய தேன் போன்ற.
தொடி - ஒருபலம், தோள்வளை.
தொடையன் - மாலையுடையவன்.
தோகை - மயில், மயிற்பீலி.
தோடு - இதழ்.
தோரை - குளநெல்.
தோலின் துன்னர் - சக்கிலியர்.
நசை - விருப்பம்.
நடுவணது - (அறம் பொருள் இன்பம் மூன்றனுள்) இடையில் உள்ள பொருள்.
நடுவண் - இடையில்.
நம்பி மூத்தபிரான் - பலராமன்.
நம்பியர் - ஆண்மக்களுட் சிறந்தோர்.
நவிலாது - சொல்லாமல்.
நவின்று - சொல்லி.
நறுவிரை - மிக்கமணம்.
நன்னர் - நன்றாக.
நாண் - வெட்கம்.
நாளங்காடி - பகற்கடை.
நிமித்திகப்புலவர் - சகுனசாஸ்திரம் அறிந்தவர்.
நிரை - வரிசை.
நிலாமுற்றம் - கூரை மூடாத மேல்மாடி.
நிழற்கால் - ஒளி வீசுகின்ற.
நீர் உகுத்து - நீரைச் சிந்தி.
நூழில் - கொன்று குவித்தல்.
நோன்மை - அழகு.
நோலை - எட்கசி, எள்ளுருண்டையுமாம்.
பகருவர் - விற்பர்.
பகர்ந்து - விற்று.
பசைந்தாரின் - அன்புசெய்தவரினின்று.
பச்சைமலையாளம் - சுத்தமான மலையாளம்.

படமாடம் - துணியினால் அமைக்கப் பெற்ற வீடு, கூடாரம்.
பண்டாரம் - கஜானா.
பண்ணியாரம்-அப்பவருக்கம்.
பயப்பவன் - தருபவன்.
பரதவர் - செம்படவர்.
பரல் - பருக்கைக் கல்.
பராந்தகன் - பிறருக்கு எமன்.
பரியம் - பரிசம்.
பன்னரும் - (பன்ன அரும்) சொல்லுதற்கு அரிய.
பாகை - இரண்டு ரேகைகளின் இடையிலிருக்கும் இடம்.
பாசவர் - குட்டிறைச்சி விற்போர், வெற்றிலை கட்டுவோர்.
பாணர் - பாண் சாதியார்.
பால் - பகுதி ; பிரிவு.
பாவேந்தர் - புலவர்.
பித்திகை - ஜாதிப்பூ.
பிரதேசம் - இடம்.
பிடிகை - ஆசனம்.
பிடிகைமறுகு - கடைத்தெரு.
பிலி - மயிற் பீலி.
புகார்-காவிரிப்பூம் பட்டினம்.
புடைத்து - அடித்து.
புரப்பார் - காப்பவர்.
புரிபவன் - செய்பவன்.
புலர்த்தி - உலரச்செய்து.
புழுக்கல் - சோறு.
புறநெறி - பிறவழி.
புன்முறுவல் - குறுஞ்சிரிப்பு.
பூத சதுக்கம் - பூதர் திரியும் நாற்சந்தி.
பூதி - புழுதி.
பூர்வோத்தரம்-(பூர்வ உத்தரம்) முன்பின் வரலாறுகள்.
பெய்வளை- தொடிக்கவளையலை யுடையவள்.
பேழை - பெட்டி.
பேறு - நன்மை.
போதிகள் - மூட்டைகள்.
பொருமுக எழினி - இரண்டு பிரிவாயிருந்து எதிரெதிராக வந்து கூடும் திரை.
பொலிவு - அழகு.
பொழிலாட்டயர்ந்து - சோலையில் பூக்கொய்தல், ஊசலாடுதல் முதலிய விளையாடல்களைச் செய்து.
பொறி - முத்திரை.
பொறித்தல் - எழுதுதல்.
போதரும் - தோன்றும்.
போதி - அரசமரம்.
மகரயாழ்-மகரவடிவாயமைந்த யாழ்.
மஞ்சாடி - இரண்டு குன்றி மணியின் எடையுள்ளது.
மடவார் - பெண்கள்.
மடிவு - சோம்பல்.
மதுராந்தகன் - மதுரைக்கு எமன் போன்றவன்.

மதுரைக்காஞ்சி - பத்துப் பாட்டுள் ஒன்று.
மயங்கும் - கலந்திருக்கும்.
மரபின் - முறைப்படி.
மருதம் - மருத நிலமென்னும் அரசன்.
மருதவேலி - மருதநிலம்.
மருத்துவர் - அச்சுவினித் தேவதைகள், வைத்தியர்.
மள்ளர் - உழவர்.
மறுகு - வீதி.
மன்னிய - பொருந்திய.
மாகதர் - வீரம் முதலியவற்றைப் புகழ்வோர்.
மாயோன் - திருமால்.
மாரன் - மன்மதன்.
மாழ்கினன் - வருந்தினான்.
மாறன் - பாண்டியன்.
மாறு - மாறுபாடு.
மாற்றார் - பகைவர்.
மானவேல் - பெருமையுடைய வேல்.
மான்மதம் - கஸ்தூரி.
முகை - அரும்பு.
முடங்கல் - ஓலை.
முடுக்கு - குறுகிய தெரு.
முதலாழ்வார் - பொய்கை, பூதன், பேய் என்னும் இவ்வாழ்வார்கள்.
முத்தமிழ் - முத்தமிழுக்கு.
முந்துற - முற்பட.
முழவு - மத்தளம்.
முறுவல் பூத்து - புன்சிரிப்புக் கொண்டு.
மைந்நிண விலைஞர் - ஆட்டிறைச்சி விற்போர்.
மொழி அமைப்பு - சொல்லின் அமைதி.
மோதகம் - உருண்டைவடிவமாகிய பணியாரம்.
வகுத்த - எழுதிய.
வசுக்கள் - அனலன், அனிலன், ஆபச்சைவன், சோமன், தரன், துருவன், பிரத்தியூசன், பிரபாசன் என்னும் அஷ்ட வசுக்களாவார்.
வடு இலா - குற்றமில்லாத.
வதிந்து - தங்கி.
வயங்கி - விளக்கமுற்று.
வரையாது - அளவில்லாமல்.
வல்லுநர் - தேர்ச்சியுள்ளவர்.
வழக்காறு - வழங்கிவருவது.
வறிதே - வீணாகவே.
வன்கணாளர் - கொடியவர்.
வாசவர் - தக்கோலம் முதலிய பஞ்சவாசம் விற்போர்.
வாசவன் - இந்திரன்.
வாரம் இரண்டு - ஓரொற்று வாரம் ஈரொற்று வாரம் என்னுஞ்செய்யுள்; அவை, தாளத்தில் ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் பெற்று வரும்.

வான்நக்கபூண் - தெய்வலோகத்தையும் சிரிக்கத்தக்க மேன்மையினையுடைய அரமனை.

விண்மீன் - நட்சத்திரம்.

வியப்பு - ஆச்சரியம்.

விரைப்பொருள் - வாசனைப் பொருள்.

விழுக்கு - நிணம்.

விறு - பேய்பாடு.

வேதிர்நெல் - மூங்கில் நெல்.

வெய்துயிர்த்தல் - பெருமூச்சு விடுதல்.

வெள்ளிடை மன்றம் - வெளியான இடத்தையுடைய மன்றம்; இது, காவிரிப்பூம் பட்டினத்திலுள்ள ஐந்து மன்றத்துள் ஒன்று.

வேலை - கடற் கரை.

வையத்து - பூமியில்.

Printed at the 'Tamil Kadal' Press, San Thome, Madras.